www.padippakam.com

1 - 15 மார்ச் '92

ரூ. 2.50

'ஜெ'-யின் கிரிமினல் அரசியல்

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



## பாவம் தீர மகாமக நரபலி

படிப்பகம்

www.padippakam.com

# போலீசு அக்கிரமம்

## "தராசு" ஏட்டின் யோக்கியதை!



கிசுகிசு பத்திரிகை "தராசு" வார இதழுக்கு அதன் வாசகர் ஒருவர் தனக்கு போலீசால் இழைக்கப்பட்ட அநீதியை எழுதி, பத்திரிக்கையில் வெளியிடுமாறு கோரினார். அதன் சுருக்கம் இது.

திருப்பத்தூர் தாலுகா குரிசிலாப்பட்டு கிராமத்தில் நெடுஞ்சாலை அருகே ஜி.குபேந்திரன் என்கிற நான் பட்டா நிலத்தில் குடியிருந்து வருகிறேன். என் வீட்டிற்கு மேற்கு புறத்தில் புறம்போக்கு நிலத்தில் அப்பாவு என்கின்ற முனுசாமியின் வீடும் டீ கடையும் உள்ளது. அவர் 31.3.90 அன்று திடீரென எனது வீட்டு வாசற்படியை மறைத்து குளியலறை ஒன்று கட்டினார். நான் அதை தடுத்தபோது அவரும் அவரது உறவினர்களும் சேர்ந்து என்னை தாக்கினர். குரிசிலாப்பட்டு போலீசு நிலையத்தில் நான் கொடுத்த புகாரை "ஏட்டு" கோடீஸ்வரன் வாங்க மறுத்ததோடு எஸ்.ஐ.யும் சந்திக்க விட மறுத்துவிட்டார். நான் மன்றாடி கேட்டுக் கொண்டபின் புகாரை வாங்கிய கோடீஸ்வரன் என்னையும் முனுசாமியையும் வைத்து பேசினார். "முனுசாமி எனக்கு மிகவும் வேண்டப்பட்டவர்: எனக்கு குடிப்பதற்கு இலவசமாக மது வாங்கித் தருவார்: அவசரத் தேவைக்கு பணம் கொடுத்து உதவுவார்: உடற்பசிக்காக இரவில் பெண்களை ஏற்பாடு செய்தும் தருகிறார்" என்று கூறி புகாரை மேலிடத்திற்கு அனுப்பக்கூடாது: அனுப்பினால் உன் வாழ்க்கையையே நாசமாக்கி விடுவேன் என மிரட்டினார். முனுசாமியும் "ஏட்டு, எஸ்.ஐ. சபாபதி எல்லோரும் என் அடிமைகள். உன்னால் ஒன்றும் செய்ய முடியாது: உன் குடும்பத்தையே ஒழிக்காமல் நான் ஓயப்போவதில்லை" என மிரட்டினார்.

31.3.90, 12.5.90, 26.12.90 5.1.'91 ஆகிய தேதிகளில் அரசு மற்றும் போலீசு உயர் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பினேன். திடீரென்று 11.2.91 அன்று டி.எஸ்.பி. மற்றும் ஆய்வாளர் ஆகிய இருவரும் குரிசிலாப்பட்டு போலீசு நிலையத்திற்கு வந்து என்னை அழைத்து முனுசாமி மற்றும் ஏட்டு கோடீஸ்வரனுக்கு சாதகமாகப் பேசிவிட்டு மிரட்டிவிட்டு சென்றனர். அதன்பிறகு, "எஸ்.பி., டி.எஸ்.பி. ஆய்வாளர் ஆகியோருக்கு கொடுப்பதை கொடுத்து சரிசெய்து விட்டேன்: எங்கள் துறையில் உயர் அதிகாரிகள் முதல் கீழ்மட்டம் வரை லஞ்சம் வாங்காதவர்கள் யாருமே இல்லை. போலீசு துறையில் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்க மாட்டோம். என்னை ஒன்றும் செய்ய முடியாது. கூடிய விரைவில் நான் பதவி உயர்வு பெற்று மாற்றலாகப் போகிறேன். அதற்குள் உன்னை ஒரு கை பார்க்காமல் விடமாட்டேன்" என்று சூளுரைத்தார் கோடீஸ்வரன்.

மேலும் 3.5.91 அன்று எஸ்.பி. அலுவலக ஆய்வாளர் ஒருவர் வந்து என்னை அழைத்து விசாரணை நடத்தினார். இவரும் அரைகுறையாக கேட்டுவிட்டு தலைகீழாக மாற்றி, கோடீஸ்வரனுக்குச் சாதகமாக குறிப்பெடுத்துக் கொண்டு என்னை பிரச்சினை பண்ணாமல் விட்டுவிடும்படி கூறிவிட்டுச் சென்றார். பிறகு கோடீஸ்வரன், "இப்பொழுதாவது போலீசு துறையை புரிந்துகொள்ளடா மடையா: பொய்யை உண்மையாக மாற்றவும், உண்மையை பொய்யாக்கவும் எங்களால் முடியும். எங்களுக்கு அதிகாரம் உள்ள வரையிலும் எந்த பத்திரிகை ஆசிரியராலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது" என்று ஆணவத்தோடு பேசினார்.

பிரச்சினை உருவான நாள் முதல் எனது வீட்டு வாசற்படி அடைக்கப்பட்டு வழியில்லாததால் எனது மாட்டுக் கொட்டகையில் குடியிருந்து வருகிறேன். அன்றிலிருந்து வீட்டில் விளக்குகூட எரியாமல் இருட்டாகவே கிடக்கிறது. முனுசாமி வீட்டு குளியலறை தண்ணீரால் என் வீடு பாதிக்கப்பட்டு இடிந்து விழுந்துவிடும் போலிருக்கிறது. என் உயிருக்கும் ஆபத்தான நிலையில் எதிரிகளால் தாக்கப்படலாம் என்ற நிலையில் அன்றாடம் செத்துக் கொண்டுள்ளேன். இதுவரை பலவகை புகார் மனுக்கள் மூலம் போராடியும் பயனில்லாததால் என்நிலையை விளக்கியும் போலீசின் அக்கிரமத்தை - கொடுமையை விளக்கியும் துண்டு பிரசுரம் விநியோகித்து உண்ணாவிரதம் இருந்து நியாயம் கேட்கப் போகிறேன். மேலும் நாட்டிலுள்ள மக்களுக்கு தெரியும் வண்ணம் "தராசு" இதழில் இதனை பிரசுரம் செய்து தர்மதுரையாகிய நீங்கள் (தராசு ஆசிரியர் ஷ்யாம்) நீதிகிடைக்க உதவுமாறு சிரம் தாழ்த்தி கரம்கூப்பி கேட்டுக் கொள்கின்றேன்.

மேற்கண்ட 'தராசு' வாசகர் குபேந்திரனின் கடிதம் - புகார் மனு 90-ம் வருடமே 'தராசு'க்கு அனுப்பப்பட்டது "இப்படி ஒரு கடிதம் கிடைத்ததும் நாம் காமிரா சகிதம் குரிசிலாப்பட்டு கிராமப் புல்தரையில் கால் பதித்தோம். நம்மை கண்ணீரோடு வரவேற்ற குபேந்திரனோடு உண்மையை கண்டறிய புறப்பட்டோம். போலீசு உண்மையை அறியவிடாமல் செய்த சதிகளையெல்லாம் முறியடித்து துணிச்சலுடன் நாம் சேகரித்த பரபரப்பு - கண்ணீர் கதை இது" என வழக்கம்போல் பீற்றிக்கொண்டு, தொடை தட்டிக் கொண்டு 'தராசு' செய்தி வெளியிடவில்லை. மாறாக குபேந்திரனின் மனுவுடன் 3.6.90 அன்று போலீசு உயர் அதிகாரிக்கு விசுவாசமாக நடவடிக்கை எடுத்து நீதி வழங்கும்படி கோரி ஒரு மனுவை இணைத்து அனுப்பினார், ஷ்யாம். அதன் பிறகுதான், "எந்த பத்திரிகை ஆசிரியராலும் எங்களை ஒன்றும் புடுங்க முடியாது" என குரிசிலாப்பட்டு ஏட்டு வசனம் பேசியிருக்கிறார்.

ஒரு வருடம் கழித்து அதாவது 8.3.91 அன்று 'தராசு' ஆசிரியர் ஷ்யாம், குபேந்திரனுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம், அரசியல் கட்சிகளின் பந்த், தமிழக அரசியல் மாற்றங்கள் ஆகியவை காரணமாக தொடர்புகொள்ள காலதாமதமாகிவிட்டது என்றும் தற்போது பிரச்சினை எந்நிலையில் உள்ளது, நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்க்கப்பட்டு விட்டதா என கேட்டும், இத்தகைய சிரமத்திற்கு நாங்கள் பொறுப்பல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார். எவ்வளவு பொறுப்பான பதில் பாருங்கள்?! சாதாரண மாமியார் மருமகள் சண்டை, அண்ணன் தம்பி வரப்புத் தகராறு, ஊர்த் தகராறு, குழாயடிச் சண்டையை எல்லாம் பக்கம்பக்கமாக 'டிடெக்டிவ் ஸ்டோரி'யாக தீட்டும் 'தராசி'ற்கு மேற்கண்ட சம்பவம் சாதாரணமாக - நான்காம் பட்சம், ஐந்தாம்பட்சமாகத் தெரிந்திருக்கிறது. தமிழ்நாட்டு அரசியல், பகுதி பிரச்சினைகள், அற்ப விஷயங்கள், மக்களிடையே நிலவும் தகராறுகள், மோதல்கள் போன்றவற்றிலேயே தனது வாசகரின் அரசியல் தரத்தை தமிழக கிசுகிசு அரசியல் ஏடுகள் நிலைநிறுத்திக் கொள்கின்றன. அதில்கூட அவற்றின் நேர்மையும், பத்திரிக்கை தர்மமும், துணிச்சலும், சவடாலும் வெற்று ஆரவாரமாகவே இருக்கின்றன.

தகவல்: குபேந்திரன்,

### அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

தவிர்க்கவியலாத காரணங்களால் 16 - 29 பிப்ரவரி இதழ் வெளிவருவது தாமதப்பட்டதால் 1 - 15 மார்ச் இதழையும் சேர்த்து கூடுதல் பக்கங்களுடன் இவ்விதழை வெளியிட்டுள்ளோம். சென்ற இதழ் வராததையொட்டி தங்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு மிகவும் வருந்துகிறோம். - ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஏழாம் ஆண்டு

**7 - 8**

1-15 மார்ச் '92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்:
*(வான் அஞ்சலில்)*
ஆண்டு சந்தா: US$15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்



இரா.சண்முகராசு,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4,சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.


# தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக பார்ப்பன, பனியா-பாசிசத் தாக்குதல்

சர்வதேச நிதி நிறுவனம் (ஐ.எம்.எ:ப்), உலகவங்கி மற்றும் சர்வதேச சுங்கவரி மற்றும் வரிப் பொது ஒப்பந்தம் (காட்) ஆகிய ஏகாதிபத்திய நிறுவனங்களின் கட்டளைகளை ஏற்று இந்த நாட்டின் சுயாதிபத்திய உரிமைகளை மறு அடகு வைப்பதன் விளைவாக ஏற்படும் நெருக்கடிகளின் சுமை முழுவதையும் பரந்துபட்ட மக்கள் மீது, குறிப்பாக உழைக்கும் மக்கள் மீது திணிப்பதற்கான தீவிர முயற்சியில் நாட்டை ஆளும் பார்ப்பன, பனியா-பாசிச கும்பல் ஈடுபட்டுள்ளது.

இதைப் பகிரங்கமாகப் பிரகடனப் படுத்துவதாகத்தான் அரசுத்தலைவர் வெங்கட்ராமனுடைய 'குடியரசு தின' உரை அமைந்துள்ளதே தவிர, அது வழக்கமான சடங்காக அமையவில்லை. "தனிநபர்கள், அரசியல் அமைப்புகள், பணியாளர் குழுக்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவை எடுத்தவுடனே கிளர்ச்சி மற்றும் தடைப்படுத்தும் பாதையில் இறங்கிவிடுகின்றனர்" என்று உழைக்கும் மக்கள் மீது அவதூறு பொழிந்தார் வெங்கடராமன். "எல்லா பொது அடைப்புகள், வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், மற்றும் பணிவேகக் குறைப்பு, விதிப்படிவேலை போன்ற செயல்களைத் தாமே முன்வந்து இரண்டு ஆண்டுகளுக்காவது கைவிட வேண்டும். இதை ஏற்றுக் கொள்வது அவரவர் குழந்தைகளுக்கும் சந்ததிகளுக்கும் ஆற்றும் கடமைப் பணியாகும்; ஏனெனில் நாடு இப்போது கடுமையான பொருளாதார-நிதி நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கிறது" என்று வலியுறுத்தினார்.

உடனடியாகவே டாடா, பிர்லா போன்ற இந்தியத் தரகு அதிகார முதலாளிகளும் அவர்களது சங்கங்களின் தலைவர்களான தீபக் கைத்தான், பாங்கூர் போன்றவர்களும் பார்ப்பன-பனியா பத்திரிக்கைகளும் இதைப் பாராட்டி வரவேற்றனர். ஆனால் அரசுத் தலைவரின் உரைக்குப் பதிலடி கொடுக்கும் முகமாக அடுத்த சில நாட்களிலேயே மேற்கு வங்க சணல் ஆலைத் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இந்திய அரசின் புதிய பொருளாதார - தொழிற்கொள்கையை வெளிப்படையாக எதிர்ப்பு நாடகமாடிவிட்டு, இரகசியமாக முழு ஆதரவு தருபவைதான் ஓட்டுக் கட்சிகள் மற்றும் அவற்றின் தொழிற் சங்கங்களின் நிலைப்பாடு. இதேபோலத்தான் அரசுத் தலைவரின் உரைக்கும் அச்சங்கங்கள் மலட்டுத்தனமான எதிர்ப்பைக் காட்டின.

அடுத்த சில நாட்களிலேயே தொழிலாளர் துறை மந்திரிகளின் மாநாடு கூட்டி "மருத்துவர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களின் வேலை நிறுத்தங்களுக்குத் தடை விதிக்க வேண்டும்" என்கிற பொதுக் கருத்தை உருவாக்கினார். போலிக் கம்யூனிஸ்டு மந்திரி இதற்கு வெறும் முணுமுணுப்பையே காட்டினார். ஏற்கனவே அத்தியாவசியப் பணித்துறைச் சட்டம் உள்ளது; போராடும் ஒவ்வொரு பிரிவையும் அத்தியாவசியப் பணித்துறை என்று அறிவித்து, சங்கத் தலைவர்கள் கருப்புச் சட்டங்களின் கீழ் அடைக்கப்படுகின்றனர். இப்போது வேலை நிறுத்தத் தடையைத் தீவிர விதியாக்கி முதலில் மருத்துவர், ஆசிரியரைத் துவங்கி அடுத்தடுத்து அனைத்துத் துறைக்கும் விரிவுபடுத்த முயலுகிறார்கள்.

ஏகாதிபத்திய நிறுவனங்களின் கட்டளைகளை ஏற்று அரசுத் துறைத் தொழில்களைத் தனியாரிடம் ஒப்படைப்பது, நலிவுற்ற ஆலைகளை மூடிவிடுவது, "ஆட்குறைப்பு-சிக்கன" நடவடிக்கை போன்றவற்றால் லட்சக் கணக்கான தொழிலாளர்களும் பிற ஊழியர்களும் வேலை இழக்கப் போகிறார்கள். இதற்கு ஏற்ப ஏகபோகத் தடைச் சட்டத்தின் கீழ் அரசுத் துறையைக் கொண்டு வரவும், நலிவுற்ற ஆலைகளை மூடவும் சட்டங்களை சமீபத்தில் நிறைவேற்றியுள்ளது, மத்திய அரசு. இவற்றை அமுல்படுத்தினால் வேலை இழப்போருக்கு ஈடு செய்வதற்காக "தேசிய நிவாரண நிதியம்" ஒன்றை அமைக்கவும் ஏற்பாடு செய்துள்ளது. உலக வங்கியும் ஐ.எம்.எ:ப்பும் இதற்காக 1500 கோடி ரூபாய்க்கு மேல் மானியம் வழங்கத் தீர்மானித்துவிட்டன. இந்த ஏற்பாட்டைப் பற்றி விவாதித்த அனைத்துத் தொழிற் சங்கங்களின் மாநாடு, அதை நிராகரித்துவிட்டன. ஆனால் மத்திய அரசு ஒருதலைப்பட்சமாக "தேசிய நிவாரண நிதியம்" அமைப்பதாக அறிவித்துவிட்டது. ஆக, லட்சக் கணக்கான தொழிலாளர்கள், ஊழியர்களை வேலையைவிட்டு விரட்டுவதற்கான தயாரிப்புகள் முடிந்து விட்டன.

இவர்கள் மட்டுமல்ல; எஞ்சியிருக்கும் தொழிலாளர்கள், ஊழியர்கள், அரசு அலுவலர்களையும் இந்த அரசு நிம்மதியாக விட்டுவைக்காது. வேலைப் பளுவைக் கூட்டுவதோடு சம்பள வெட்டு, பஞ்சப்படி முடக்கம் போன்ற 'அவசர கால நிலை' நடவடிக்கைகளை இவர்களுக்கும் எதிராக எடுக்க உள்ளது. இந்த அரசின் புதிய பொருளாதார-தொழிற் கொள்கைகளுக்கு எதிராகக் கடந்த அக்டோபரில் பொது வேலை நிறுத்தம் நடந்தபோதும் அதற்குப் பின்னரும் அக்கொள்கைகளால் தொழிலாளர் நலன்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்று இந்த அரசு திரும்பத் திரும்ப வாக்குறுதி அளித்தது. ஆனால் அது அப்பட்டமான பொய்யென இப்போது நிருபணமாகி வருகிறது. இந்தப் பார்ப்பன, பனியா-பாசிசக் கும்பலோடு ஓட்டுக்கட்சிகள் மற்றும் அவற்றின் தலைமையிலான தொழிற்சங்கங்கள் கள்ளக் கூட்டுச் சேர்ந்துள்ளன. வெறும் சடங்குப் பூர்வமாகவும் தொழிலாளர்களை ஏய்க்கவும் மட்டுமே அக்கும்பலின் கொள்கைகளை எதிர்க்கின்றன. எனவே, அத்தலைமையை முற்றாக நிராகரித்துவிட்டு, பார்ப்பன, பனியா-பாசிசக் கும்பலுக்கு எதிரான தாக்குதல் தொடுக்கும் புரட்சிகர இயக்கத்தின் முன்னணிப் படையாகத் தொழிலாளி வர்க்கம் அணிதிரள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

## பஞ்சாப் தேர்தல்:

# இராணுவமே நடத்திய ஜனநாயக நாடகம்

**அகாலி கட்சிகளும் பெருவாரியான சீக்கிய மக்களும் தேர்தலைப் புறக்கணித்துவிட்ட நிலையில், இராணுவத்தின் துணையுடன் துப்பாக்கி முனையில் மோசடித் தேர்தலை நடத்தி, அற்ப அளவுக்கே வாக்குகளைப் பெற்றுள்ள காங்கிரசுக் கும்பல் பஞ்சாபில் ஆட்சியைப் பிடித்துள்ளது. பஞ்சாபில் ஜனநாயகத்தை நிலைநாட்டி விட்டதாக நாடகமாடிக் கொண்டு இப்பொம்மை அரசின் மூலம் அரசு பயங்கரவாதத்தைத் தீவிரப்படுத்துவதற்கான ஏற்பாடுதான் இது.**

அரசு பயங்கரவாதத்தாலும் சீக்கிய மதவெறி பயங்கர வாதத்தாலும் ரணகள மாக்கப்பட்ட பஞ்சாபின் நிலைமை வேதனைக்குரியதாக இருக்கிறது. எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றியதுபோல், தனது குறுகிய ஆதாயத்துக்காக பஞ்சாபில் தேர்தல் நடத்தி சீக்கிய பயங்கரவாதத்தை பாசிச காங்கிரசு மேலும் கிளறிவிட்டுள்ளது.

கடந்த நாலரை ஆண்டுகளாக அரசு பயங்கரவாத் அடக்குமுறையை ஏவி பஞ்சாப் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுத்துவந்த டெல்லி ஆட்சியாளர்கள் கடைசியாக, கடந்த 1991 ஜூலையில் பஞ்சாபில் தேர்தல் நடத்தப் போவதாக அறிவித்தனர். சீக்கியத் தீவிரவாதிகளுடன் அகாலிகள் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்றத்திலேயே பஞ்சாபை தனிநாடாக்க தீர்மானம் கொண்டுவர ரகசியமாக முயற்சிக்கிறார்கள் என்று கூறி தேர்தலைப் புறக்கணித்த காங்கிரசார், கடைசி நேரத்தில் தேர்தலையே ரத்து செய்தனர். இப்போதைய தேர்தலில் 6 முக்கிய அகாலி கட்சிகளும் இரு மாணவர் அமைப்புகளும் தேர்தலைப் புறக்கணிக்கும் போது, காங்கிரசும் இதர 'தேசிய'க் கட்சிகளும் இத்தேர்தலில் பங்கேற்று துப்பாக்கி முனையுடன் 'ஜனநாயகத்தை' மீட்கக் கிளம்பியுள்ளன.

இத்தனை காலமாக தேர்தலே நடத்தாமல் பஞ்சாப் மக்களைப் புறக்கணித்து வந்த காங்கிரசு ஆட்சியாளர் இப்போது பஞ்சாப் மீது திடீர் கரிசனையுடன் தேர்தல் நடத்த காரணம் இல்லாமலில்லை. **முதலாவதாக,** பஞ்சாபில் நிலவும் அரசு பயங்கரவாத அடக்குமுறை உலக மக்களிடம் அம்பலப்பட்டு இந்திய அரசு தனிமைப்பட்டுப் போயுள்ளது. இதை சாதகமாக்கிக் கொண்டு பஞ்சாபில் மனித உரிமை மீறப்பட்டுள்ளதாகக் கூறி, தனது கடுமையான பொருளாதார நிர்ப்பந்தங்களுக்கு இந்தியாவைப் பணிய வைக்க ஒரு கருவியாக அமெரிக்கா பயன்படுத்துகிறது. அமெரிக்காவின் கருணையைப் பெற, பஞ்சாபில் தேர்தல் நடத்தி ஜனநாயக நாடகமாடவே இந்தியா துடிக்கிறது.

**இரண்டாவதாக,** அகாலி குழுக்களுக்கிடையே சீர்குலைவை ஏற்படுத்தி, அமரிந்தர் சிங் தலைமையிலான அகாலிதள (காபுல் பிரிவு) குழுவை காங்கிரசு விலைபேசி விட்டது. சீக்கிய தீவிரவாதத்தை எதிர்ப்பது என்ற பெயரில் இதர 'தேசிய' கட்சிகளும் காங்கிரசுக்கு அனுசரணையாக நடந்து கொள்கின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு பொம்மை அரசை நிறுவி, அரசு பயங்கரவாதத்தை சட்டபூர்வமாகவே தொடருவதற்கு காங்கிரசுக்கு தேர்தல் அவசியமாக உள்ளது. **மூன்றாவதாக,** சிறுபான்மை நரசிம்மராவ் அரசுக்கு ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள கணிசமான காங்கிரசு எம்.பி.க்கள் தேவையாக உள்ளது. பஞ்சாபில் தேர்தல் நடத்துவதன் மூலம் அதை ஈடுசெய்ய முடியும் என்று அது கணக்கு போடுகிறது.

இத்தேர்தல் மூலம் பஞ்சாபில் அமைதியை நிலைநாட்ட முயற்சிப்பதாகவும், தேர்ந்தெடுக்கப்படும் புதிய அரசு மூலம் பஞ்சாபுக்கான உதவித் திட்டங்களை நிறைவேற்றப் போவதாகவும் காங்கிரசு மாய்மாலம் செய்கிறது. பஞ்சாப் மக்கள் நீண்ட காலமாகக் கோரி வந்த சமூக-பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கான எந்த அறிவிப்பையும் மத்திய அரசு இதுவரை வெளியிடவில்லை. ராஜீவ் - லோங்கோவால் ஒப்பந்தமும் நிறைவேற்றப்படவில்லை. ரவி -பியாஸ் நதிநீர் பங்கீடு, அரியானா தலைநகராக உள்ள சண்டிகாரை பஞ்சாபுக்கு மாற்றுவது, சட்லஜ் - யமுனை இணைப்பு கால்வாய் திட்டம், பசில்கா - அபோகார் பகுதிகளை அரியானாவுக்கு மாற்றுவது முதலானவையும் தீர்க்கப்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, 1984 இந்திரா படுகொலையை ஒட்டி, சீக்கியர்கள் மீது நடத்தப்பட்ட இன வெறிக் கலவரத்துக்கு காரணமான காங்கிரசு ரௌடிகளை இதுவரை தண்டிக்கவில்லை; பாதிக்கப்பட்ட சீக்கியர்களுக்கு இன்றுவரை எவ்வித நிவாரண உதவியும் செய்யப்படவில்லை.

எனவேதான் மக்கள் விரோத - ஜனநாயக விரோத இத்தேர்தலை இயல்பான ஆத்திரத்தோடு சீக்கிய தீவிரவாதிகள் புறக்கணித்தனர். யாரும் வாக்களிக்கக் கூடாது என்று சீக்கிய மக்களுக்கு அறைகூவல் விடுத்தும், இதை மதக் கட்டளையாக நிறைவேற்றியும், அகாலி குழுக்களை முன்நிறுத்தி தேர்தல் புறக்கணிப்பு பேரணிகளையும் சீக்கிய தீவிரவாதிகள் நடத்தினர். தேர்தல் நாளான பிப்ரவரி 19-க்கு முதல் நாளிலிருந்தே 48 மணி நேர பந்த் நடத்துமாறும் கோரினர். இதனால் பீதியடைந்த ஆட்சியாளர்கள், தேர்தல் பணிகளை தடுக்க முயற்சித்ததாகவும், அரசு விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டி தேர்தல் புறக்கணிப்பு பேரணி நடத்திய டோரா, பாதல், மான், தல்வாண்டி ஆகிய அகாலி குழுக்களின் தலைவர்களையும், முன்னணியாளர்களையும் கொடிய ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர். ஏற்கனவே 9 டிவிசன் ராணுவப் படைகள் பஞ்சாபில் குவிக்கப்பட்டுள்ளது போதாது என்று மேலும் 6 படைப்பிரிவுகளையும், 40 பட்டாலியன் எல்லைப் பாதுகாப்புப் படையையும், 60 பட்டாலியன் மத்திய ரிசர்வ் போலீசுப் படையையும் இதுதவிர 50,000 போலீசார் மற்றும் 25,000 காவற்சேவகர்களையும் பஞ்சாபில் குவித்து துப்பாக்கி முனையில் இத்தேர்தலை நடத்துகிறது, ஆளும் கும்பல்.

சீக்கியர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள அகாலி குழுக்கள் தேர்தலைப் புறக்கணித்துவிட்ட நிலையில், ஒரு சில தொகுதிகளில் மட்டும் அற்ப அளவு செல்வாக்குள்ள 'தேசிய'க் கட்சிகளான காங்கிரசு, பாரதீய ஜனதா, ஜனதா தளம், 'இடது', வலது போலிக் கம்யூனிஸ்டுகள் ஆகியோரும், துரோகக் கும்பலான அகாலிதள காபுல் பிரிவும், அம்பேத்கார் பெயரால் பிழைப்பு நடத்தும் பகுஜன் சமாஜ் கட்சியும் மட்டுமே தேர்தல் களத்தில் நின்றன. இத்தனை நாளும் காங்கிரசு எதிர்ப்பு நாடகமாடிய அமரிந்தர் சிங்கின் அகாலிதள காபுல் பிரிவு இப்போது காங்கிரசின் கைக்கூலியாகச் செயல்பட்டுக் கொண்டு தனது துரோகத்தனத்தை நிரூபித்துக் காட்டியது. 13 நாடாளுமன்றத் தொகுதிக்கும் 117 சட்டமன்றத் தொகுதிக்கும் மொத்தம் 1104 பேர்தான் வேட்பாளர்களாக உள்ளனர். பஞ்சாபின் வரலாறு காணாத மிகக் குறைந்த வேட்பாளர்களைக் கொண்ட தேர்தல் இதுதான்!

**இம்மோசடித் தேர்தலில் ஜோகர் தொகுதியில் உள்ள 1,00,111 வாக்காளர்களில் 1,072 பேர்தான் வாக்களித்தனர். அதில் 743 வாக்குகளைப் பெற்று காங்கிரசு வேட்பாளர் வெற்றி பெற்றார். இப்படித்தான் அனைத்து தொகுதிகளிலும் மொத்தத்தில் 9% வாக்குகளையே பெற்று 87 தொகுதிகளில் வெற்றி பெற்று 'அறுதிப் பெரும்பான்மை' யுடன் காங்கிரசு ஆட்சி அமைத்துள்ளது.**

படிப்பகம்

www.padippakam.com

அவர்களும்கூட சுதந்திரமாக தேர்தல் பிரச்சாரம் செய்ய முடியவில்லை. 14 கிலோ எடையுள்ள துப்பாக்கி துளைக்காத "கோட்டு" அணிந்துகொண்டு 32 பேர் கொண்ட பாதுகாப்புப் படையினர் புடைசூழ மக்களை நெருங்கி விடாமல்தான் பிரச்சாரம் செய்தனர். அதிலும் தீவிரவாதிகள் பலமாக உள்ள கிராமப்புற பகுதிகளைத் தவிர்த்து நகர்ப்புறங்களில் மட்டும்தான் தேர்தல் பிரச்சாரம் செய்ய முடிந்தது. தங்கள் தொகுதியில் யார் வேட்பாளராக நிற்கிறார் என்றுகூட பஞ்சாப் மக்களுக்குத் தெரியாத நிலை. கடைசியில் வேட்பாளருமில்லை; தேர்தல் பிரச்சாரமும் இல்லை; பஞ்சாப் மக்களும் சுதந்திரமாக வாக்களிக்கும் நிலையில் இல்லை. போதாக்குறைக்கு, காங்கிரசுக்கு ஆதரவாக போலீசும் ராணுவமும் இதர கட்சி வேட்பாளர்களையும் சுயேட்சைகளையும் வேட்பு மனு தாக்கல் செய்யக்கூட விடாமல் தடுத்துள்ளன.

இதிலே கொடுமை என்னவென்றால், இம்மோசடித் தேர்தலில் 'தேசிய'க் கட்சிகள் அனைத்தும் சீக்கிய தீவிரவாதத்தை எதிர்ப்பது என்ற பெயரில் கள்ளக்கூட்டு சேர்ந்து கொண்டும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும் கபட நாடகமாடின. குறிப்பிட்ட தொகுதியில் குறிப்பிட்ட கட்சியை வெற்றி பெற வைக்க மற்றவர்கள் போட்டியிலிருந்து விலகிக் கொள்வது. அல்லது பலவீனமான வேட்பாளர்களை நிறுத்துவது என்று எழுதப்படாத ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன.

இதன்படி அகாலிதள காபுல் பிரிவின் தலைவரான அம்ரிந்தர்சிங், பாட்டியாலா மாவட்டத்திலுள்ள சமனா தொகுதியிலிந்து போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார். காங்கிரசு கட்சியின் தரண்தரண் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தில்பக் சிங்கும், பனுவான் தொகுதியின் ஜக்பீர்சிங்கும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதேபோல 'மார்க்சிஸ்ட்' கட்சி வேட்பாளர்கள் போட்டியிடும் ஜலந்தர், ஹோஷியாபூர் மாவட்டங்களில் எதிர்க்கட்சிகள் பலவீனமான வேட்பாளர்களை நிறுத்தின. வலது கம்யூனிஸ்டுகள் அமிர்தசரஸ், பதிந்தா தொகுதிகளிலும், பாரதீய ஜனதா ஜலந்தர், லூதியானா மாவட்டங்களிலும் வெற்றி பெற ஏதுவாக எதிர்க்கட்சிகள் பலவீனமான வேட்பாளர்களை நிறுத்தின. இத்தகைய ரகசிய உடன்பாட்டுக்காக மத்திய மந்திரி ராஜேஷ் பைலட் பஞ்சாபுக்கு வந்து பேரங்களை நடத்தினார். 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பொதுச் செயலாளரான சுர்ஜித், இதற்காக புரோக்கர் வேலை செய்தார்.

'தேசிய'க் கட்சிகள் இப்படி கள்ளக் கூட்டு சேர்ந்து கொண்டாலும், தீவிரவாதிகள் விடுத்துள்ள தேர்தல் புறக்கணிப்பு அறைகூவலின் காரணமாக நகர்ப்புறங்களில், 20-30 சதவீத வாக்குகளே பதிவாகியது; கிராமப் புறங்களில் 2 முதல் 10 சதவீத வாக்குகளே பதிவாயிற்று. அண்மையில் தீவிரவாதிகளால் சில ஆசிரியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதால் அரசின் தேர்தல் பணிகளைச் செய்ய ஆசிரியர்கள் மறுத்துவிட்டனர். இதேபோல அரசு ஊழியர்களில் ஒரு பிரிவினர் மட்டுமே தேர்தல் பணிகளில் ஈடு



குண்டு துளைக்காத கோட்டு அணிந்து போலீசார் புடைசூழ ஓட்டு வேட்டையாடிய பஞ்சாப் வேட்பாளர் - துப்பாக்கி ஜனநாயகம்.

பட்டனர். சுதந்திரமாகவோ ஜனநாயக பூர்வமாகவோ இத்தேர்தல் நடக்கவில்லை என்று முதலாளித்துவ மூதறிஞர்களே ஒப்புக் கொண்ட போதிலும், எப்படியாவது ஒரு பொம்மை அரசை நிறுவுவதிலேயே ஆளுங் காங்கிரசு கும்பல் குறியாக இருந்தது.

இம்மோசடித் தேர்தலில் 'ஜோகர் தொகுதியில் உள்ள 1,00,111 வாக்களர்களில் 1,072 பேர்தான் வாக்களித்தனர். அதில் 743 வாக்குகளைப் பெற்று காங்கிரசு வேட்பாளர் வெற்றி பெற்றார். இப்படித்தான் அனைத்து தொகுதிகளிலும் மொத்தத்தில் 9% வாக்குகளையே பெற்று 87 தொகுதிகளில் வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் காங்கிரசு ஆட்சி அமைத்துள்ளது

முதலமைச்சரான பியாந்த் சிங், சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டி பஞ்சாபில் அமைதியை உருவாக்குவதுதான் எமது அரசின் முதற்பணி என்று அறிவித்துள்ளார். அரசு பயங்கரவாதத்தை தீவிரப்படுத்தி பஞ்சாபை சுடுகாடாக்கி மயான அமைதியை நிலைநாட்டுவதுதான் காங்கிரசின் நோக்கம் என்பதை இது மீண்டும் நிருபித்துள்ளது.

மறுபுறம், தேர்தலைப் புறக்கணிக்கும் அகாலி குழுக்கள் அனைத்தும் சீக்கிய தீவிரவாதிகளுக்குப் பணிந்து செல்பவையாகவே உள்ளன. பஞ்சாப் மக்களின் நியாயமான கோரிக்கைகளை சீக்கிய மதவெறி பயங்கரவாதத்துடன் சேர்த்து தீவிரவாதிகள் ஆதாயமடைவதைத் தடுக்கவோ, மதவெறியர்களை எதிர்க்கவோ திராணியற்றுக் கிடக்கின்றன. இதைச் சாதகமாக்கிக் கொண்டு சீக்கிய தீவிரவாதிகள் இக்குழுக்களை மிரட்டிப் பணிய வைத்து, பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்துக்களை பஞ்சாபிலிருந்து விரட்டிவிட்டு, சீக்கியர்களின் 'காலிஸ்தான'த்தை நிறுவுவது என்கிற நோக்கத்துடன் தீவிரவாதிகள் நடத்தும் அட்டூழியங்களும், மதக் கட்டளையை மீறிவிட்டதாகக் கூறி சீக்கியர்களையே கொன்றொழிப்பதும், அரசு பயங்கரவாதிகளைப் பழிவாங்குவதும் பஞ்சாப் மட்டுமின்றி ஏனைய மாநிலங்களுக்கும், பாரதீய ஜனதா ஆளும் உத்திரப் பிரதேசத்துக்கும் விரிவடைந்து விட்டது.

மறுபுறம் சீக்கிய பயங்கரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் அப்பாவி சீக்கிய இளைஞர்களைச் சுட்டுக் கொல்வது, ரகசிய கொலைக் குழுக்களைக் கட்டி நாசவேலைகளைச் செய்வது என்பதாக அரசு பயங்கரவாதிகள் நடத்தும் அதிக்கிரமங்களால் பஞ்சாப் மாநிலமே சின்னாபின்னப் பட்டுக் கிடக்கிறது. அரசு பயங்கரவாதத்துக்கும் சீக்கிய மதவெறி பயங்கரவாதத்துக்கும் இடையில் சிக்கி அன்றாடம் பஞ்சாபிய மக்கள் கொல்லப்படுகின்றனர். கடந்த பத்தாண்டுகளாகத் தொடரும் இருவகை பயங்கரவாத அடக்குமுறையினால் அவர்கள் தங்கள் வாழ்வையும் நம்பிக்கையையும் இழந்துள்ளனர்.

இந்நிலையில், அரசு பயங்கரவாதத்தை மேலும் தீவிரமாக்குவதன் மூலமோ, அகாலி துரோகக் குழுக்களுடன் பேரம் நடத்தி மீண்டும் ஒரு சமரச ஒப்பந்தத்தைத் திணித்தோ பஞ்சாப் பிரச்சினையைத் தீர்த்து விட முடியாது. ஏனெனில் பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலின் பொருளாதாரக் கொள்கையினால் உருவாக்கி வளர்க்கப்பட்ட நவீனவகை முதலாளித்துவ நிலப்பிரபுக்கள் சீக்கிய மதவெறிக்கான சமூக அடிப்படையாகி விட்டார்கள். அற்பச் சலுகை, அதிகாரப் பகிர்வுடன் அவர்கள் அடங்கிவிட மாட்டார்கள். அதன் விளைவாக, சீக்கிய மதவெறி பயங்கரவாதம் மேலும் தீவிரமடையவே செய்யும்.

பல்வேறு தேசிய இனங்கள், மதப் பிரிவுகள் உள்ள இந்தியா போன்றதொரு நாட்டில் அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை, மதவெறி அமைப்புகளைத் தடைசெய்வது, மத நம்பிக்கைகளை தனிநபர் விவகாரமாக்கி அரசியல் - பொருளாதார வாழ்விலிருந்து துண்டித்து விடுவது ஆகியவை மூலமே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். பாட்டாளி வர்க்கத் தலைமையிலான ஒரு புதிய ஜனநாயக அரசு மட்டுமே இத்தீர்வுகளை முன்வைத்து நடைமுறைப்படுத்த முடியும்.

●பாலன்

www.padippakam.com

# ஜெயா கும்பலின் கிரிமினல் அரசியல்



'ஜெ'-யினால் அனுப்பப்பட்ட புரோக்கர் நாஞ்சில் அப்புவை நையப்புடைத்து போலீஸிடம் ஒப்படைக்கும் தி.மு.க. எம்.எல்.ஏ.

பொறுக்கி அரசியலை உருவாக்கி, நிலைநாட்டி, அதன் உச்ச நிலைக்கு வளர்த்தெடுப்பதில் நாட்டுக்கே முன்னோடியாக விளங்குவது நமது மாநிலம் தான். அதேசமயம் கிரிமினல் அரசியலில் சற்று பின்தங்கி இருந்தது. இந்தக் குறையைத் தீர்த்து வைக்கும் வகையில் தமிழ்நாட்டு அரசியலைக் கிரிமினல் மயமாக்கும் முயற்சியில் முனைப்பாக ஈடுபட்டுள்ளார் பொறுக்கி அரசியலின் நாயகி ஜெயலலிதா. அதன் ஒரு பகுதிதான் எதிர்க்கட்சியான தி.மு.க. மீது பாசிச ஜெயா தொடுத்துள்ள கிரிமினல் தாக்குதல்கள்.

ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களுக்குள்ளாகவே பல்வேறு மக்கள் விரோத நடவடிக்கைகளில் மக்களது வெறுப்புக்கு ஆளாகியிருக்கிறது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். பொதுத் தேர்தல்கள் முடிந்த கையோடு ராஜீவ் கொலை அனுதாபத்தை ஆதாயமாக்கிட மாநகராட்சி, கூட்டுறவுத் தேர்தலை அறிவித்த அக்கும்பல் தோல்வி பயம் தொற்றிக் கொண்டு காவிரிப் பிரச்சினையைக் காரணம் காட்டி தள்ளிப்போட்டு வருகிறது. இந்நிலையில் சென்னை அருகே உள்ள பல்லாவரம்-பரங்கிமலை இராணுவ நகரியத் தேர்தல் வந்தது. அது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் மீதான மக்கள் வெறுப்பை அம்பலப்படுத்திவிடும் என்றஞ்சியது. 30,000 வாக்காளர்களை மட்டுமே கொண்ட நகரியத்தின் ஏழு உறுப்பினர்களுக்கேயான இத்தேர்தலுக்கு மட்டும் மூட்டை மூட்டையாகப் பணத்தைக் கொடுத்து மூன்று மந்திரிகளை களத்திற்கு அனுப்பியது.

அப்படியும் தோல்வி பயம் தீராது இரண்டு ரௌடி எம்.எல்.ஏ.க்களை போலீசு துணையுடன் ஏவி வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொண்டு தாமே முத்திரை குத்தி ஓட்டுப் போடச் செய்தது. தடுக்கப்போன தி.மு.க.வின் முன்னாள், இன்னாள் எம்.எல்.ஏக்கள், நகரிய வேட்பாளர்களை ஆளும் கட்சிக் குண்டர்கள் தாக்கிப் படுகாயப்படுத்தினர். போலீசு இதற்குத் துணையாக இருந்தது. இந்த வெறியாட்டத்திற்குப் பிறகும் நகரியத் தேர்தலில் மூன்று இடங்களை தி.மு.க. வென்றது. தி.மு.க. மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் இது பார்ப்பன-பாசிச ஜெயா கும்பல் மீது மக்களிடையே வளரும் வெறுப்பைக் காட்டியது.

இதற்கு அடுத்த நாள் ''தடா'' சட்டத்தை அரசியல் பழிவாங்கப் பயன்படுத்துவதற்கு எதிராக தி.மு.க. பேரணி நடத்தி கவர்னரிடம் புகார், முறையீடு மனு கொடுத்தது. பல்லாவரம்-பரங்கிமலை இராணுவ நகரியத் தேர்தல் பின்னடைவால் ஆத்திரமுற்றிருந்த பார்ப்பன-பாசிச ஜெயா கும்பல் இப்பேரணி மீது திட்டமிட்ட வெறித்தாக்குதலை நடத்தியது. இப்பேரணியில் ''தடா'' எதிர்ப்பு பிரசுரம் விநியோகித்த மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்கள் நேரிலேயே தி.மு.க. மீதான ஆளும் கட்சி மற்றும் போலீசின் தாக்குதலைக் கண்டனர்.

சைதாப்பேட்டை பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குள் இருந்து கொண்டு ஆளும் கட்சிக் குண்டர்கள் பேரணித் தலைமையை நோக்கிக் கல்லெறிந்தனர். ஆத்திரமுற்ற தி.மு.க. தொண்டர்கள் பணிமனைக்குள் புகுந்து திருப்பித் தாக்க முயன்றது இயல்பானதே. ஆனால் இதையே சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஆளும் கட்சிக் குண்டர்களோடு சேர்ந்து தி.மு.க.காரர்களைத் தாக்கிய போலீசு துப்பாக்கிச் சூடும் நட்த்தியது. மூவர் மீது குண்டு பாய்ந்து ஒருவர் இறந்தும் போனார். தி.மு.க. மீதான தாக்குதலை நியாயப்படுத்துவதற்காக ஆளும் கட்சி குண்டர்களை வைத்தே பல்லவன் பஸ்களையும் அலுவலகத்தையும் நொறுக்கியதோடு மேசை-நாற்காலிகளைச் சாலையில் கொண்டுவந்து போட்டு தீவைத்தனர்.

இதேசமயம், பேரணியின் கடைசிப் பகுதியினரை 20, 30 பேராக மறைமலை அடிகள் பாலத்தின் மீது வளைத்துக் கொண்டு ஆளும் கட்சி குண்டர்களும் போலீசும் அடித்து நொறுக்கி போலீசு வேனில் தூக்கிப் போட்டுக் கொண்டு போனார்கள். இவ்வளவு வெறியாட்டமும் நடத்திவிட்டு அடுத்த நாள் சட்டப் பேரவையில் பேசிய பார்ப்பன ஜெயா தனது நாஜி கோயபல்சு வாய்திறந்து புளுகித் தள்ளினார். நகரியத் தேர்தலிலும், பேரணியிலும் தி.மு.க.-வினர் வன்முறை, நாசவேலையில் ஈடுபட்டதாகவும் ஆளும் கட்சியினரைத் தாக்கிப் பொதுச் சொத்துக்கு நாசம் விளைவித்ததாகவும் அவதூறு பேசினார். இனி இப்படி நடக்காது எனவும், நடந்தால் நட்ட ஈடு தருவதாகவும் கருணாநிதி எழுதிக் கொடுத்தால்தான் தி.மு.க. பேரணிக்கு அனுமதிக்கப்படும் என்று சட்ட விரோத உருட்டல் மிரட்டல் (பிளாக்மெயில்) விட்டார்.

தி.மு.க. பேரணி மீது கொலைவெறித் தாக்குதல் நடத்திய அன்று இரவே தி.மு.க. எம்.எல்.ஏ. பரிதி இளம்வழுதிக்குக் கட்சி மாற பேரம் பேசவும், படியாவிட்டால் கடத்திவரவும் அடியாள் குண்டர்களை பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் ஏவியது. எம்.ஜி.ஆர், ஜெயலதாவுக்கு சினிமா ஒப்பனை செய்தவனும், அரசியல் தரகனுமான நாஞ்சில் அப்பு இதற்காக அனுப்பப்பட்டார் ஜெயா கும்பலுக்கெதிரான ஆதாரமாக ''டேப்''-பில் அந்தப் பேர விவரங்களைப் பதிவு செய்து கொண்டபின் நாஞ்சில் அப்புவைப் பிடித்து நையப்புடைத்து போலீசிடம் ஒப்படைத்தார் பரிதி இளம்வழுதி. மற்ற அடியாட்கள் தப்பியோடிவிட்டனர்.

தி.மு.க. எம்.எல்.ஏ.-வின் புகாரைப் பதிவு செய்து கொண்ட போலீசு இவ்வழக்கிலும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்கு விசுவாசமாக நடந்து கொண்டது. எம்.எல்.ஏ. வீட்டு வழியே போன நாஞ்சில் அப்புவைப் பிடித்து அடைத்துவைத்துத் தாக்கியதாகவும், தப்பி வந்த அவர் முதலில் புகார் கொடுத்ததாகவும் மந்திரி அரங்கநாயகம் அறிக்கையின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்தது. நாஞ்சில் அப்புவை பரிதி இளம்வழுதி தனது வீட்டிலேயே வைத்து போலீசிடம் ஒப்படைக்கும் புகைப்படம், கட்சி மாறுவதற்கு கொழுத்த பணமும், பதவியும் தருவதாக பேரம் பேசியதற்கான ''டேப்'' ஆதாரம் இருந்தும் போலீசு மேற் கண்டவாறு பித்தலாட்டம் செய்தது.

இந்த கிரிமினல் தாக்குதல்கள் குறித்து சட்டப் பேரவையில் பிரச்சினை எழுப்ப முயன்ற தி.மு.க. எம்.எல்.ஏ.-க்கள் வெளியேற்றப்பட்டனர்; பரிதி இளம்வழுதியைக் கூட்டத் தொடர் முழுக்கவும் நீக்கிவைத்தார், ஜெயா அடிமை சேடப்பட்டி.

ஜெயாவின் கிரிமினல் - பாசிச அரசியலுக்கு எதிராக கருணாநிதியின் கடிதச் சவடால்கள், ''அறவழி''ப் போராட்டங்கள் தி.மு.க.-வின் இளைஞர்களை நீண்ட நாட்கள் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியாது. பார்ப்பன பாசிச ஜெயா கும்பலால் முட்டுச்சந்தின் மூலைக்கே தள்ளப்படும் அவர்கள் பிற ஜனநாயக சக்திகளுடன் இணைந்து திருப்பித் தாக்குவதையும் தடுக்கமுடியாது.

படிப்பகம்

www.padippakam.com

## உபதேசம்-உல்லாசம்

# மாண்புமிகுகளின் இரட்டை வாழ்க்கை

‘‘நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருப்பதால், விலைவாசியேற்றம், அத்தியாவசிய பொருட்களின் மானிய வெட்டு முதலியவை தவிர்க்க முடியாததாகிவிட்டது; மக்கள் இதை பொறுத்துக் கொண்டு சிக்கனத்தைக் கடைப்பிடித்து அரசுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும்'' என்கிறார் பிரதமர் நரசிம்மராவ். தானும் சிக்கனத்தை கடைபிடிக்கும் பொருட்டு தனது சம்பளத்தில் 10% குறைத்துக் கொள்வதாகவும், தனது பயணங்களை குறைத்துக் கொள்வதாகவும் அறிவித்துள்ளார். நரசிம்மராவின் இந்த ‘அதிரடி’ அறிவிப்புக்குப் பின் ஜனாதிபதியும், சில மந்திரிகளும் தமது சம்பளத்தில் 10% குறைத்துக் கொள்வதாக அறிவித்தனர். இதுவல்லாமல் சிக்கன நடவடிக்கையின் தொடர்ச்சியாக, தொழில்நுட்ப வளர்ச்சிக் குழுவின் இயக்குனர், இறக்குமதி - ஏற்றுமதியகத்தின் தலைமை கட்டுப்பாட்டாளர் போன்ற சில பதவிகள் தேவையில்லையெனவும் அகற்றப் போவதாகவும் பிரதமர் அறிவித்துள்ளார்.

ஆனால் பிரதமர், முதல்வர்கள், மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், அதிகாரிகள் எல்லாம் சுகபோகத்தில் மிதக்கிறார்கள்; பகட்டு விளம்பரங்கள் - ஆடம்பர விழாக்களுக்கு, பணத்தை வாரி இறைக்கிறார்கள்; அரசு செலவில் உல்லாசப் பயணம், பாதுகாப்பு, சலுகை, வசதி என ராஜ மரியாதையோடு உலாவுகிறார்கள்; மக்கள் வரிப் பணத்தை கோமாளித்தனமாக, முட்டாள்தனமாக, ஊதாரித்தனமாக பல வழிகளில் விரயமாக்குகிறார்கள். இவற்றையெல்லாம் மூடிமறைக்கத்தான், இவற்றிலிருந்து மக்கள் பார்வையை திசை திருப்பத்தான் சிக்கன நாடகமாடுகிறார்கள். இதுவல்லாமல் தாங்கள்தான் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கும் காரணம் என்பதையும் வசதியாக மறைக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. இன்னும் கூடுதலாக தங்களை அம்பலப்படுத்திக் கொள்கிறார்கள். இதோ 'மாண்புமிகு'களின் சிக்கன வேடத்தை திரைகிழிக்கும் - கேலிகூத்தாக்கும் உதாரணங்கள் சில.

### மந்திரிகள் பாதுகாப்புக்கு பலகோடி! மக்களுக்கெங்கே பாதுகாப்பு?

வினை விதைத்தவன் வினையே அறுவடை செய்வான் என்பது போல, அரசு பயங்கரவாதம் தலைவிரித்தாடிய இடங்களில் எல்லாம் தீவிரவாதமும் போராட்டமும் வெடித்தது. பஞ்சாப் தீவிரவாதத்திற்கும் காஷ்மீர், அஸ்ஸாம் போராட்டங்களுக்கும், ஆந்திர-பீகார் நக்சல்பாரிகளின் எழுச்சிக்கும் இக்கொடிய அரசும், ஆட்சியாளர்களும்தான் காரணம். இதை வசதியாக மறைத்துவிட்டு, ''தீவிரவாதம், பயங்கரவாதம், வன்முறை'' என பீதியை கிளப்புகிறார்கள். இதையே காரணம் காட்டி தமது உயிருக்கும் உடமைக்கும் அரசு செலவிலேயே பாதுகாப்பு செய்து கொள்கிறார்கள். இந்திய கஜானாவின் கணிசமான பகுதி கடந்தாண்டும், நடப்பாண்டிலும் முக்கிய தலைவர்களது பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கே செலவாகியுள்ளது. பிற்கென 'சிறப்புப் பாதுகாப்பு குழு' ஒன்றை உருவாக்கி தீனிபோட்டு வருகிறது, மத்திய அரசு.

பிரதமர் நரசிம்மராவின் பிள்ளைகள், மருமகன், மருமகள், பேரன்களுக்கெல்லாம் இச் 'சிறப்பு பாதுகாப்பு குழு'வின் பாதுகாப்பு கொடுக்கப் பட்டுள்ளது. இதேபோல் மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் மற்றும் அவரது உறவினர்கள் என 30 பேருக்கு இச்சிறப்பு பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது. அசாம் முதல்வர் ஹித்தேஸ்வர் சைக்கியா, மாநிலத்திற்குள்ளும் டில்லிக்கும் அடிக்கடி காரணமில்லாமல் பறக்கிறார். கூடவே பாதுகாப்பிற்கு ஆகும் செலவுகளும் ஏராளம். அண்மையில் இவரது மகன் திருமணத்தின்போது இவரது வீட்டிலிருந்து மணமகள் வீடு வரைக்கும் 350 கிலோமீட்டருக்கு போலீசை குவித்து வழங்கப்பட்ட பாதுகாப்பு செலவிற்கு பல லட்சங்கள் பிடித்தது.

'சிறப்பு பாதுகாப்பு குழு' மூலம் பாதுகாப்பு வழங்க, போலீசு அதிகாரிகளைக் கொண்ட மாநில உயர்மட்டக் குழு அனுமதி வழங்கவேண்டும். ஆனால் அனுமதி இல்லாமலேயே, இக்குழு பரிந்துரைக்கப் படாமலேயே பலர் பாதுகாப்பு வசதிகளை அனுபவித்து வருகிறார்கள். பம்பாயிலுள்ள நரசிம்மராவின் பேரன், மகள், எஸ்.பி.சவானின் உறவினர்கள் பலர், ராணுவ அமைச்சர் சரத் பவார், நீதிபதி தேசாய், மஹாராஷ்டிரா முதலமைச்சர் சுதாகர்நாயக், இந்தி பாடகி லதா மங்கேஷ்கர், அமிதாப்பச்சன் முதலானோர் இப்பட்டியலில் அடங்குவர். மத்திய அரசு ஜெயலலிதாவிற்கு வழங்கிய 'சிறப்பு பாதுகாப்பு குழு'வை திரும்ப பெற்றுக் கொண்டதும் மாநில அரசு செலவில் அதிகார பூர்வமற்ற முறையில் தனிஒரு குழு அமைத்து பாதுகாப்பு செய்து கொள்கிறார், ஜெயலலிதா. இதுவல்லாமல் தான் போயஸ் தோட்டத்தை விட்டு வெளியே வந்தாலே வழிநெடுக ஆயிரக்கணக்கில் போலீசைக் குவித்து பாதுகாப்பு செய்து கொள்வதோடு சென்னை நகரில் சில நிரந்தர பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்துள்ளார்.




### மந்திரிகளின் ஊதாரி செலவிற்கு மக்கள் வரிப்பணம் கொள்ளை!

மக்கள் இடம்விட்டு இடம் நகரவே யோசிக்கும்படி பஸ் கட்டணத்தையும் ரயில் கட்டணத்தையும் உயர்த்தும் ஆட்சியாளர்கள் ஊர்ச் சுற்றுவதற்கும் உல்லாச பயணத்திற்கும் பல கோடிகளை யோசிக்காமல் செலவழிக்கின்றனர். மத்திய செய்தி தொடர்பு துறை அமைச்சர் ராஜேஷ் பைலட் சாதாரண பயணத்திற்கு கூட ஹெலிகாப்டரையே பயன்படுத்துகிறார். இவருக்கென 5 ஹெலிகாப்டர்கள் எப்பொழுதும் தயாராக உள்ளன. ரயில்வே மந்திரி ஜாபர் ஷெரீப் அனைத்து நவீன வசதிகளும் செய்யப்பட்ட தனிரயிலில் தான் சாதாரணமாக பயணம் செய்கிறார். இவர் பயணம் செய்யும்போது அத்தடத்தில் உள்ள ரயில்களும் ரத்து செய்யப்படுகிறது. இப்படி ஒருமுறை பயணத்திற்கு 8 லட்ச ரூபாயை செலவழிக்கிறார். ஜனாதிபதி வெங்கட்ராமன் ஏதோ கொல்லைக்குப் போவது போல அடிக்கடி தமிழகம் வந்து சங்கராச்சாரியை தரிசிக்கிறார். பிரதமர் நரசிம்மராவ் அண்மையில் குருவாயூர் கோயிலுக்கு பயணம் செய்தார். பிரதமர், ஜனாதிபதி உள்நாட்டில் மேற்கொள்ளும் பயணத்திற்கு ஒரு கோடி ரூபாய்வரை செலவாகிறது. அல்லிராணி ஜெயலலிதாவோ ஆயிரம் கார் பவனி போதாது என்று ஹெலிகாப்டரின் மூலம் மலர்தூவி சுப இன்பமடைகிறார்.

பீகாரில் கடந்த ஆண்டு மட்டும் 71 மந்திரிகளின் போக்குவரத்து செலவு 3.8 கோடி ரூபாயாகியுள்ளது. இந்த நிதியாண்டிற்கு 4.26 கோடியாக உயர்த்தியுள்ளார்கள். அமைச்சர் பயணம் செய்தால் உடன் அதிகாரிகள் பட்டாளமும் பரிவாரங்களும் ஒட்டிக் கொள்ளும். ஓர் அமைச்சரின் எழுத்தர் 34,950 ரூபாயையும், ஒரு பியூன் 7000 ரூபாயையும் ஒரு மாதத்திற்கு போக்குவரத்து செலவாக கோரிப் பெற்றுள்ளார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இதிலும் உ-சாப்பாடு செலவு, அலுவலகப் பொருட்

படிப்பகம்

www.padippakam.com



"மக்கள் இடம்விட்டு இடம் நகரவே யோசிக்கும்படி பஸ் கட்டணத்தையும், ரயில் கட்டணத்தையும் உயர்த்தும் ஆட்சியாளர்கள், தாங்கள் ஊர் சுற்றுவதற்கும், உல்லாச பயணத்திற்கும் பல கோடிகளை யோசிக்காமல் செலவழிக்கின்றனர்"

கள் வாங்கும் செலவு, தொலைபேசி செலவு முதலியவை தனி. ஒரு நகராட்சி நிர்வாக இயக்குனர் ஒருவரே 1.32 லட்சம் ரூபாய்க்கு ஒரு வருடத்திற்கு அலுவலக பொருட்கள் வாங்கியுள்ளார்; தனது 2 கார்களுக்கு 42000 ரூபாய்க்கு பெட்ரோல் போட்டுள்ளார். சங்கர் பிரசாத் தேகாரிவால் மற்றும் முன்னா முஷ்டக் ஆகிய இரு அமைச்சர்களின் செப்டம்பர் - அக்டோபர் மாத தொலைபேசி செலவு மட்டும் 1.27 லட்சம் ரூபாய் ஆகியுள்ளது.

ஏதோ ஒரு காரணம் காட்டி உள்நாட்டிலும் வெளிநாட்டிற்கும் ஊர் சுற்றுவது 'மாண்புமிகு'களின் வளமையான 'தொழில்'! அசாமில் பா.ஜ.க., காங்கிரசு, அசாம் கணபரிசத் கட்சிகளைச் சேர்ந்த 25 எம்.எல்.ஏ.க்கள், காமன்வெல்த் நாடுகளின் கூட்டத்திற்கு செல்கிறோம் என சாக்குகூறி குடும்ப சகிதமாக வெளிநாட்டிற்கு இன்பச் சுற்றுலா சென்றாகள். 'மாண்புமிகு'களின் வெளிநாட்டு பயணத்திற்கு ஒருவருக்கு குறைந்தது 5 கோடி ரூபாய் ஆகிறது. அதேபோல் அசாமில் சட்டசபை கட்டிடம் கட்டுவதற்குரிய மாதிரியை பார்வையிடுகிறோம் என பம்பாய், டில்லிக்கு இன்ஜினியர்கள், கட்டிட நிபுணர்கள், உறவினர்கள் சகிதம் 6 எம்.எல்.ஏ.க்கள் இன்பச் சுற்றுலா மேற்கொண்டனர். ராணுவ அமைச்சர் சரத்பவார் புதிதாக பொறுப்பேற்றதும் ராணுவத்துறை செயல்பாட்டையும் நிர்வாகத்தையும் பார்வையிடுகிறேன் என்ற பெயரில் இந்தியா முழுவதும் சுற்றித் திரிந்தார். அண்மையில் ஜனாதிபதி வெங்கட்ராமன் தமிழகம் வந்து உடல்நிலை சரியில்லாத தன் அண்ணனை பார்த்தபோது தஞ்சையில் ஒரு இசைவிழாவில் கலந்து கொண்டு அரச மரியாதை - சலுகைகளையெல்லாம் அனுபவித்தார்.

ஹரியானாவில் பதவியிலிருந்தபோது தேவிலாலும் அவரது மகன்களும் விமானத்திலேயே குடியிருந்தார்கள் என்றால் மிகையில்லை. 'மாநிலத்திற்கு வெளியே கட்சி பணி தொடர்பாக' என பகிரங்கமாகவே கூறி ஒருமுறை 382.25 மணிநேரத்திற்கு விமானத்தை பயன்படுத்தியுள்ளனர். புதிதாக ஆட்சியைப் பிடித்த பஜன்லால் தலைமையிலான காங்கிரசு அரசோ, தேவிலாலும் அவரைச் சார்ந்த 11 பேரும் பதவியிலிருந்தபோது கேடாக விமானத்தை பயன்படுத்தியதை பட்டியலிட்டு 38 லட்சம் ரூபாய் அரசுக்கு ஒப்படைக்கும்படி அறிவித்துள்ளது. ஆனால் பஜன்லால் யோக்கியதை என்ன தெரியமா? தேர்தல் பிரச்சாரத்தின் போதே வாயுதூத் விமானத்தில் சுற்றி திரிந்தவர்தான் பஜன்லால். முதலமைச்சரான பிறகு தனது மகன் குல்தீப்பிற்கு திருமணம் நடத்தினார். இதற்காக தனது இருப்பிடத்தையும், அலுவலகத்தையும் வசதிக்காக வேறு ஒரு இடத்திற்கு மாற்றவே கூடவே அதிகாரிகளும் மந்திரிகளும் இடம் மாறினார்கள். 12 மந்திரிகளையும், 200 அதிகாரிகளையும் திருமண வேலைகளை கவனிப்பதற்காக பயன்படுத்தினார். இக்கும்பல் பல நாட்கள் தங்கி தின்ன செலவு, இதர செலவிற்கு என பல லட்சங்கள் அரசு பணம் கரைந்தது.

ஆந்திரா நெல்லூரில் காங். எம்.பி. மகுந்தா சுப்பராமி ரெட்டியும், தென்னிந்தியாவின் மிகப்பெரிய சாராய வியாபாரி ஒருவரும் சம்பந்திகளாகி நடத்திய ஆடம்பர திருமணம் மிகவும் சர்ச்சைக்குள்ளானது. மத்திய மந்திரிகள், முதலமைச்சர், எம்.பி. எம்.எல்.ஏ.க்கள் சகிதம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட முக்கிய புள்ளிகள் கலந்து கொண்டனர். இவர்கள் தங்குவதற்காக நெல்லூரில் 500 வீடுகளை ஏற்பாடு செய்து அதில் 300 வீடுகளை புதுப்பித்தார்கள். ஒரு பெரிய மண்டபமும் அங்கு கட்டினார்கள். மண்டபத்தின் மூலை முடுக்குகளிலும் திருமண நிகழ்ச்சி தெரியும் வண்ணம் டி.வி. ஏற்பாடு செய்தனர். மண்டபத்தில் இடமில்லாமல் வீடுகளில் தங்கியிருந்தவர்களுக்கும் வசதியாக பார்ப்பதற்கு டி.வி. இணைப்பு செய்யப்பட்டது. ஒரு லட்சம் பேருக்கும் உயர்தர உணவு. இதர செலவுகளையெல்லாம் சேர்த்து கணக்கிட்டால் மொத்த செலவு பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை எட்டும்!

இதேபோல் சரத்பவார் மஹாராஷ்டிர முதல்வராக இருந்தபோது நடத்திய அவரது மகள் திருமணமும், மாதவராவ் சிந்தியாவின் மகள் திருமணமும் பல கோடிகளை விரயமாக்கியது. ஜனாதிபதி வீட்டில் நடந்த "கொலு" விழாவோ பல லட்சங்களை விழுங்கியது. பாசிச ஜெயலலிதாவின் விழுப்புரம், தர்மபுரி கூட்டங்களில் அமைக்

## 'மார்க்சிஸ்டு'களின் சிக்கன நாடகம்

அண்மையில் தமிழகத்தில் நடந்த 'மார்க்சிஸ்டு'களின் அகில இந்திய மாநாட்டில் மே.வங்க முதல்வர் ஜோதி பாசு, எளிமையாக தொண்டர்களோடு உணவருந்தியதையும், குறைந்த எண்ணிக்கையிலான கார்களில் பகட்டில்லாமல் பவனி வந்ததையும் பத்திரிக்கைகள் பசப்பி-அங்கலாய்த்தன. ஆனால் அவரது உண்மை சொரூபம் இதுதான்.

ஜோதிபாசுவிற்கு பயணத்திற்கென 6 கார்கள் காத்திருக்கின்றன. இவற்றில் இரண்டு நவீன வசதிகளுடைய வெளிநாட்டு கார்கள். மாநில சுற்றுப்பயணத்திற்கு சாதாரணமாக ஜோதிபாசு ஹெலிகாப்டரைதான் பயன்படுத்துகிறார். தேர்தல் நேரத்தில் இதனளவு அதிகரிக்கும். ஜோதிபாசு ஒருமுறை நோய்வாய்ப்பட்டு இருந்தபோது அவரது வீட்டு கட்டிடத்தில் நகராட்சி விதிமுறைகளை மீறி 'லிப்ட்' ஒன்றை பிரச்சினையின் ஊடேயும், எதிர்ப்பினூடேயும் அமைத்தார்கள். ஆனால் 'லிப்ட்' வேலை முடிந்த தருவாயில் ஜோதிபாசு தனது இருப்பிடத்தை ராஜ்பவனுக்கு மாற்றியதால் 'லிப்ட்'டிற்கான செலவுகள் வீணானது. இதுமட்டுமல்ல, தனது ரசனைக்கேற்றபடி நகரில் குடிசை போன்ற ஒரு வீட்டை 10 லட்சம் ரூபாய் செலவில் கட்டி குடிபோயுள்ளார். இவருக்கும் இவரது மகன்களுக்கும் வழங்கப்படும் அரசு பாதுகாப்பு செலவு மட்டும் மாதம் 2 லட்சம் ரூபாய். இவரது மகள் சந்தன்பாசுவின் தொழிலுக்கு உதவியாக மேற்குவங்க அரசின் நிதி நிறுவனம் கொடுத்த 20 லட்சம் ரூபாய் திருப்பி செலுத்தப்படவே இல்லை. சந்தன்பாசு மட்டுமல்ல, சுகாதார துறை மந்திரி பிரசந் தாகூரின் மகன், முன்னாள் போக்குவரத்து மந்திரி ராபின் முகர்ஜி, கல்கத்தா சி.பி.எம். மாவட்ட செயலர் லட்சுமி சென், சி.பி.எம்.ன் மாநிலச் செயலர் சைலின் தாஸ் குப்தா ஆகியோர் அதிகாரிகளை வளைத்துப் போட்டுக் கொண்டு அரசு சலுகைகளை முறைகேடாக பயன்படுத்தியவர்களுள் முக்கியமானவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

கப்பட்ட மலர் மேடைகளுக்கு பல லட்சம் செலவானதை அறிவோம். இப்படி 'மாண்புமிகு'களின் ஆடம்பர செலவுகள் அதிகரித்துக் கொண்டே போகையில் இவர்களது சிக்கன நடவடிக்கை எவ்வளவு பெரிய கேலி கூத்து!

நாம் மின்கட்டணத்தையோ, தண்ணீர் வீட்டு வரியோ கட்டாமல் போனால் இணைப்பை துண்டிக்கவும், ஜப்தி செய்யவும் உடனே ஓடிவரும் அரசு, மந்திரிகள் இதையே செய்தால் நின்று வேடிக்கைப் பார்க்கிறது. உதாரணத்திற்கு ஒன்று: மஹாராஷ்டிர முதல்வர் சுதாகர் நாயக் முன்பு வருவாய்துறை அமைச்சராக இருந்தபோது ரு.60 ஆயிரமும், முன்னாள் முதலமைச்சர் சிவாஜிராவ் பட்டீல் - நிலாங்கேகர் ரூ.2.75 லட்சமும், பொதுநலத் துறை அமைச்சர் விஜயசின் மொகித்-பட்டீல் ரூ.2.5 லட்சமும், கூட்டுறவு அமைச்சரும் புதிதாக பாராளுமன்ற காங்கிரசு கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப் 'பட்டவருமான சிவாஜிராவ் தேஷ்முக் ரூ.35 ஆயிரமும், பழங்குடியினர் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுருப்சின் நாயக் ரூ.35 ஆயிரமும் இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்குரிய தவணைத் தொகை பாக்கியாக மகாராஷ்டிர அரசுக்கு செலுத்தப்படாமல் உள்ளது. இதில் பல, 15 வருடங்களாகியும் செலுத்தப்படவில்லை. இதுவன்றி பலர் பதவியிழந்தும் அரசு வழங்கிய வீட்டிலிருந்து வெளியேறாமலும் தவணை செலுத்தாமலும் உள்ளார்கள்.

### இந்திய கஜானாவை அழிக்கும் 'வெள்ளை யானை'

ஒரு சிலவற்றை மட்டுமே சுட்டிக்காட்டி அரசு துறைகளிலுள்ள தேவையற்ற பதவிகள் என வெட்டப் போவதாக அறிவித்தார் நரசிம்மராவ். இந்திய அரசுத் துறைகளில் மொத்தம் 623 உயர்மட்ட அதிகாரிகள் உள்ளார்கள். இதுவன்றி மந்திரிகளின் உதவிக்கு என 125 தனி செயலர்களும், 100 உதவி செயலர்களும், 377 இணைச் செயலர்களும், 635 அலுவலர்களும் பணிபுரிகிறார்கள். இவர்களில் 90%ஐ வெட்டினாலும் இந்திய அரசு இயங்கும் என்பதுதான் உண்மை.

1953-ல் அமைக்கப்பட்ட டீ வாரியம், 1965-ல் அமைக்கப்பட்ட ராணுவத் தளவாட விநியோகத் துறை, செய்தி தொடர்பு அமைச்சகத்தின் தொலைபேசி ஆலோசனை கமிட்டி, உள்துறை அமைச்சகத்தின் சட்ட உதவி கமிட்டி, ரயில்வேயில் உள்ள ஹிந்தி அமுலாக்கும் கமிட்டி, நகர்ப்புறத்திற்கான தேசிய கமிஷன், எரிசக்தி அமைச்சகத்தின் ஆலோசனை வாரியம் மற்றும் சேமிப்பு பிரிவு இவையன்றி கூடல் கமிஷன், சர்க்காரியா கமிஷன், வர்மா கமிஷன் முதல் சாதி-மதக் கலவரங்கள் தொடர்பாக அமைக்கப்படும் விசாரணைக் கமிஷன்கள் வரை எண்ணற்றவைகள் தேவையில்லாதவையே. அரசு அமைத்துள்ள பொது கணக்கு கமிட்டியே இதை ஒப்புக் கொள்கிறது.

கர்நாடகாவில் குண்டுராவ் ஆட்சியில் காங்கிரசு கோஷ்டி சண்டைக்கு குண்டுராவிற்கு அப்பொழுது டி.ஐ.ஜி.யாக இருந்த டி.கார்த்திகேயன் (ராஜீவ் கொலை வழக்கை விசாரிக்கும் சிறப்பு புலனாய்வு குழுவின் தலைவர்) ஆள்பிடித்துக் கொடுத்தார். குண்டுராவ் ஆட்சி கவிழ்ந்ததும் கார்த்திகேயன் போலீசு அதிகாரி பதவியிலிருந்து விரட்டப்பட்டு ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி டீ வாரிய அலுவலகத்தில் அமர்த்தப்பட்டார்.

முன்னாள் அமைச்சர் சஞ்சய்சிங், வெளிவிவகாரத் துறை அமைச்சர் வி.சி.சுக்லா போன்றவர்களும் அவர்களது சகபாடிகளும் மத்திய பிரதேச தொலைபேசி ஆலோசனை கமிட்டியில் உள்ளார்கள். இதுபோல வாரியத்திலும், கமிட்டிகளிலும் இருப்பவர்கள் பெரும்பாலானோர் சம்பந்தமில்லாத பொருத்தமில்லாத ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகள், மந்திரிகளே ஆவர்.

இவர்களது பெரும்பாலான பணி, ஏதாவது கூறி உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் ஊர் சுற்றி திரிவது, அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரங்கள், லஞ்ச-ஊழல்கள் மூலம் கொள்ளையடிப்பது போன்றவையே. பல கமிட்டிகள் - கமிஷன்கள் செயல்படாமல் - காலாவதியாகி முடங்கிக் கிடந்தாலும் அதன் அங்கத்தினர்கள் இன்னும் அரசு செலவில் ஊர் சுற்றித் திரிவது மட்டும் தொடர்கிறது. இதுவன்றி அரசு துறை அதிகாரிகள் வர்த்தக ஒப்பந்தம் - உடன்பாடு போடுகிறோம் என ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்கி கும்மாளமடிக்கிறார்கள்; வெளிநாட்டு பிரதிநிதிகளை இந்தியாவிற்கு வரவழைத்தும் அவர்களுடன் ஊர் சுற்றவும் கும்மாளமடிக்கவும் செய்கிறார்கள். இதில் கிழக்கிந்திய நிலக்கரி சுரங்க நிறுவனம் பெயர் பெற்று விளங்குகிறது.

'மாண்புமிகு'கள் மற்றும் அதிகாரிகளின் முட்டாள்தனமான முடிவுகள், திறமையின்மை, அக்கறையின்மை, சிவப்பு நாடா முறை முதலியவற்றாலும் அரசு பணம் ஏராளமாக விரயமாகிறது.

1988-ல் கர்நாடக உணவு அமைச்சர் டி.என்.நரசிம்மனின் 'துக்ளக்' முடிவால் 1.83 கோடி ரூபாய் வீணானது. நிர்வாக வசதிக்கென இலவச அரிசி - சேலை வழங்கப்படும் மக்களுக்குரிய ரேசன் கார்டுகளை மட்டும் மாற்று (பச்சை) வண்ணத்தில் தயாரிக்க உத்தரவிட்டார். அக்கார்டு அச்சடிக்கப்பட்டபின் அதில் இந்திராகாந்தி படம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றவே மீண்டும் புதிய கார்டுகளை அச்சிட்டார்.



ஹரியானா முதலமைச்சர் பஜன்லால் மகன் குல்தீப் பிஸ்னோயின் ஆடம்பரத் திருமணம்! "குல்தீப் 6 குதிரைகள் பூட்டிய ரதத்திலே ராஜாவைப்போல மணமகள் ரேணுகாவின் வீட்டிற்கு வந்தார். சுமார் 50,000 பேர் கலந்துகொண்டு உயர்ரக உணவு-பானங்களை அருந்தினர்.

கல்கத்தாவில் டம்டம் முதல் டோலிகஞ்ச் வரை 16.43 கி.மீ. தூரமுள்ள ரயில் பாதை திட்டம் 1972-ல் தொடங்கப்பட்டது. அப்பொழுது 930 கோடி ரூபாய் செலவாகுமென திட்டமிட்டனர். ஆனால் இன்றுவரை திட்டம் நடைமுறையாகவில்லை. இடையில் 5 முறை திட்ட செலவை உயர்த்தி மாறி மாறி ஏலத்திற்கு விட்டார்கள். தற்போது 1100 கோடி ரூபாய் செலவாகுமென தீர்மானித்திருந்தாலும் இதுவும் தற்காலிகமானதே. ரயில்வேயில் பல திட்டங்கள், உரத் தயாரிப்பு திட்டங்கள், மின்சாரம் - எரிசக்தி - அணுமின் திட்டங்கள், அணைக்கட்டுத் திட்டங்கள் அனைத்தும் பல மாநிலங்களிலும் இப்படி பல கோடிகளை விழுங்குகின்றன.

மேற்கண்ட சில உதாரணங்களை அனைத்து இந்திய அரசு துறைகளுடனும், அனைத்து கட்சிகள் - மாநிலங்கள் - மேல் மட்ட, கீழ்மட்ட அலுவலகங்களுடனும், முதல்வர்கள், மந்திரிகள் முதல் கீழ்மட்ட நகராட்சி, பஞ்சாயத்து தலைவர் வரை அனைவருடனும் சேர்த்து ஒப்பிட்டுப் பாருங்கள். நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியதற்குரிய காரணம் புரியும். விரயமாகும் மொத்த தொகையையும் யூகித்துப் பாருங்கள். இந்திய கஜானா காலியாகி மீண்டும் மீண்டும் கடன் வாங்கி நாடு அந்நியனுக்கு அடகு வைக்கப்படுவதன் அர்த்தம் புரியும்.

பல வருடங்களுக்கு முன்பே அரசின் பொதுக்கணக்கு கமிட்டியே இக்கும்பலின் ஊதாரி செலவுகள், ஆடம்பரங்கள், பேரங்கள், லஞ்ச லாவண்யங்கள் பெருகி இந்தியப் பொருளாதாரம் திவாலாவதை சுட்டிக் காட்டியது. அதிகார வர்க்கத்தின் பெருந்தீனிக்கு இரையாகும் இந்திய கஜானாவின் நிலையை ஒட்டி இக்கமிட்டி கவலை தெரிவித்தது. இவற்றிலிருந்து இந்தியப் பொருளாதாரத்தை விடுவிப்பதும் கேள்விக்குறியே எனவும் குறிப்பிட்டது. ஆனால் 'மாண்புமிகு'களும் அதிகார வர்க்கமும் நெருக்கடியின் போதெல்லாம் சிக்கன நாடகமாடி மக்களின் மீது சுமைகளை திணிப்பதையே வாடிக்கையாக்கியுள்ளார்கள். ஆனால் இச்சுமைகளை மட்டுமல்ல; தேவையில்லாத இக்கும்பலையும் மக்கள் வெகுநாட்கள் தமது முதுகில் சுமக்கமாட்டார்கள்; விரைவில் தூக்கியெறிவார்கள். ● ராசு

www.padippakam.com

## காஷ்மீர்:

# ''ஏக்தா யாத்திரை''யும் எதிர் விளைவும்

இந்து வெறியர்கள் நடத்திய ''ஏக்தா'' யாத்திரையின் எதிர்விளைவாக பனிமலை சூழ்ந்த காஷ்மீர் இன்று எரிமலையாக மீண்டும் கிளர்ந்தெழுந்துள்ளது. இந்துவெறி பாரதீய ஜனதாவுடன் கள்ளக்கூட்டு சேர்ந்துள்ள ஆளும் நரசிம்மராவ் கும்பலும் ஒருமைப்பாடு கூப்பாடு போடும் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் காஷ்மீர் விவகாரத்தைக் கிளறிவிட்டு இப்போது ஆப்பசைத்த குரங்காக அலறுகின்றன.

தேசியவெறி - மதவெறியூட்டி இந்து ஓட்டுக்களைக் கைப்பற்றும் தொலைநோக்கு திட்டத்துடன் 'ஒருமைப்பாடு' யாத்திரை நடத்தி தேசபக்தி நாடகமாடியது பாரதீய ஜனதா. காஷ்மீரில் பிரிவினைவாதிகளின் -தீவிரவாதிகளின் கை மேலோங்கிவிட்டது; பாகிஸ்தான் அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆதரவும் அளித்து நாட்டைத் துண்டாட சதி செய்கிறது; மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்று கூறிக் கொண்டு பாரதீய ஜனதாவின் தலைவர் முரளி மனோகர் ஜோஷி கன்னியாகுமரியிலிருந்து கடந்த டிசம்பர் 11-ந் தேதியன்று ரதயாத்திரை புறப்பட்டு 'குடியரசு' தினத்தன்று காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் தேசியக் கொடியை ஏற்றப் போவதாக அறிவித்தார்.

2,000 வாகனங்களுடனும் 20,000 குண்டர்களுடனும் 45 நாட்கள் முன்னேறிச் சென்ற இந்த யாத்திரை காஷ்மீர் மாநிலத்தின் ஜம்முவுடன் நின்றுவிட்டது. ஜனவரி 25 அன்று ஜோஷியின் யாத்திரை ஜம்முவில் இருந்து. பாதுகாப்பு காரணங்களைக் காட்டி ஏறத்தாழ 60 பேர் மட்டுமே ஸ்ரீநகருக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அவர்களையும் வழிமறித்து உதாம்பூரிலிருந்து திரும்பவும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் ஜம்முவுக்கு ராணுவ பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்ட ஜோஷியும் அவரது சகபயணிகளும் பின்னர் அங்கிருந்து ஸ்ரீநகருக்கு விமானப்படை ஹெலிகாப்டரில் கொண்டு செல்லப்பட்டனர். 25-ந் தேதியன்று இரவு அவர்கள் எல்லைப் பாதுகாப்புப் படை முகாமில் பாதுகாக்கப்பட்டனர்.

மறுநாள், ஜனவரி 26-ந் தேதியன்று ஸ்ரீநகரில் ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. வெளிவட்டமாக இராணுவம் பாதுகாப்பாக நின்றது. உள்வட்டமாக மத்திய ரிசர்வ் போலீஸ் படை நின்று கொண்டது. இராணுவ முகாமிலிருந்து ஜோஷி தலைமையிலான கும்பல் அரசு வாகனங்களில் லால் சௌக் பகுதிக்கு கொண்டு வரப்பட்டது. கொடிக் கம்பத்தைக் கூட ரிசர்வ் போலீசுப் படைதான் நட்டது. தொடர்ந்து துப்பாக்கி சத்தங்கள் கேட்டன; ஏவுகணைகள் வந்து விழுந்தன. கடைசியில் 60 பேருக்கு மத்தியில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து விட்டு முகத்தைக்கூட வெளிக்காட்ட முடியாது மூடிக்கொண்டு 'மாவீரராக'த் திரும்பினார் ஜோஷி. இந்த அளவுக்கு பாதுகாப்பு தரப்பட்டால் டெல்லி செங்கோட்டையிலேயே எங்கள் கொடியை ஏற்றிவிட்டு வருவோம் என்று பரிகசித்தார் ஒரு காஷ்மீர் இளம் போராளி.

காஷ்மீர் மட்டுமல்ல; அரசு-சீக்கிய பயங்கரவாதம் விரித்தாடும் பஞ்சாபில் ஜோஷியின் யாத்திரை சென்றபோது வழி நெடுக 200 மீட்டருக்கு இரண்டு போலீசார் வீதம் துணை ராணுவப் படைகள் பாதுகாப்புக்கு நின்றன. பஞ்சாபில் 5 இடங்களில் நடந்த ஜோஷியின் கூட்டங்களுக்கு அதிரடி (கமாண்டோ) படையினரின் பாதுகாப்பு தரப்பட்டது. வி.பி.சிங் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைப் போன்றதொரு நிலைமையைத் தவிர்க்க சிறுபான்மை ராவ் அரசு இந்துவெறியர்களுடன் கள்ளக்கூட்டு சேர்ந்திருப்பதை இவையனைத்தும் நிரூபித்துக் காட்டிவிட்டன.

இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், ஜனவரி 24 அன்று பஞ்சாபிலுள்ள பஹ்வாராவில் சீக்கிய தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 4 'யாத்ரீகர்கள்' கொல்லப்பட்டனர்; 40 பேர் படுகாயமடைந்தனர். அதே நாளில் காஷ்மீர் போராளிகள் ஸ்ரீநகரிலுள்ள போலீசு டைரக்டர் ஜெனரல் அலுவலகத்திலேயே சக்தி வாய்ந்த கண்ணிவெடியை வெடித்து 'ஏக்தா' யாத்திரைக்கு தமது எதிர்ப்பைக் காட்டினர். பல்வேறு குழுக்களாகப் பிளவுபட்டிருந்த காஷ்மீர் போராளிகள் 'ஏக்தா' யாத்திரையொட்டி தற்காலிகமாக ஒன்றுபட்டு 25-ந் தேதியன்று நள்ளிரவில் வானத்தை நோக்கி தொடர்ந்து துப்பாக்கியால் சுட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். 26-ந் தேதியன்று பல இடங்களில் 'தேசிய'க் கொடியை எரித்தும், 25 முறை ஏவுகணைகளை வீசியும் தமது கண்டனத்தைக் காட்டினர்.

தேசியக் கொடியை ஏற்றி, காஷ்மீரை இந்தியாவின் காலனியாக்கி அத்தேசிய இனத்தை அடக்கி ஒடுக்க ஒருமைப்பாட்டு வாதிகள் எத்தனித்த அதே வேளையில், நான்கு தலைமுறைக்கும் மேலாகப் போராடி வரும் காஷ்மீர் மக்கள் அஞ்சி நடுங்கி அடிபணியத் தயாராக இல்லை. காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காப் போராடி வரும் செல்வாக்கு பெற்ற போராளிக் குழுக்களில் ஒன்றான ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி (JKLF), பாக். வசமுள்ள ஆசாத் காஷ்மீரிலிருந்து இந்திய - பாகிஸ்தான் போர்நிறுத்த எல்லைக் கோட்டைத் தாண்டி இந்தியா வசமுள்ள காஷ்மீருக்குள் பெருந்திரளாக நுழையப் போவதாக அறிவித்தது. கா.வி. முன்னணியின் முன்னாள் தலைவரும், பாசிச இந்திராவினால் தூக்கிலிடப்பட்ட போராளியுமான மகபூல் பட்டின் நினைவு நாளான பிப்ரவரி 11-ந் தேதியன்று இந் நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக அதன் இந்நாள் தலைவரான அமானுல்லா கான் அறிவித்தார்.

இதன் மூலம் காஷ்மீர் விவகாரத்தை சர்வதேச அரங்கின் பார்வைக்குக் கொண்டு வர கா.வி. முன்னணி முயற்சிப்பதை அறிந்து பீதியடைந்த இந்திய அரசும் ஒருமைப்பாட்டு வாதிகளும், ''இந்திய எல்லைக்குள் தீவிரவாதிகள் ஊடுருவ முயற்சி. தீவிரவாதிகளைத் தூண்டிவிடும் பாகிஸ்தானுக்கு தகுந்த பதிலடி கொடுப்போம்; போர் மூளுமானால் அதை சந்திக்கத் தயார்'' என்று தேசிய வெறியைக் கிளப்பிவிட்டு, காஷ்மீரின் போர் நிறுத்த எல்லைக் கோட்டின் அருகே பெருமளவு ராணுவத்தைக் கொண்டுபோய் குவித்தது. இதேபோல பாகிஸ்தான் பகுதியிலும் கா.வி. முன்னணியின் எல்லை தாண்டும் முயற்சியைத் தடுக்கும் நோக்குடன் படைகள் குவிக்கப்பட்டன. போருக்கான தயாரிப்பில் பாகிஸ்தான் இறங்கிவிட்டதாகக் கூறியும், அணுகுண்டு ஏவப்போவதாகச் சித்தரித்தும் எல்லா முதலாளித்துவப் பத்திரிகைகளும் பீதியூட்டின. கா.வி. முன்னணியை பயங்கரவாதக் கும்பலாகக் காட்டியும், பாகிஸ்தான் தூண்டிவிட்டுள்ளதாகவும் அவதூறுகளை அள்ளி வீசின.

○ ○ ○

நீண்ட காலமாகத் தொடரும் காஷ்மீர் விவகாரத்தின் பின்னணி என்ன? 1947 அதிகார மாற்றம் நடந்த உடனேயே காஷ்மீர் மீது

**ஊரடங்கு உத்தரவுக்குப்பின் இராணுவப் பாதுகாப்புடன் 60 பேருக்கு மத்தியில் 'தேசிய'க் கொடியேற்றும் 'மாவீரர்' ஜோஷி.**



படிப்பகம்

www.padippakam.com

படைகொண்டு பாய்ந்து இந்தியாவும் பாகிஸ்தானும் கூறுபோட்டுக் கொண்டன. போர் நிறுத்தம் ஏற்பட்ட பிறகு இரு நாடுகளின் படைகள் எங்கு நிலைகொண்டனவோ அதுவே கட்டுப்பாட்டு எல்லைக்கோடாக நீடிக்கிறது.

பின்னர், பாகிஸ்தான் வசமுள்ள பகுதி ஆசாத் காஷ்மீர் என்றும், இந்தியா வசமுள்ள பகுதி ஜம்மு-காஷ்மீர் என்றும் அழைக்கப்பட்டது. காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை இரு நாடுகளுமே எப்போதும் மதிக்கவில்லை. காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைவதா, இந்தியாவுடன் இணைவதா, அல்லது தனித்து இருப்பதா என்பதைத் தீர்மானிக்கும் கருத்துக் கணிப்பு - தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரிவந்த ஷேக் அப்துல்லா கும்பல் பரம்பரை பதவி கிடைத்ததும் இந்திய அரசுடன் சமரசம் செய்து கொண்டு துரோகமிழைத்தது.

இன்று காஷ்மீரில் மூன்றுவகை சக்திகள் உள்ளன. இந்திய அரசுடன் சமரசம் செய்து கொண்டு குறுகிய சுயநல ஆதாயம் தேடும் ''மதச் சார்பற்ற - தேசியவாதிகள்'' என்று கூறிக் கொள்ளும் பரூக் அப்துல்லா, மப்டி முகம்மது சையது, குரேஷி, கரண்சிங் போன்றவர்கள் முதல் வகை. காஷ்மீரை பாகிஸ்தானுடன் இணைக்க வேண்டும் என்று கோரும் முஸ்லிம் மதவெறியர்கள் இரண்டாவது வகை. இவ்விரண்டையும் எதிர்த்து காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக்காக உறுதியாகப் போராடி வரும் காஷ்மீர் விடுதலை முன்னணி (JKLF) மூன்றாவது வகை. கா.வி. முன்னணியானது இந்திய ராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் அரசு பயங்கரவாத அட்டூழியங்களுக்கு எதிராகப் போராடிவரும் அதே சமயம், காஷ்மீரின் ஒரு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்திருப்பதையும் எதிர்க்கிறது. மக்கள் செல்வாக்கு பெற்ற போராளி அமைப்பும் இதுதான்.

இதன் காரணமாகவே இந்தியா மட்டுமின்றி பாகிஸ்தானும் கா.வி. முன்னணியை கடுமையாக எதிர்த்து அடக்குகிறது. அதேசமயம் காஷ்மீரை பாகிஸ்தானுடன் இணைக்கக் கோரும் ''ஹிஸ்புல்'', ''அல்லா புலிகள்'' முதலான முஸ்லிம் மதவாத போராளிக் குழுக்களை ஆதரித்து ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்து வருகிறது. காஷ்மீர் மக்களின் போராட்டத்தை தனது இந்திய எதிர்ப்பு நோக்கங்களுக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறதே தவிர, உண்மையில் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை அது ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. தற்போதைய காஷ்மீர் மக்களின் போராட்டத்தை ஆதரித்து நாடு தழுவிய அளவில் பாக். அரசே கடையடைப்பு நடத்திய போதிலும் போர் நிறுத்த எல்லைக் கோட்டைக் கடக்க முயற்சித்த கா.வி. முன்னணியினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 10 பேரைக் கொன்றும் பலரைப் படுகாயப்படுத்தியும் அடக்குமுறையை ஏவியது.

○ ○ ○

திட்டமிட்டபடி, பிப்ரவரி 10-ம் நாளன்று ஆசாத் காஷ்மீர் தலைநகரான முசாபாராபாத்திலிருந்து ஏறத்தாழ 10,000 பேருக்கு மேற்பட்ட மாபெரும் பேரணியாக கா.வி. முன்னணியினர் போர் நிறுத்த எல்லைக் கோட்டை நோக்கி முன்னேறினர். ''ஆக்கிரமிப்பு எல்லையைத் தகர்ப்போம்! காஷ்மீரை விடுவிப்போம்! காஷ்மீர் மக்களின் சுதந்திரப் போராட்டம் ஓங்குக!'' என்கிற முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன.



எல்லைக் கோட்டைக் கடக்கும் போராட்டத்தில் காஷ்மீர் விடுதலை முன்னணியின் எழுச்சிக் கோலம். கண்ணாடி அணிந்திருப்பவர் கா.வி.மு. தலைவர் அமானுல்லா கான்.

பாகிஸ்தான் அரசு எல்லையை ஒட்டிய சாலைகளை வெடிகுண்டு வைத்து சிதைத்த போதிலும், கொட்டும் பனிமழையிலும் காட்டுப் பாதைகளின் வழியே அவர்கள் முன்னேறினர். பருவநிலை பாதிப்பின் காரணமாக, கா.வி. முன்னணியினர் ஏற்கனவே அறிவித்தவாறு பிப்.11-ந் தேதியன்று எல்லைக் கோட்டைக் கடக்க முடியவில்லை. 12-ம் தேதியன்று எல்லையை ஒட்டிய சினோரி, ஜப்கூல் பாலம், சாகோடி ஆகிய இடங்களில் கா.வி. முன்னணியினர் மீது பாக். ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தி 10 பேரைக் கொன்றது. அமானுல்லாகானும் முன்னணியினரும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். அதேநாளில் இந்தியாவின் பிடியிலுள்ள காஷ்மீரில் பல இடங்களில் ஊரடங்கு உத்தரவை மீறி எழுச்சிகரமான ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

''எல்லையைக் கடப்பதல்ல எங்கள் போராட்டத்தின் நோக்கம். காஷ்மீரை ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கவும், எமது போராட்டத்தின் நியாயத்தை உலக மக்களுக்கு உணர்த்தவும் ஓர் அடையாளமாக எல்லைக் கோட்டை கடக்கப் போவதாக அறிவித்தோம். எமது நியாயமான போராட்டத்தை உலக மக்களின் பார்வைக்கு உணர்த்துவதில் நாங்கள் வெற்றி பெற்றுள்ளதாகவே கருதுகிறோம். தேவையற்ற உயிர்ச் சேதங்களைத் தவிர்க்கும் பொருட்டு எல்லையைக் கடக்கும் போராட்டத்தை இத்துடன் முடித்துக் கொள்கிறோம்'' என்று அறிவித்தார் அமானுல்லா கான். ஆனால் இதையே கோழைத்தனமாக பயந்து ஓடிவிட்டதாக இந்திய 'தேசிய' பத்திரிகைகள் வக்கிரமாக அவதூறு செய்தன.

○ ○ ○

காஷ்மீர் பிரச்சினையின் அடிப்படைக் கொள்கையில் இந்திய அரசு மற்றும் அரசியல் தலைவர்களிடையே வேறுபாடுகள் எதுவும் இல்லை. அணுகுமுறையில் மட்டும் மாறுபடுகிறார்கள். இவர்களுடைய சூழ்ச்சிகள் எதற்குமே காஷ்மீரிகள் பலியாக மறுக்கின்றனர். காஷ்மீரிகளின் பொருளாதாரமும் வாழ்வும் சின்னாபின்னமாகிக் கிடக்கிறது. இருந்தபோதும் மதக் கலவரங்கள் எதுவும் நடக்கவில்லை. பாக். ஆதரவுக் கும்பலின் வன்முறைக்குப் பயந்து அகதிகளாக வெளியேறிவிட்ட இந்துக்களின் சொத்துக்களில் ஒரு துரும்பைக்கூட யாரும் தொடவில்லை. அதேசமயம் அரசு பயங்கரவாதத்துக்கு எதிரான சுயநிர்ணய உரிமைப் போரில் காஷ்மீரி மக்களின் உறுதி குலையவுமில்லை.


எனவே, அரசு ப்யங்கரவாதத்தை ஏவியோ, மதவெறி - தேசிய வெறியூட்டி பாகிஸ்தான் மீது போர் தொடுத்தோ, பரூக் முதலான துரோகிகளுக்கு விலைபேசி பொம்மை அரசை நிறுவியோ காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க இந்திய அரசு முயலுவது ஒருபோதும் வெற்றி பெறாது. அதேபோல மதவெறி பயங்கரவாத கைக்கூலிகளை ஏவி காஷ்மீரைத் துண்டாடி தனது ஐந்தாவது மாநிலமாக்கிக் கொள்ள பாகிஸ்தான் செய்யும் கீழ்த்தரமான முயற்சியும் பலிக்காது. இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுமே தாம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளிலிருந்து முற்றாக வெளியேற வேண்டும்; காஷ்மீர் மக்கள் தமது எதிர்காலத் தகுதியை தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து செயல்படுத்த வேண்டும்; இது ஒன்றே ஜனநாயக பூர்வமான, நியாயமான ஒரே தீர்வாக முடியும்.

● மனோகரன்.



படிப்பகம்

www.padippakam.com



# க்கு-விசாரணை

# கைவரிசை

னையும் ப... ...யும் படி சிறப்பு நீதி மன்றம ... த்தி ரவு போட்டுள்ளது. ராஜீவ் கொலை வழக்கில் இவ்விருவரையும் பிரதானக் குற்றவாளிகளாக்கிக் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்வதென சி.பி.ஐ.யின் சிறப்புப் புலனாய்வுக் குழு முடிவு செய்துள்ளதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரபாகரனையும் பொட்டு அம்மனையும் தேடப்படும் குற்றவாளிகள் எனப் பிரகடனப்படுத்தும் உத்திரவை இந்தியாவிலும் இலங்கையிலும் விளம்பரப்படுத்தும் நடவடிக்கைகளையும் இரு அரசுகளும் மேற்கொண்டு வருகின்றன.

பிரபாகரனை எப்படியெல்லாம் பிடித்து, நாடு கடத்தப் போகிறார்கள் என்பது பற்றிய வதந்திகளை உடனடியாகவே பார்ப்பன-பாசிச ஆதரவுப் பத்திரிக்கைகள் எழுத ஆரம்பித்துவிட்டன. இந்திய இராணுவ அதிரடிப் படை அனுப்பப்படும், மாறு வேடத்தில் இந்திய உளவுப்படைகள் போய்ப் பிடித்து வருவார்கள்; இலங்கை இராணுவம் பிடித்து 'காமன்வெல்த்' ஒப்பந்தப்படி அனுப்பும் என்று எழுதுகின்றன.

ஒரு லட்சத்துக்கும் மேலான இந்திய இராணுவத்தினர் அதிநவீன ஆயுதங்களுடன் இரண்டாண்டுகள் போரிட்டுச் சாதிக்க முடியாததை ஒரு அதிரடிப் படையோ மாறுவேட உளவுப்படையோ சாதித்துவிடும் என்பதை எந்த முட்டாளும் நம்பமாட்டான். பிரபாகரனையும் பொட்டு அம்மனையும் பிடித்து விடலாம் அல்லது சரணடைவார்கள் என்கிற நம்பிக்கை இல்லாவிடினும் சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பை நிறைவேற்றுவதாக சி.பி.ஐ.யின் சிறப்புப் புலனாய்வுக் குழு கூறுகிறது.

ஆனால் இந்த உத்திரவைப் பயன்படுத்திக் கொண்டு விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்த முடியும். அதோடு புலிகளின் ஆதரவாளர்களை மட்டும் அல்ல, அப்படி முத்திரை குத்தித் தமது அரசியல் எதிரிகளை ஒடுக்கவும் முடியும் என்று பார்ப்பன - பாசிச கும்பல் நம்புகிறது. முதலாவதாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை இந்தியாவில் சட்ட விரோதமானதெனத் தடை விதித்து புலிகள் - அவர்களின் ஆதரவாளர்கள் என்கிற பெயரில் கேள்வி முறையின்றி, எவரையும் வேட்டையாடலாம். இரண்டாவதாக, பயங்கரவாத அமைப்பென்று முத்திரை குத்தி உலகின் பல நாடுகளில் உள்ள அதன் அலுவலகங்களை மூடும்படியும் புலிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் என்று ஈழத்தமிழர்கள் அனைவரையுமே நாடு கடத்தும்படி சர்வதேச ரீதியில் நிர்பந்திக்கலாம். மூன்றாவதாக, முக்கியமாக, விடுதலைப் புலிகள் அமைப்புடன் இலங்கை அரசு சட்டபூர்வ - சமரசப் பேச்சுவார்த்தைகள் எதையும் நடத்த முடியாது தடுத்து விடலாம். நான்காவதாக, பிரபாகரன் ஒருபோதும் சட்டபூர்வ, வெளிப்படை வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது செய்து விடலாம்.

பார்ப்பன - பாசிச கும்பலின் இந்தக் கணக்கு முழுமையாக நிறைவேறாது போகும். என்றாலும் இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வதோடு தமது அரசியல் எதிரிகளை வேட்டையாடுவது மேலும் தீவிரமாகும் என்பது நிச்சயம். உலக நாடுகள் பலவற்றில் இருந்து புலிகளின் அலுவலகங்களையும் தஞ்சம்பெறும் உரிமைகளையும் தடைசெய்வது கூட அவ்வளவு எளிதல்ல: இதற்கும் அந்நாடுகளின் வேறு சில நிபந்தனைகளை ஏற்றுத் தகுந்த விலை கொடுக்கும்படி இந்தியா நிர்பந்திக்கப்படும். புலிகளுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்துவதும், சட்டபூர்வ அரசியல் வாழ்வுக்கு அனுமதிப்பதும் கூட இலங்கை அரசின் இராணுவ, அரசியல் நிலைமை - நிர்பந்தங்களைப் பொறுத்தது தான். ஏற்கனவே யாழ் நகர மேயர் ஆல்பிரட் துரையப்பா கொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக பிரபாகரனை இலங்கை அரசு அறிவித்துள்ளது. இருந்தபோதும் பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வலியுறுத்தி வந்த இலங்கை அரசு சமரசம் செய்து கொண்டு சட்டபூர்வ அரசியல் வாழ்வுக்கும் தனது நலன் கருதி அனுமதிக்கத் தயாராக இருந்தது. ஆகவே இந்திய அரசின் கணக்கு பலிக்கும் என்று கருதமுடியாது; ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை நிறைவேற்றப் போட்ட கணக்காகப் பொய்த்துப் போகக்கூடும்.

இதற்கிடையே ராஜீவ் கொலை சம்பந்தமாக சி.பி.ஐ.யின் சிறப்புப் புலனாய்வுக் குழு நடத்திவரும் கிரிமினல் குற்ற விசாரணையும், பாதுகாப்புக் குறைபாடுகளை விசாரிக்கும் வர்மா கமிசன் மற்றும் சதிகளை விசாரிக்கும் ஜெயின் கமிசன் ஆகியவையும் ஆளும் காங்கிரசு, பார்ப்பன - பாசிச கும்பல் விரும்பும் வகையில் நடத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு 'தடா'வில் வைக்கப்பட்டுள்ள நளினி, முருகன், பத்மா, பேரறிவாளன், பாக்கியநாதன் ஆகியோர் நீதிமன்றத்துக்கு மனுப் போட்டுள்ளனர். அவற்றில் தாம் கொடிய முறையில் சித்திரவதை செய்யப்பட்டதாகவும், துன்புறுத்தி வெற்றுத் தாள்களில் கையொப்பங்கள் பெற்றதாகவும், ராஜீவ் கொலை வழக்கில் வேண்டுமென்றே தி.க., தி.மு.க.காரர்களை இழுத்துவிடும்படி அடிக்கப்பட்டதாகவும் சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழு மீது புகார்கள் கூறியுள்ளனர். தம் பெயர்களில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள வாக்குமூலங்களை நிராகரிக்கும்படியும் கோரியுள்ளனர். இந்தப் புகார்களை சிறப்புப் புலனாய்வுக் குழு நடலடியாக மறுக்கிறது. ஆனால் ராஜீவ் கொலை வழக்கில் முக்கியக் குற்றவாளி என அக்குழு கூறிய வேதாரண்யம் சண்முகத்தின் 'மர்ம மரணமே' அதன் யோக்கியதைக்குத் தக்க சான்றாக உள்ளது. இன்னும் பல வழக்குகளில் எப்படிச் சித்திரவதைகள் செய்து பொய்யான வாக்கு மூலங்கள் பெற்று சி.பி.ஐ. அம்பலப்பட்டுப் போயுள்ளது என்பதை நாம் ஏற்கனவே எழுதியுள்ளோம். (பார்க்க: ''சி.பி.ஐ.யின் தகிடுதத்தங்கள்'' புதிய ஜனநாயகம், ஆக.-செப்.'91).

ராஜீவ் கொலையை நடத்திய சிவராசனும், புகைப்படக்காரர் அரிபாபுவும் தமிழ்நாட்டு இ.காங்கிரசுத் தலைவர் வாழப்பாடியுடன் தொடர்பு வைத்திருந்தனர்; அவரோடு புகைப்படம் எடுத்துக் கொண்டனர் என்று சிவராசனுடைய நாட்குறிப்பில் உள்ளதென்று பாக்கியநாதன் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இதை மறைத்து, தி.க., தி.மு.க.காரர்களைச் சிக்க வைக்கும்படிதான் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் அவர் கூறுகிறார். இதை அடியோடு மறுக்கும் வாழப்பாடி, இதை ஏன் இதுவரை கூறவில்லை என்று கேட்டு, இது தனக்கு எதிராக கருணாநிதி செய்யும் சதி என்கிறார். ராஜீவின் பாதுகாப்புக் குறைபாடுகளை விசாரிக்கும் வர்மா கமிசன் முன்பு காங்கிரசின் உள்ளூர் பிரமுகர் குமுதவல்லி ஒரு வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். அதில் ராஜீவைக்



பிரபாகரன்



பொட்டு அம்மன்

> ''ஈழத்தில் இந்திய ராணுவம் போரிட்டு தோல்வி கண்ட நிலையில், உளவுப்படையை ஏவி பிரபாகரனைக் கைது செய்துவிட முடியும் என்று எந்த முட்டாளும் நம்பமாட்டான்.''

படிப்பகம்

கொன்ற வெடிகுண்டு சுமந்து வந்த தானு என்பவர் சில காங்கிரசாருக்கு முன்னமே அறிமுகமானவர் என்பதாக சாட்சியளித்துள்ளார்.

இப்படிப்பட்ட உண்மைகள் வெளிவரக்கூடாது என்பதற்காகத்தான், பிற கிரிமினல் குற்றவிதிகளுக்குட்பட்டு பகிரங்கமாக இக்கொலை வழக்கை விசாரிக்க மறுக்கிறார்கள். இவ்வாறு 'தடா'வின் கீழ் இரகசிய விசாரணை நடத்துவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. இந்திரா கொலை வழக்கில் நிரபராதி என இறுதியில் நிரூபிக்கப்பட்ட பல்பீர் சிங்கை ''தூக்குமேடை'' வரை இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள்; இரண்டாவது சதிவழக்கு என்று சிம்ரான்ஜித்சிங் மான், அதீந்தர் பால்சிங், தாலீப்சிங், ஜெக் மோகன் சிங் ஆகிய வேறு பலரையும் சிக்க வைத்து பழிதீர்க்க முயன்றார்கள். அதைப் போல பல அப்பாவிகள் - நிரபராதிகளையும் கூட ராஜீவ் கொலைவழக்கில் சிக்க வைக்கவும் 'தடா'— இரகசிய விசாரணை வசதியாக உள்ளது. ராஜீவ் கொலைக்குக் காரணமானவர்கள் அல்லவென்றாலும், சிவராசன் போன்றவர்களுடன் பணத்துக்காகவும் வேறு பிற காரணங்களுக்காகவும் காங்கிரசுத் தலைவர்கள் - பிரமுகர்கள் உறவாடி வந்தது போன்ற இரகசியங்கள் வெளிவராமல் அமுக்கிவிடவும் இந்தத் 'தடா'— இரகசிய விசாரணை வசதியாக உள்ளது.

இப்படி சி.பி.ஐ.யின் வழக்கைத் தாம் விரும்புவதைப் போல எப்படியாகிலும் ஆளுவோர் முடித்து விடலாம். ஆனால் ராஜீவ் கொலையைத் தொடர்ந்து அரசியல் ஆதாயம் கருதி பெரும் கூச்சல் போட்டு இரண்டு விசாரணைக் கமிசன்கள் அமைக்கும்படி காங்கிரசுக்காரர்கள் நிர்பந்தித்தார்கள். ஆனால் அவற்றின் விசாரணைப் போக்குகள் அவர்களையே அம்பலப்படுத்துவதாக ஆகிவிட்டன.

வி.பி.சிங் மற்றும் சந்திரசேகர் அரசுகளும், தமிழகப் போலீசும் ராஜீவுக்குப் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யத் தவறிவிட்டன; எனவே பாதுகாப்புக் குறைபாடுகள் குறித்து விசாரிக்க வேண்டுமென்று கோரி வர்மா கமிசன் அமைக்கப்பட்டது. ஆனால் அதன் விசாரணையின் போது, வாழப்பாடி, மூப்பனார், மரகதம் கோஷ்டிகளும் மத்திய உளவுப் படைகளும், மாநிலப் போலீசும் ஒன்றின் மீது ஒன்று குற்றஞ் சுமத்திக் கொண்டு பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளன. இவையும், இதன் பொறுப்பாளர்களும் கமிசன் தாக்கீது - நிர்பந்தம் காரணமாகவே சாட்சியமளிக்க முன்வந்தனர். காங்கிரசுத் தலைமை அலுவலகமே ராஜீவ் நிகழ்ச்சி நிரல், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துத் தம்மிடம் எந்த ஆவணமும் கிடையாது என்று கைவிரித்து விட்டது. விசாரணையின் போது வெளிவந்த முக்கியமான உண்மை, ராஜீவின் பாதுகாப்புக் குறைபாடுகளுக்கு அவரேதான் முக்கியக் காரணம். அவரே பாதுகாப்பு நெறிமுறைகளை மீறுவதை வாடிக்கையாக் கொண்டிருந்தார்; குறுக்கிட்டு ராஜீவை எச்சரிக்கும் துணிவு இவர்களில் எவருக்குமே கிடையாது. மொத்தத்தில்



''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' - **கைவிரிக்கும் வாழப்பாடி; பரபரப்பான வாக்கு** மூலம் அளித்துள்ள குமுதவல்லி.

இந்த விசாரணையே கேலிக் கூத்தாகவிட்டது என்றே கருதலாம்.

போலிக் கம்யூனிஸ்டுகள் முதல் பாரதீய ஜனதா உட்பட காங்கிரசு வரை சர்வகட்சியினரும் வலியுறுத்தி, ராஜீவ் கொலையில் சர்வதேச சதி, குறிப்பாக சி.ஐ.ஏ. பங்கு இருப்பதாகவும், விரிவான விசாரணை வேண்டும் எனவும் கோரினர். ஆனால் இதற்காக அமைக்கப்பட்ட ஜெயின் கமிசன் ஆறு மாதங்களாகியும் தனது வேலையைத் தொடங்கவே இல்லை. இந்தக் கமிசனுக்கான அலுவலகமோ, அதிகாரிகளோ கூட தீர்மானிக்கப்படவில்லை. ராஜீவ் கொலையில் சதி பற்றி தகவல் உள்ளவர்கள் வாக்குமூலம் - அறிக்கை சமர்ப்பிக்கும்படி கமிசன் விளம்பரப்படுத்தியும் எவருமே முன்வரவில்லை. கமிசனோடு, இதற்கான கெடுவும் முடிந்து மீண்டும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

கருணாநிதி, வீரமணி கட்சியினர் உட்பட அதுவரை புலி ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டவர்கள் கூட ராஜீவ் கொலைக்கு சர்வதேச சதி, சி.ஐ.ஏ. பங்கு இருப்பதாகவும், காங்கிரசுப் பிரமுகர்கள் கூட சம்பந்தப் பட்டிருக்கலாம் எனவும் கூறினர். அதுவரை புலி ஆதரவாளராய் இருந்ததால் மக்களிடம் தகுந்த பதில் கூறமுடியாத நிலையைச் சமாளிக்கும் அரசியல் நோக்கம் கருதியே இவ்வாறு கூறினர் என்பதை நாம் அறிவோம். காங்கிரசுக்காரர்களோ ராஜீவைச் சர்வதேசத் தலைவராகக் காட்டியும் வழக்கம்போல சி.ஐ.ஏ. சதி என்ற பூச்சாண்டி காட்டியும் ஆதாயம் தேட முயன்றனர். மத்தியப் போலீசு மந்திரியே சி.ஐ.ஏ. சதிதான் காரணமென்று நாடாளுமன்றத்திலே அறிவித்தார். எதற்கெடுத்தாலும் அந்நிய சதி என பாரதீய ஜனதாவும், சி.ஐ.ஏ. சதி என போலிக் கம்யூனிஸ்டுகளும் கூச்சல் போடுவதை இந்த விவகாரத்திலும் செய்தனர். ஆனால் குறிப்பான ஆதாரம், விசாரணை என்று வரும்போது எவருமே சாட்சியமளிக்க முன்வரவில்லை.

''கமிசன் முன்பு தரப்படும் சாட்சியங்கள் எல்லாம் வாக்குமூலங்களாகவும் ஆதாரபூர்வமாகவும் இருக்கவேண்டும் என்று அது வலியுறுத்துகிறது; அதனால் யாரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை'' என்று அதிகார வட்டாரத்தினர் கூறுகின்றனர். எப்படியிருக்கிறது பாருங்கள்! ஆதாரமற்ற தகவல்கள், ஊகங்கள், வதந்திகள், அடிப்படையில் சதி வழக்கு விசாரணை நடத்தினால் சாட்சியமளிப்பார்களாம்! இதிலிருந்து தெரிவதென்ன?

அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவும், பொய்யான பிரச்சாரங்கள் மூலம் அரசியல் ஆதாயம் அடையவும்தான் ராஜீவ் கொலை வழக்கையும் விசாரணைக் கமிசன்களையும் பயன்படுத்த இவர்கள் விரும்புகிறார்கள். இதுதவிர உண்மைகள் வெளிவந்துவிடக் கூடாது, எப்படியாவது அமுக்கிவிட வேண்டும் என்பதிலேயும் குறியாக இருக்கிறார்கள்.

**● மணி**

## மீண்டும் தீக்சித்தின சகுனி வேலை

புலிகளை ஒடுக்கித் தனிமைப்படுத்தி, பலவீனப்படுத்திவிட்டு ஈழத்துரோக அமைப்புகளை வைத்து மீண்டும் ஆதிக்க அரசியல் நடத்துவதில் இந்திய அரசு இறங்கிவிட்டதாக செய்திகள் கூறுகின்றன. ஈழத் துரோகிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரத்துடன் டெல்லியில் ரகசிய பேரங்கள் நடத்தி 50 லட்சம் ரூபாய் நிதியளித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் சோலங்கியும், செயலாளர் ஜே.என்.தீக்சித்தும் அக்கூட்டணியின் தூதுக்குழுவைச் சந்தித்துள்ளனர். இந்த தீக்சித் தான் முன்பு இலங்கைக்கான இந்தியத் தூதராக இருந்தவர். இவர்தான் பாசிச ராஜீவுக்கு பிராந்திய ஆதிக்கச் சதி ஆலோசனைகள் வழங்கி, அவர் சார்பாக புலிகள் உட்பட ஈழ அமைப்புகளுடன் பேரங்கள் நடத்தி செயல்படுத்தியவர். இப்போது இந்திய வெளியுறவுச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள இதே தீக்சித் மீண்டும் தனது சகுனி வேலைகளைத் துவங்கிவிட்டார்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# விலை...

# மக்கள்...

**விலைவாசியேற்றம் மக்கள் தலையில் பேரிடியாக இறங்குகிறது. தாங்க முடியாத வேதனையால் மக்கள் துடிதுடிக்கிறார்கள். இதை அறியாதவர்கள் எவரும் உணர்வுகள் மரத்துப் போனவர்களாகத்தான் இருக்க வேண்டும். இதைக் கண்டு கொள்ளாதது மட்டுமல்ல; யாகங்கள், சிறப்புப் பூசைகள், திருவிழாக்கள், இசை, நாட்டியப் பெருவிழாக்கள், ஆயிரம் கார் பவனி, சிறப்பு விமானப் பயணம், ஹெலிக்காப்டரில் இருந்து மலர் தூவிட, மலர் பாதையில் கார் உலா, மலரிலேயே நடைபாதை, பூக்களாலும், பழங்களாலும் அமைந்த மேடை என்று வாழ்பவர்கள் உண்மையில் வக்கிர நோய் பிடித்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். இந்த வக்கிரநோய் பார்ப்பன - பாசிச ஜெயாவுக்கு நாளும் முற்றி வருவதைக் காண்கிறோம்.**

**விலைவாசியேற்றம், மக்களிடையே ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள், அதற்கு மக்கள் அறிந்துள்ள காரணங்கள், அவர்கள் முன் வைக்கும் தீர்வுகள், ஓட்டுக் கட்சிகள்- ஆட்சியாளர் மீது அவர்களுக்குள்ள நம்பிக்கைகள் குறித்து திருச்சி மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் ஒரு கருத்தறியும் இயக்கத்தைச் சமீபத்தில் நடத்தினர். மக்களின் நியாயமான கோபாவேசத்தைப் பிரதிபலிக்கும் அதன் முடிவுகளை இங்கே வாசகர்கள் முன்பு வைக்கிறோம்.**

தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள், நெசவாளிகள், சிறு வியாபாரிகள், பிற உதிரி தொழிலாளர்கள் மத்தியில் கருத்து கணிப்பு எடுக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை மக்கள் உணர்ந்துள்ளனர். அவர்கள் பிரச்சினைகளை தாங்கிக் கொள்ள தயாராக இருக்கிறார்கள் என நாக் கூசாமல் புளுகும் நரசிம்மராவின் முகத்தில் அறைவதாக மக்களின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

சொற்ப அளவில்லானவர்களே தான் நரசிம்மராவின், ஜெயலலிதாவின் வார்த்தைகளை கிளிப்பிள்ளைபோல உச்சரிக்கின்றனர்.

உழைக்கும் பெண்களையும் அல்லது உழைப்பாளர் வீட்டில் இருக்கும் பெண்களை விலைவாசி உயர்வு கடுமையாக சிந்திக்க வைத்துள்ளதை கவனிக்க முடிகிறது.

ஒரு குறிப்பிட்ட அளவு நடுத்தர வர்க்கங்களையும் தாக்கியுள்ளதை அறிய முடிகிறது.

''குடும்பத்தை எப்படி கொண்டு இழுக்கப் போறோமுன்னு தெரியலை. பயங்கரமா ஏறுது விலைவாசி; சாப்பிட முடியாத அளவுக்கு பாதிப்பு உள்ளது. வருங்காலம் என்ன ஆகுமோ (சொன்னவர் அ.தி.மு.க. பிரமுகர்) எங்களை வறுமையில் தள்ளிவிட்டது. மூன்றுவேளை சாப்பிட்டது. இரண்டு வேளையாக குறைந்துவிட்டது; வாழ முடியாது என்ற அளவுக்கு வளர்ந்து விட்டது. முன்பை விட இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. கருணாநிதி ஆட்சியிலும் அதிகரித்தது; ஆனால் தற்போது அதிகம். தண்ணியைத் தவிர எல்லாப் பொருட்களும் ஏறிப் போச்சு.''

''நான் காலையிலிருந்து சாயந்திரம் வரை உழைச்சா பன்னிரெண்டு ரூபாதான் சம்பளம் கிடைக்குது; இதை வைத்து 5 பேர் எப்படிதான் சாப்பிட்டு உயிரை காப்பாத்த போறோமோ தெரியல; ரேஷன் பொருளத்தான் மலைமாதிரி நம்பியிருந்தேன். அதையும் குறைச்சிட்டாங்க. விலையும் ஏத்திட்டாங்க பொறுக்கிப் பசங்க'' என வேதனையை வெளிப்படுத்தினார் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தும் பொன்னம்மா.

''ஓட்டுக்கு வரும்போது ஊரை சுற்றி வந்தவனுங்க, இப்போ நாங்க செத்தோமா, பிழைத்தோமா என்று கூட பார்க்க வரல'' என்று அ.தி.மு.க.வுக்கு ஓட்டு போட்டவர்கள் தன் கட்சியின் மீதே வெறுப்பை உமிழ்ந்தனர்.

உணவுப் பொருட்கள் முதல் நுகர் பொருட்கள்வரை அனைத்தும் விலை ஏறிவிட்டதை அனைவரும் கூறினர். அன்றாடம் உழைத்து ஊதியம் பெற்று வாழும் மக்களுக்கு ரேஷன் அரிசி வெட்டும், விலை உயர்வும், மிகவும் பாதித்த விஷயமாக உள்ளது. ''ரேஷன் கடைய நம்பித்தான் உசிர வச்சிருந்தோம். அதையும் வெட்டிட்டா இந்த பாவி'' என்று வயிறெரிந்தனர்.

''விலையேற்றம் தவறானது; மக்களை ஓரேயடியா கொடுமைப்படுத்துதுங்க; நமக்கு விரோதமானவற்றைதான் செய்கிறார் இந்த ஜெயலலிதா; நல்லது நடக்குமுன்னு நம்பிதான் ஓட்டு போட்டோம். ஆனால் தவறு செய்து விட்டதாக இப்போதுதான் உணர்கிறோம். 3 மாதமாகத்தான் விலைவாசி ஏறிப்போச்சு; ஜெயலலிதா என்னிக்கி ஆட்சிய புடிச்சிதோ அன்னைக்கு புடிச்சது சனியன்; இந்த முண்ட ஆட்சியில தான் விலைவாசியே ஏறிப்போச்சு.'' இப்படி ஜெயலலிதாவிற்கு எதிராகவே மக்களின் கோபாவேசம் இருந்ததை கவனிக்க முடிந்தது.

விரைவில் வேலையிலிருந்து ஓய்வு பெறும் ஒரு கடைநிலை ஊழியரின் பிரச்சினை என்னவென்றால் ''எனக்கு 52 வயதாகிறது. விக்கிற பவுன் விலை, துணிமணி விலையில என் பொண்ணுகளுக்கு எப்படி திருமணம் செய்து கொடுக்கப் போறோமுன்னு தெரியல'' என்று தன் குமுறலை வெளிப்படுத்தினார்.

''விலைவாசி உயர்வுக்கு ஏற்றாற்போல் எங்களுக்குப் பஞ்சப்படியை ஏற்றிவிடுவார்கள். எங்களைவிட சாதாரண மக்களையே அதிகம் பாதிக்கும்'' என்று பெரும்பாலான அரசு ஊழியர்கள் கூறியதைக் கேட்க முடிந்தது.

''பஞ்சப்படியை வெட்டுவது, பதவி உயர்வை வெட்டுவது'' போன்ற நரசிம்மராவின் தாக்குதலின் விபரங்கள் இவர்களை இன்னும் எட்டவில்லை. ''தொழில் நடத்துவதை விட்டுவிட்டோம்; கௌரவத்துக்காகத்தான தொழிலை நடத்துகிறோம்'' என்று டீக்கடைக்காரர்கள் கூறுகின்றனர். மண்ணெண்ணை, சீனி, பால், டீ, இப்படி எதிலும் விட்டு வைக்காமல் அனைத்தும் பாதிப்பு. புலம்பலுடன் டீ அடிப்பதை கவனிக்க முடிந்தது. ''இப்போதெல்லாம் வாடிக்கையாளர்கள் வருவதே குறைந்து போச்சு. கடைக்கு வந்து ரொம்ப நீண்ட நேரம் யோசித்து பொருட்களை வாங்குகிறார்கள். விலையை சொல்லவே வெறுப்பாக இருக்கிறது'' என்று மளிகைக்கடை மற்றும் பிற கடைக்காரர்கள் கூறுவதை கேட்டோம்.

''நூற்றுக்கு ஐம்பது பேர் 'அயர்ன்' பண்ணி சட்டை போடுவதையே' நிறுத்திவிட்டார்கள்'' என்று தெருத்தெருவாய் துணிகளை தேய்த்துக் (அயர்ன் செய்து) கொடுப்பவர் கூறுகிறார்.

''கோழிப்பண்ணை நடத்துவதையே நிறுத்திவிடலாம் என்றிருக்கிறேன்; தீனி முட்டைகள் எல்லாம் விலை ஏறிப் போச்சு'' என்று புலம்புகிறார் கோழிப்பண்ணை உரிமையாளர்.

மாணவர் பகுதியில் ஒருபகுதியினர் ''நோ கமெண்ட்ஸ்'' (கருத்து ஏதுமில்லை) ''கிரிக்கெட் பேட் (மட்டை) விலைதான் எங்களை பாதித்துள்ளது'' என்று சொன்னபோது சிரிப்பாகவும் மேலும் மக்களின் வாழ்க்கையை பற்றி அரிச்சுவடி கூட தெரியாத நிலை கண்டு வேதனைப்பட்டோம்.



படிப்பகம்

www.padippakam.com

# ற்றம்:

# வேசம்

இப்படி பலதரப்பு மக்களும் பாதிப்பின் விபரீதத்தை வாய்விட்டு அழாத குறையாகக் கூறினர். ஒரு விவசாய குடும்பத்தில் கருத்துக்களை கேட்டுக் கொண்டிருந்த போது அந்த வீட்டிலிருந்த பெண் வறுமையின் தாக்கத்தை அழுது வெளிப்படுத்தினார்; கருத்து கேட்ட எங்களையும் துயரத்தில் ஆழ்த்தினார்.

காங்கிரசு கட்சியும், ஜெயலலிதா ஆட்சியும்தான் முக்கிய காரணம் என்றும் அதிகாரிகளின் லஞ்சம், ஊழல், வியாபாரிகளின் பதுக்கல், விலை மோசடி, அரசியல்வாதிகளின் ஆடம்பர செலவினங்கள், பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி, ஆட்சியாளர்களின் திறமையின்மை, அதனால் தான் விலைவாசி ஏறுகிறது; இப்படிப் பல காரணங்களை கூறுகின்றனர். உண்மைக்கு வெகு நெருக்கமாகவே மக்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தோம்.

இந்த விலையேற்றத்திலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப ஜெயலலிதாவும், காங்கிரசு கும்பலும், செய்த மோசடி வித்தைகளை மக்கள் சரியாகவே அடையாளம் கண்டிருந்தனர். விலையேற்றத்திற்கு மத்திய அரசுதான் காரணமென ஜெயாவும், மாநில அரசுதான் காரணமென வாழப்பாடி கும்பலும் ஆடும் நாடகத்தை "இதை எல்லாம் சொல்லி ஏமாற்றுகிறார்கள். ஊரை ஏமாற்ற இப்படி நாடகமாடுகிறார்கள்" என்று புரிந்து வைத்துள்ளனர்.



"மக்கள் மீதே சுமையை வைக்கிறார்கள். அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விட்டார்கள். தலைவர்களின் ஆடம்பரம் குறையவில்லை. யாருடைய நலனுக்காக இருக்கிறார்கள்?" என்று ஆத்திரத்துடன் கேட்டனர் பலர். காங்கிரசு கும்பல் தரும் போதனைகளை குப்பையில் தள்ளுகிறார்கள் மக்கள். "மக்களை தாங்கிக் கொள்ள சொல்வதற்கு இவர்கள் ஏன் ஆட்சிக்கு போகவேண்டும்? எல்லாரையும் கடனாளியாக்கி விட்டனர். தாங்கக்கூடிய அளவுக்குத் தான் தாங்கமுடியும். தாங்கிக்கணும் என்று சொல்வதற்குப் பதில் பட்டினி கிடந்து சாகச் சொல்வதுதானே அர்த்தம். என்னைப் போல கூலி வேலை செஞ்சா இவனுங்களுக்கு தெரியும்" என்று பலர் வெடித்தனர். "நெருக்கடிய சமாளிக்க முடியாதவனுங்க ஏன் ஆட்சிக்கு வரணும்; 1000 கார் ஆடம்பரங்களை அடிச்சி விரட்டணும்" என்று முழங்கவும் தயங்கவில்லை.

விலையேற்றம் இனியும் குறையும் என்ற நம்பிக்கை இழந்துள்ளனர். "விலையை குறைக்க வேண்டாம். இப்பொழுது உள்ளதை அப்படியே நீடித்தால்கூட உயிர் பிழைத்து விடுவோம்" என்று கூறி ஆட்சியாளர்கள் மீதே நம்பிக்கை இழந்துள்ளனர்.

"இனிமே குறையாது. சிக்கனமாக இருக்க வேண்டியுள்ளது. கடனாளியாகத் தான் வேண்டும். வயிற்றை கட்டித்தான் சமாளிக்க வேண்டும். ஏறிய விலை இறங்கியதாக சரித்திரம் இல்லை. கஷ்டப்பட பழகிக் கொள்ளவேண்டும்.முடிஞ்ச வரைக்கும் பார்ப்போம். ஆண்டவன் விட்ட விதி; எப்படி எப்படியோ சமாளிக்கிறோம். வருமானம் உயர வழியே இல்லை; ரசம் சோறு சாப்பிடுறத தண்ணி சோறா சாப்பிடணும்; உயிர் வாழ்றதே கஷ்டம். இருவேளையை ஒருவேளையா குறைக்கணும்" இப்படி ஏறிய விலையேற்றத்தின் பாதிப்புகளை சமாளிக்க பலவழிகளை பெரும்பான்மையினர் கூறுகின்றனர்.

"நம்பிக்கையுடன் இருக்கிறோம். கடவுளை வேண்டுகிறோம். கழுதை பொதி சுமப்பதுபோல் சுமந்துதான் ஆகணும். எதிர்காலம் பற்றி நம்பிக்கையில்லை. விலைவாசி உயர்வு தலைக்கு மேலே போய் கொண்டு இருக்கிறது; உழைப்பாளி என்ன செய்யமுடியும்" என்று தங்கள் இயலாமையை வெளிப்படுத்தினர். பலர்.

இப்படியே நெருக்கடி தொடர்ந்தால், "மனிதனை மனிதன் அடித்து சாப்பிடுற நிலைதான் வளரும், பட்டினி பசியோட கிடந்து சாகவேண்டிய நிலை ஏற்படும்; திருட்டு வளர்ந்துவிடும். சமாளித்து பார்க்கலாம். இல்லையேல் சாகவேண்டியதுதான்" என்று விரக்தியோடு இருண்ட எதிர்காலத்தையே சிலர் பார்க்கின்றனர்.

"இனிமே எந்த ஆட்சி வந்தாலும் தீராது; ஓட்டுக் கட்சியே வேணாம்; ஓட்டை புறக்கணிக்க வேண்டும்; ஜெயலலிதா ஆட்சிய கலைக்கணும்; பேராசைக்காரன்கள் அரசியலுக்கு வரக்கூடாது"— இப்படி தேர்தல் மீதும், ஓட்டுக் கட்சிகள் மீதும் நம்பிக்கை இழந்துள்ளனர்.

படிப்பகம்

தி.மு.



இப்படியே நெருக்கடி தொடர்ந்தால் மனிதனை மனிதன் அடித்து சாப்பிடுகிற நிலைதான் வளரும். பட்டினி பசியோட கிடந்து சாகவேண்டிய நிலை ஏற்படும்.

க.வை மீண்டும் வரவேண்டும் என்றோ, ஆட்சி செய்கிறவர்களிடத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் நன்றாக ஆள முடியும் என்றோ நம்பிக்கையில்லை.

"இராணுவம், (அ) கம்யூனிஸ்ட் ஏதாவது ஒன்று வரணும்; இராணுவ ஆட்சி வந்தா தப்பு பண்றவங்கள சுட்டு கொன்னுடு வாங்க. எமர்ஜென்சி தேவை" இப்படி புலி வாயிலிருந்து மீண்டு சிங்கத்தின் வாயில் மாட்டுவதற்கு, மீண்டும் ஒரு புதுவகையான அடிமைத்தனத்தை எதிர்பார்க்கின்றனர். எனினும் கட்டுப்பாடு மிக்க அதிகாரம் வர வேண்டும், நல்லது நடக்கவேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையிலேயே இந்த கோரிக்கை எழுகிறது.

போராட்டத்தின் தீர்வாக, "10 பேர் ஒண்ணு சேர்ந்து போராடினால் மாற்றலாம். பொதுமக்கள் ஏதாவது செய்யணும்; எதிர்ப்பு காட்டவில்லையென்றால் இன்னும் விலைவாசி ஏறும். ரஷ்யா உடைஞ்ச மாதிரி உடைஞ்சிவிடும். அரசை மாற்ற வேண்டும். பேராசைக்காரன் அரசியலுக்கு வரக்கூடாது" — இப்படி கணிசமான பகுதியினர் முடிவுக்கு வந்துள்ளனர்.

"எல்லாவற்றிலும் கட்டுப்பாடு வேண்டும். கறாரான அதிகாரம் வேண்டும். இளைஞர்கள் திரண்டெழுந்து போராட வேண்டும்" — இப்படியும் மேலே சொன்ன கருத்துக்களை ஊக்கமளிக்கும் வகையில் பேசுகின்றனர்.

www.padippakam.com




● *'இடஒதுக்கீடு மோசடிகள்: திராவிடக் கட்சிகளை அம்பலப்படுத்தும் மண்டல்' என்ற கட்டுரையை புதிய ஜனநாயகத்தில் படித்தேன். என்ன? நாம் படிப்பது 'துக்ளக்'கா? என்று எனக்கு சந்தேகம் வந்துவிட்டது.*

*பார்ப்பனரல்லாத உயர் சாதியினருக்கும் இடஒதுக்கீடு தரப்பட்டதை விமர்சிக்கிறீர்கள். அவர்களும் கல்வி மறுக்கப்பட்டவர்கள் தான் என்பதை உங்களால் மறுக்க முடியுமா? கம்யூனிஸ்டுகள் என்றால் ருஷ்ய நூல்கள் மட்டுமல்ல, இந்த மண்ணின் வரலாறும் படித்துத் தெரிந்திருக்க வேண்டாமா?*

*திராவிடக் கட்சிகள் இடஒதுக்கீட்டில் மோசடி செய்ததாக எழுதும் உங்கள் 'புதிய ஜனநாயகம்' - யாருக்கு? என்று குறிப்பிடவில்லையே, ஏன்?*

Socially and educationally backward *(சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின்தங்கியவர்கள்)* economically backward *(பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்கள்) என்ற இரண்டு பதங்களையும் பார்ப்பனர்கள் தெரிந்தே வேண்டுமென்றே குழப்புகிறார்கள். 'புதிய ஜனநாயக'முமா? முன்பொரு முறை 'புதிய ஜனநாயகம் என்பது புதிய பார்ப்பனியமே' என்று 'உண்மை' எழுதியபோது நான் நம்பவில்லை. இப்போது அது உண்மைதானோ? என்று தோன்றுகிறது.*

*மண்ணோடு பொருந்தாத உங்கள் கொள்கைகளை இந்த மக்கள் எப்படி ஏற்பார்கள்? 'நெல்லை ஜெபமணி' போன்று துக்ளக்கிலும், ஜூ.வி.யிலும் கூட நீங்கள் எழுதலாமே?*

*— ந.அப்துல் ரகுமான், சென்னை-14.*

★ இடஒதுக்கீடு பிரச்சினையில் திராவிடக் கட்சிகளின் மோசடிகளை அம்பலப்படுத்துவதால்தான் மண்டல் கமிசன் அறிக்கையை முழுமையாக தமிழில் தி.க. வெளியிடவில்லை என்பது நமது விமர்சனம். இவ்விமர்சன அடிப்படையில் திரு ந.அப்துல் ரகுமான் தி.க.வின் 'உண்மை' ஏட்டிற்கு கேள்வி கேட்டார். அப்படி இல்லை என்றும், சம்பந்தப்பட்ட பகுதிகளை புதிய ஜனநாயகமே வெளியிடலாமே என்று 'உண்மை' கேட்டது. அதை ஏற்று நாமும் அப்பகுதிகளை வெளியிட்டோம்.

மண்டல் அறிக்கையை முழுமையாகத் தமிழில் தி.க. ஏன் வெளியிடவில்லை என்பதற்காக நாம் சொன்ன காரணத்தை நிருபித்துள்ளோம். நமது விமர்சனத்தை மறுக்காது, அதை அங்கீகரிக்கும் வகையில் பார்ப்பனரல்லாத உயர்சாதிக்கான இடஒதுக்கீட்டை நியாயப்படுத்தும் அடுத்தகட்ட விவாதத்துக்கு இழுப்பதற்காக திரு. ந.அப்துல் ரகுமானுக்கு நன்றி சொல்லுவோம்.

பார்ப்பனரல்லாதோர், பிற்படுத்தப்பட்டவர் என்கிற பெயர்களில் உண்மையில் உயர்சாதி, அதிலும் மேட்டுக்குடியினரது இடஒதுக்கீட்டிற்காக்வே திராவிடக் கட்சிகளும், அவற்றின் முன்னோடியான நீதிக்கட்சியும் பாடுபட்டு வந்தன. இதுதான் இந்த மண்ணின் வரலாறு. இதை நாங்கள் மட்டும் சொல்லவில்லை; மண்டல் கமிஷன் ஆய்வறிக்கையே சொல்லுகிறது; அதற்கு முந்தைய சட்டநாதன் கமிஷன் முடிவுகள் உறுதி செய்கின்றன.

பார்ப்பனரல்லாத அனைவரும் சூத்திரர்கள்தாம்; கல்விரீதியிலும், சமூக ரீதியிலும் ஒடுக்கப்பட்டவர்கள்தாம்; இடஒதுக்கீட்டிற்கு உரிமை உடையவர்கள் தாம் என்கிற தி.க., அதன் சார்புடையவர்கள் வாதத்தை மண்டல் மற்றும் சட்டநாதன் கமிஷன்கள் ஏற்கவில்லை; அவ்வாதத்தை மறுத்து நிராகரித்து விட்டன. இதைச் சொல்வதற்காக ''புதிய ஜனநாயக''த்தைப் 'புதிய பார்ப்பனீயம்' என்று வசைபாடுபவர்கள் இதே காரணத்துக்காக மண்டலையும், சட்டநாதனையும் அவ்வாறு முத்திரை குத்தவில்லையே, ஏன்?

இந்த மண்ணின் வரலாறு தெரியாதவர்கள் என்று எம்மை ஏசுபவர்கள் என்ன சொல்கிறார்கள்? 'பார்ப்பனரல்லாத உயர் சாதியினருக்கு இடஒதுக்கீடு தரப்பட்டதை விமர்சிக்கக்கூடாது; அவர்களும் கல்வி மறுக்கப்பட்டவர்கள் என்கிறார்கள். இது உண்மை வரலாறா? திரிக்கப்பட்ட வரலாறா? அவர்களும் கல்வி மறுக்கப்பட்டவர்கள் என்றால் இங்கே மிட்டா மிராசுகளாகவும், குறுநில மன்னர்களாகவும், பேரரசர்களாகவும், பெரும் வணிகர்களாகவும் புலவர்களாகவும் புரவலர்களாகவும் வாழ்ந்தவர்கள் கல்வி, உரிமை மறுக்கப்பட்டவர்களா? இல்லை. இவர்கள் கல்வி மற்றும் சமூக உரிமை பெற்ற பார்ப்பனரல்லாத உயர்சாதிக்காரர்களா? அல்லது பார்ப்பனர்களா?

நீதிக் கட்சியின் பிதாக்களாகிய மிட்டாமிராசுகள், ஜமீன்தார்கள், குறுநில அரசர்கள், பெருவணிகர்கள் அடங்கிய பார்ப்பனரல்லாத உயர்சாதிகள் கல்வி மற்றும் சமூக உரிமை மறுக்கப்பட்டவையா? இவை தேவபாடைக் கல்வியையும் பெறுவதற்குக்கூட உரிமை பெற்றிருந்தன. இவர்கள் உண்மையில் பிற்படுத்தப்பட்ட சாதிகளை ஒதுக்கிவிட்டு பார்ப்பனரல்லாதோர் என்கிற பெயரில் இடஒதுக்கீடு மூலம் ஆதாயம் அடைந்துள்ளார்கள். இதை நியாயப்படுத்தும் திராவிடக் கட்சிகளின் மோசடியைப் 'புதிய ஜனநாயகம்' அம்பலப்படுத்துகிறது.

'புதிய ஜனநாயகம்' யாருக்கு என்று கேட்கிறார், கேள்வியாளர். பார்ப்பன மற்றும் பார்ப்பனரல்லாத உயர்சாதி ஆதிக்கத்துக்கு எதிரானது; உண்மையில் ஒடுக்கப்பட்ட மற்ற பிற சாதிகளைச் சேர்ந்த மக்களுக்கானதுதான் 'புதிய ஜனநாயகம்'. ஆனால் திராவிடக் கட்சிகளும் அவற்றின் சார்புடையவர்களும் பார்ப்பன சாதி

*பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து, அதற்காக 'தடா', தேசியப் பாதுகாப்பு சட்டம், அரசு துரோக சதிவழக்குகள் என்று பார்ப்பன - பாசிச அடக்குமுறை நம் மீது பாய்ந்திட்டபோதும் பார்ப்பனரல்லாத உயர்சாதிகளுக்கு வக்காலத்து வாங்காததற்காக அவற்றின் ஆதிக்கத்தையும் எதிர்ப்பதற்காக நம்மீது ''பார்ப்பன'' முத்திரை குத்துகிறார்கள். இதன் மூலம் இவர்கள் பார்ப்பனரல்லாத உயர்சாதிகளுக்காக மட்டுமே நிற்கிறார்கள் என்பது தெரியவில்லையா?*

ஆதிக்கத்தை மட்டுமே எதிர்க்க வேண்டும், அதோடு பார்ப்பனரல்லாத உயர்சாதி ஆதிக்கத்தை எதிர்ப்பதென்பதெல்லாம் பார்ப்பன ஆதரவுதான் என்கிறார்கள். உண்மையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டு பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து, அதற்காக 'தடா', தேசியப் பாதுகாப்பு சட்டம், அரசு துரோக சதிவழக்குகள் என்று பார்ப்பன - பாசிச அடக்குமுறை நம் மீது பாய்ந்திட்டபோதும் பார்ப்பனரல்லாத உயர்சாதிகளுக்கு வக்காலத்து வாங்காததற்காக அவற்றின் ஆதிக்கத்தையும் எதிர்ப்பதற்காக நம்மீது ''பார்ப்பன'' முத்திரை குத்துகிறாகள். இதன் மூலம் இவர்கள் பார்ப்பனரல்லாத உயர்சாதிகளுக்காக மட்டுமே நிற்கிறார்கள் என்பது தெரியவில்லையா? அதாவது பார்ப்பனரல்லாத உயர்சாதிகளை ஆதரிக்கிறார்களா இல்லையா என்பதுதான் இவர்களது அளவுகோலாக இருக்கிறது; பார்ப்பன எதிர்ப்போ, உண்மையில் ஒடுக்கப்பட்ட மக்களை ஆதரிப்பதோகூட இவர்களது அளவுகோலாக இல்லை என்பது தெரியவில்லையா? இவர்கள் பார்ப்பன - பாசிச கும்பலுடன் சமரசம் செய்து கொள்வதும், பார்ப்பனரல்லாத உயர்சாதிகள் உண்மையில் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்குவதைக்

படிப்பகம்

www.padippakam.com

கண்டு கொள்ளாமலும் இருப்பது இதை மேலும் தெளிவுபடுத்தவில்லையா?

இடஒதுக்கீடு குறித்துப் பார்ப்பன மற்றும் பிற உயர்சாதி இந்துக்கள் மூன்று விதமான நிலைப்பாடு எடுக்கின்றனர். ஒன்று: இடஒதுக்கீடு என்பதே கூடாது; தகுதி, திறமை அடிப்படையிலேயே கல்வி, வேலை வாய்ப்புகள் தரவேண்டும் என்பது. இரண்டு: பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு மட்டுமே இடஒதுக்கீடு செய்து தரவேண்டும்; ஏனெனில், கல்வி மற்றும் சமூக உரிமை இப்போது கிடையாது என்பது. மூன்று: கல்வி மற்றும் சமூக ரீதியிலானவற்றோடு பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளதையும் அடிப்படையாக வைத்து இடஒதுக்கீடு செய்யவேண்டும் என்பது. இடஒதுக்கீடு - மண்டல் அறிக்கையின் தீவிர ஆதரவாளர்களாகக் காட்டிக் கொள்ளும் சில ''மார்க்சிய - லெனினியக் குழுக்கள்'' கூட இந்த மூன்றாவது நிலைப்பாட்டைத் தான் எடுத்துள்ளன. ஆனால் ''புதிய ஜனநாயகம்'' மேற்படி மூன்று நிலைப்பாடுகளை ஏற்கவில்லை; எதிர்த்து அம்பலப்படுத்தி வருகிறது.

> *பார்ப்பனரல்லாத அனைத்துச் சாதிகளும் சூத்திர சாதிகள்தாம் என்றால் சத்திரிய மற்றும் வைசிய வருணங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை இங்கே செய்து வந்தவர்கள் யார், யார்? இந்தத் தொழில்களைச் செய்து வந்தவர்களுக்கும் கல்வி மற்றும் சமூக உரிமைகள் மறுக்கப்பட்டனவா?*

சமூக ரீதியிலும், கல்வி ரீதியிலும் பின்தங்கியவர்களுக்கு இடஒதுக்கீடு என்பதுதான் அரசியல் சட்டத்தில் உள்ளது; இதுதான் சரியானது; இவ்விரு அடிப்படைகளில் எது ஒன்றையும் புறக்கணிக்கக் கூடாது என்பதுதான் திராவிடக் கட்சிகள், அவற்றின் சார்புடையவர்களது நிலைப்பாடு. இதைப் 'புதிய ஜனநாயகம்' எதிர்க்கவில்லை. கல்வி மற்றும் சமூக ரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள் - உரிமை மறுக்கப்பட்டவர்கள் தான் இடஒதுக்கீடு கோரும் உரிமை உடையவர்கள் என்றே கூறிவந்திருக்கிறோம். இந்த விவகாரத்தில் திராவிடக் கட்சிகள் அவற்றின் சார்புடையவர்களுக்கும் ''புதிய ஜனநாயக''த்திற்கும் இடையிலான வேறுபாடு எந்தெந்த சாதிகள் சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் ஒடுக்கப்பட்டவைகள் - உரிமை மறுக்கப்பட்டவைகள், இதை எப்படித் தீர்மானிப்பது என்பதுதான்! அப்படி இருக்கும் போது பார்ப்பனர்களைப் போலவே குழப்புவதாகவும், 'புதிய ஜனநாயகம் என்பது புதிய பார்ப்பனீயமே' என்று எழுதுவதும் வெறும் அவதூறும், பொய்யும்தான்!

எந்தெந்த சாதிகள் உண்மையில் சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் ஒடுக்கப்பட்டவை - உரிமை மறுக்கப்பட்டவை என்கிற நமது கேள்விக்குப் பதிலளிக்கவில்லை; பார்ப்பனரல்லாத உயர்சாதிகளை அப்படிக் கருத முடியாது என்கிற நமது நிலைப்பாட்டுக்குத் தகுந்த பதிலும் அளிக்கவில்லை. அதற்கு மாறாக அக்கேள்வி எழுப்புவதற்காகவே, பார்ப்பனரல்லாத உயர்சாதிகள் கூட இடஒதுக்கீட்டிற்குத் தகுதியற்றவை எனச் சொல்வதாலேயே பார்ப்பன முத்திரை குத்துவது ஏன்? இந்த நாட்டின் உண்மையான பிற்படுத்தப்பட்டவர்களான சூத்திர சாதிகளையும், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களையும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதற்காக அவர்களின் கல்வி மற்றும் சமூக உரிமைகளை மறுப்பதில் பார்ப்பன சாதியோடு மற்றபிற பார்ப்பனரல்லாத உயர்சாதிகளும் கூட்டுசேர்ந்து இவ்வளவு காலமும் ஆதாயம் அடைந்து வந்தன. இப்போது இச்சாதிகள் பார்ப்பனரல்லாதோர் என்கிற முகாமுக்குள் புகுந்துகொண்டு ஆதாயம் அடைவதோடு, பார்ப்பனரோடு அதிகாரப் பதவிப் போட்டியில் இறங்கியுள்ளன. ஏதோ பார்ப்பனரல்லாதோர் அனைவருக்குமான வகுப்புரிமைப் போர் நடத்துவதாக ஏய்க்கின்றனர். இந்த உண்மையை மண்டல் மற்றும் சட்டநாதன் கமிஷன்களின் ஆய்வறிக்கைகளது முடிவுகளே நிரூபிக்கின்றன. இதைச் சொல்வதற்காகத்தான் ''புதிய ஜனநாயக''த்தின் மீது பார்ப்பன முத்திரை குத்தப்படுகிறது.

**இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் கல்வி மற்றும் சமூக உரிமை மறுக்கப்பட்டவர்கள் என்கிற முறையில் தாழ்த்தப்பட்ட பழங்குடி சாதிகளோடு சூத்திர சாதிகள் தாம் இடஒதுக்கீடு கோருவதற்கான உரிமை உடையவர்கள் என்பதே சரி. ஆனால் பார்ப்பனரல்**லாத அனைத்துச் சாதிகளும் சூத்திர சாதிகள்த[illegible] சமூக உரிமை மறுக்கப்பட்டவை தாம்; தமிழ்நாட[illegible] வரை பார்ப்பனர், சூத்திரர் ஆகிய இரண்டு வருணங்[illegible] தன என்று திராவிடக் கட்சிகளும் அதன் சார்புடையவர்[illegible]டுவது சரியா? உண்மையா? பார்ப்பனரல்லாத அனைத்து[illegible]ளும் சூத்திர சாதிகள்தாம் என்றால் சத்திரிய மற்றும் வைசிய[illegible]ணங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை இங்கே செய்து வந்த[illegible]கள் யார், யார்? இந்தத் தொழில்களைச் செய்து வந்தவர்களுக்கும் கல்வி மற்றும் சமூக உரிமைகள் மறுக்கப்பட்டனவா? இல்லை. மிட்டாமிராசுகள், ஜமீன்தார்கள், குறுநில அரசர்கள் முதல் பேரரசர்கள் வரையிலான பெருநிலப் பிரபுக்களாகவும் பெருவணிகர்களாகவும், பெரும் மடாதிபதிகளாகவும் இருப்பதற்கு சூத்திரர்கள் இங்கே மட்டும் அனுமதிக்கப்பட்டார்களா? பேரறிஞர் என்று கூறிக்கொள்ளும் அண்ணாத்துரை சேர, சோழ, பாண்டிய, பல்லவப் பேரரசர்களைச் 'சூத்திர ராஜாக்கள்' என்று கூறிப் பித்தலாட்டம் செய்தாரே அதை ஏற்பதா? சூத்திர சாதிகளுக்கென விதிக்கப்பட்ட சமூக நியதிகள் என்று பெரியார் போன்றவர்களால் தொகுத்துரைக்கப்பட்ட வரையறைகள் பார்ப்பனரல்லாத இந்த உயர்சாதிகளுக்கும் பொருந்துமா? அப்படிப் பொருந்தும் என்று யாராவது நிரூபித்துள்ளார்களா? ''சூத்திரர்களாகிய தாம் தாழ்த்தப்பட்ட சாதிகளைவிட இழிவான சமூக நிலையிலிருப்பதாக'' பெரியார் உரிமை பாராட்டிக் கொண்டாரே, அது உண்மையா?

இடஒதுக்கீடு மூலம் கல்வி, அதிகார-பதவி வாய்ப்புகள் என்று வரும்போது மட்டும் இந்தப் பார்ப்பனரல்லாத உயர்சாதிகள் தாமும் கல்வி மற்றும் சமூக உரிமை மறுக்கப்பட்டவர்கள் என்று கூறிக் கொள்கின்றன. ஆனால் வெளியே சமுதாய-அரசியல் வாழ்க்கையில் மற்ற பிற சாதிகளை அடக்கி ஒடுக்கும் ஆண்டைகளுக்குரிய அதிகார உரிமை பெற்றவர்கள் என்கிற சமூகத் தகுதி பாராட்டுகின்றன. இதற்காகத் தாம் சத்திரிய, வைசிய குலங்களைச் சேர்ந்தவர்கள்; மிட்டாமிராசு, ஜமீன், குறுநில, அரச, பேரரச பாரம்பரியம் மிக்கவர்கள், பெரும் வணிகர் குல செல்வந்தர்கள் எனப் பார்ப்பனரல்லாத உயர்சாதிகள் கூறிக் கொள்வது வெற்றுப் பெருமை, பீற்றல்களுக்கானதல்ல; தொடர்ந்து தமது சமூகஒடுக்குமுறை ஆதிக்கத்தை நீட்டிப்பதற்காகத்தான். ''சூத்திர சாதிகள் என்று கூறிக் கொள்ளுங்கள். சத்திரிய - வைசிய வருண உரிமை பாராட்டாதீர்கள்'' என்று பெரியாரே கேட்டுக் கொண்டார்; ஆனால் பெரியாரின் ''அவதாரமாக''க் காட்டிக் கொள்ளும் ராமதாசு கூட தம்மை ஆண்ட பரம்பரை, சத்திரிய குலமென்று கூறிக் கொள்கிறார்.

இந்த உண்மைகளைச் சொல்வதையே பார்ப்பனரல்லதோரைப் பிளவுபடுத்திவிடும் என்றும், பார்ப்பன சூழ்ச்சி என்றும் திராவிட கட்சிகளும் அவற்றின் சார்புடையவர்களும் புதிய ஜனநாயகத்திற்கு எதிராக அவதூறு செய்கின்றனர். பார்ப்பனரல்லாதோர் ஒற்றுமை என்பதே ''அகில இந்திய ஒருமைப்பாடு'' போன்ற மோசடியானது, போலியானதுதான். உண்மையில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு எதிராக சாதி ஆதிக்கம் செய்து வரும் அதேசமயம் பார்ப்பனரல்லாத உயர்சாதிகள் அம்மக்களுடன் பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு ஒற்றுமை பேசுவதே பித்தலாட்டம் இல்லையா? பார்ப்பனரல்லாதோரைப் பிளவுபடுத்தும் கருவாக உள்ளது அவர்களின் உயர்சாதி சமூக அதிகாரம்தான். எனவேதான் பெரியார் முதல் ராமதாசு வரை பலரும் பார்ப்பனரல்லாதோர் ஒற்றுமை பற்றிப் பேசினாலும் கடந்த மாதம் நடந்த அரியலூர் - ஒகளூர் தாழ்த்தப்பட்டோர் மீதான வன்னியர் தாக்குதல் உட்பட எதையும் அவர்களால் தடுக்க முடியவில்லை.

ஆகவேதான் பார்ப்பனரல்லாத உயர்சாதிகளின் ஆதாயத்துக்காக, பார்ப்பனர்களுடனான அவர்களின் அதிகாரப் பதவிப் போட்டிக்காக அவர்களை முதுகில் சுமக்க வேண்டியதில்லை, கீழே தள்ளுங்கள் என்று ஒடுக்கப்பட்ட மக்களிடம் கூறுகிறோம். இதற்காக பார்ப்பன-பாசிச எதிர்ப்பில் வீரமணி கும்பலைப்போல ஏதாவது சமரசம் செய்து கொண்டு ஆதாயம் தேடினோமா? அப்படிச் செய்யாது பார்ப்பன-பாசிச எதிர்ப்பில் உறுதியாக இருப்பதாலேயே எமது தோழர்கள் 'தடா'விலும் 'தே. பா. ச.'விலும் வதைபடுகிறார்கள். **ஆனால் துக்ளக். ஜூ.வி.யை விட மோசமாக 'விடுதலை'யும் 'உண்மை'யும் மாறிவிட்டதையும், நெல்லை ஜெபமணியை விஞ்சி விடுமற்று பாசிச-பார்ப்பன சேவையில் வீரமணி இறங்கிவிட்டதையும் மறுக்க முடியுமா?**

படிப்பகம்

www.padippakam.com

# இருந்தால் சித்திரவதை! போனால் படுகொலை!’’

## ...திகளின் கண்ணீர் பேட்டி

... கும்பல் ஒ விரும்பியபடியே வாரம் ஒரு கப்பல் வீதம் ஈழத் தமிழ் அகதிகள் நாடு திருப்பி அனுப்பப்படுகின்றனர். ராஜீவ் கொலைக்குப் பழிவாங்கும் வகையில் ஈழத் தமிழ் அகதிகளை சிங்கள இனவெறியர்களிடம் பலிகடாக்களாக விரட்டுவது என்பது தான் அவர்களது ஆரம்ப நோக்கமாக இருந்தது. அகதிகளிடையே புலிகள் ஊடுருவியிருக்கிறார்கள்; அகதிகளால் இங்கே சட்டம்-ஒழுங்கு கெடுவதோடு பயங்கரவாத ஆபத்து ஏற்படும்; அகதிகளைப் பராமரிக்க முடியவில்லை என்று பல காரணங்கள் சொன்னார்கள். இப்போது இலங்கையில் இயல்புநிலை திரும்பிவிட்டது; ஈழ அகதிகள் தாம் விரும்பியே நாடு திரும்புகிறார்கள் எனச் சொல்கிறார்கள்.

இப்போது மீண்டும் இலங்கை அரசியலில் தீவிரமாகத் தலையிட்டு ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துக்காக ஈழத்தமிழ் அகதிகளைப் பலியிடுவதென இந்திய அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நோக்கத்தோடுதான் ஈழத்தின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அகதிகளை அனுப்புவதில் குறியாக இருக்கிறது. ஏனெனில் புலிகளுக்கு வடக்கிலும், ஈழத் துரோகிகள் கிழக்கிலும் முன்பு வலுவாக இருந்தனர் என்பது தெரிந்ததே. அதோடு இதுவரை அனுப்பப்பட்ட அகதிகளில் பெரும்பான்மையினர் கிழக்கு மாகாணத்தில் முன்பு அரசு அதிகாரிகள்-ஊழியர்களாகவும்; ஈழத் துரோக அமைப்பாளர்களாகவும் இருந்தவர்களும் அவர்களது குடும்பங்களும் ஆகும். இவர்கள்தாம் சுய விருப்பத்துடன் இலங்கை திரும்புவதாகவும், இந்திய அரசு இதுவரை செய்துவந்த உதவிகளுக்கு நன்றி பாராட்டுவதாகவும் கூறியுள்ளனர்.

உண்மையில் ஈழத் தமிழ் அகதிகளில் பெரும்பான்மையினரது கருத்து இதற்கு மாறானது. அவர்கள் எத்தகைய நிலைமைகளில் இங்கு அகதிகளாக வரநேர்ந்தது; இங்கு எப்படி நடத்தப்பட்டனர்; இங்கிருந்து வெளியேறும்படி எப்படி நிர்பந்திக்கப்படுகின்றனர் என்பதை சமீபத்தில் சில முகாம்களுக்குச் சென்று நமது பெண் தோழர்கள் இருவர் எடுத்த பேட்டிகள் தெளிவுபடுத்துகின்றன. அப்பேட்டிகளை இங்கே வெளியிடுகிறோம்.

**இலங்கையில் திரிகோணமலையில் பக்கத்தில் ஒரு கிராமம்; இது அங்கு நடந்த கண்ணீர்க் கதை.**

அங்கு இந்திய ராணுவத்திற்கும் எல்.டி.டி.ஈ.க்கும் மெயின் ரோட்டில் மோதல் நடந்தது என்ர மகள் பிரசவத்திற்கு துடிச்சுக் கொண்டு இருக்கிறா. தனியா ஆம்பிளை வெளியவும் போக முடியாத சூழ்நிலை. மருமகனையும் என்ர மகளையும் அனுப்பி வைச்சனான். பிள்ளைகள் ஆஸ்பத்திரி போற வழியிலதான் சண்டை நடக்கிறது. மருமகன் சரி காட்டு வழியாகப் போகலாம் என்று பிள்ளையை கூட்டிக்கொண்டு போயிருக்குது. பிள்ளைக்கு வழியிலேயே வலி கூடிப்போச்சுது. அந்தக் காட்டுக்குள்ளேயே பிள்ளையும் பிறந்திட்டுது. பெடியன் வந்து எங்களிட்ட சொல்லலாம் என்று நினைத்தாலும் வந்து சொல்ல முடியாத நிலை. கடைசியா தாயும் பிள்ளையும் மருத்துவ வசதி இல்லாததால் செத்துப் போயிற்றுதுகள். மருமகன் கத்திக் குளறிக் கொண்டு பிணத்தையும் தூக்கிக் கொண்டு வருது. துவக்கு சத்தத்தையும் குண்டு சத்தத்தையும் மீறி ஒப்பாரி அழுகைக் குரல் மேலோங்கி கேக்கிறது. இறந்துபோன தாய்க்கு ஏற்கனவே ஒரு பெண் குழந்தை 6 வயதில் உள்ளது. என்னடா எல்லோரும் கத்திக் கொண்டு இருக்கிறார்களே என்று வந்து பார்த்ததும் அதுவும் சேர்ந்து அழுகிறது. இதைக் கண்ட தந்தை என் நெஞ்சே வெடிச்சிரும் போல உள்ளது என்று அப்பிள்ளையை தூக்கி மேலும் அழுகிறார், புலம்புகிறார். இனியும் நாம் இங்க இருந்தால் இன்னும் என்னவெல்லாம் நடக்குமோ வெளிக்கிடுங்க. இந்தியாவுக்கு போகலாம் என்று கிளம்பி விட்டோம். எங்கள் எல்லோரையும் அனுப்பி போட்டில் ஏத்திவிட்டு மருமகனே போட்டையும் ஓட்டிக்கொண்டு வந்து நாகப்பட்டினம் கரையில் விட்டுவிட்டு அந்த பிள்ளையை எங்களிடமே விட்டுவிட்டு, கவனமாய் பார்த்துக் கொள்ளுங்கள் மாமி என்று சொல்லிவிட்டு பிள்ளையை தூக்கி கொஞ்சிவிட்டு போன பெடியன் தான்; இன்னும் அவன் எங்கு இருக்கிறானோ தெரியவில்லை. செத்திட்டானோ உயிரோட இருக்கிறானோ தெரியவில்லை.

இப்ப வளந்து பிள்ளைக்கு 9 வயது. எங்களிடம் கேக்குது, ஏன் என்ர அம்மாவும் அப்பாவும் என்னோட இல்ல. அவங்கள வரச்சொல்லி கடிதம் போடுங்க அம்மம்மா என்று ஒவ்வொரு நாளும் என்னை பிச்சுப் புடுங்குது. நான் அழத்தான் முடியும். வேற என்ன சொல்லமுடியும். ஒருநாள், கேம்பில் கோயில் ஒண்டு இருக்குது. அங்க போய் சாமிகட்ட மன்றாடியிருக்குது. ஏன் என்னை எங்கட அம்மாட்ட சேர்த்து வைக்க மாட்டேன்குற: நான் என்ர அம்மாவையும் அப்பாவையும் தங்கச்சியையும் பாக்கனும். நீ எனக்கு காட்டாட்டி நான் இதே இடத்தில் வந்து செத்துப் போயிருவேன் என்டு அழுதுள்ளது. இதைப் பார்த்தவர்கள் போய் சொல்லியிருக்கிறார்கள். கோயிலுக்கிட்டே உங்க பேத்தி அழுதுகொண்டு இருக்குது என்டு. நான் போறேன். அங்க கண்ணை துடைச்சிட்டு நான் அழேல்லணை, நானேன் கத்தோணும். நீ இருக்க: சும்மா வாணே என்று எனக்கு சமாதானம் சொல்லி கூட்டிக் கொண்டு வந்துவிட்டது. நான் வீட்டில வந்து சொன்னன், அடியே உன்ர அம்மா (பெரியம்மாவைக் காட்டி) இவ தானடி. நீ ஏன் வேற என்னமோ நினைச்சுக் கொண்டு இருக்கிற எண்டு. இவ இல்ல, என்ர அம்மாவ எனக்கு தெரியும். அப்ப ஏன் இவயெல்லாம் கறுப்பா இருக்கினம். நான் வெள்ளையா என்ர அம்மா மாதிரி இருக்கிறன். நீ பொய் சொல்லுற என்டு மீண்டும் அழுதுள்ளது.

இந்த பச்சப் பிள்ளைக்கு இந்திய அரசாங்கம் பதில் சொல்லி ஆகனும். சரி ஆம்பிளப் பிள்ளைகளை அங்க வைச்சிருந்தா இலங்கை ராணுவம் வந்து கூப்பிடும். இல்ல பெடியங்களை எல்.டி.டி.இ.ஆர் வந்து கூட்டிக் கொண்டு போயிடுவாங்க என்று பயந்து பிள்ளைகளை இந்தியாவுக்கு கொண்டு வந்தோம். இங்க என்னடா எண்டா, மண்ணாப் போவான் ராஜீவ் செத்ததால் பிள்ளைகளையெல்லாம் தேடிப்புடிச்சு சிறையில் அடைக்கிறார்கள். சரி, கலியாணம் முடிச்சு வைச்சாலும் பிள்ளை பிளைச்சிடுவான் எண்டு கல்யாணம் செய்து வைச்சேன். ஆரோ ஈ.பி.ஆர்.எல்.எஃப். பெடியன்கள் போலீசில சொல்லியிருக்கிறான், என்ர பிள்ளை எல்.டி.டி.ஈ.க்கு சப்போட் எண்டு. மறுநாளே போலீஸ் வந்து நிக்குது. எங்க உன் மகன், உடனே எங்களோட அனுப்பிவை, இல்லை என்ன நடக்குமோ தெரியாது எண்டு மிரட்டினான்.

ஏன் பிள்ளையைத் தேடுறீங்க, அவன் நல்லபிள்ளை, வம்பு எதுக்கும் போக மாட்டான், நல்ல பிள்ளை என்று சொல்ல, ஆ... தெரியும் தெரியும் என்று சொல்லிவிட்டு. உடனே வந்ததும் அவனை வரச் சொல் எண்டு போய் விட்டான், மறுநாள் வேன் நிறைய போலீஸ் வீட்டை வட்டம் போட்டுவிட்டது. கியூ பிராஞ்ச், ஸ்பெஷல் பிராஞ்ச் எல்லோம் ஆள் மாறிஆள் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கிறாங்கள். பிறகு போய் விட்டனர். என்ர மகன் பிறகு வீட்டுக்கு வந்தான். நாங்கள் நடந்ததை சொல்லவும் சரி, நான் போலீஸ் ஸ்டேசன் போயிட்டு வாறன் எண்டு பிள்ளை வெளிக்கிட்டுது. பின்னால நானும் இவன்ர அப்பாவும் பொண்டாட்டி எல்லோருமே ஸ்ரேசன் போனோம். ஆ... வா... நீதான் சூரி... யா.. யா... என்று எகத்தா

படிப்பகம்

www.padippakam.com

ளமாக கேலியாக பேசியுள்ளான். நீ ஏதோ நல்ல வளத்தியா, குண்டா இருப்பாய் என்று நினைத்தேன். பாவம் நீ என்றான். என்னங்கையா விசயம் என்று கேட்க லாக்கப்பில் வைத்துவிட்டது. என்னையும் இவரையும் அடிச்சு கிழட்டு நாய்களா எண்டு இன்னும் கேவலமா பேசி சிரித்து கொட்டமடித்தது இந்தப் போலீஸ். 'கியூ' பிராஞ்ச்கூட இந்த மாதிரிதான்.

☆ ☆ ☆

இப்ப கூட அந்த அம்மா எங்களிடம் பேசும்போது அந்த வயதானவர் வாட்ட சாட்டமான ஆள் யாரையும் பார்த்தால். மீசையையும் பார்த்து விட்டு சாதாரண ஆளைக்கூட போலீஸ் வருது வாயை மூடு என்று அம்மா வாயை அடைக்கிறார். அவ்வளவு பயம் வெறுப்பு. அதைப் பார்க்கும் போது எவ்வளவு வயித்தெரிச்சலாக உள்ளது. அந்தப் பையனை என்.எஸ்.ஏ. (N.S.A.) சட்டம் போட்டு திருச்சி ஜெயிலில் இருக்கிறார்.

இப்பிரச்சினைகளை பார்த்து பயந்து அங்கதான் ராணுவத்திட்டேயும் எல்.டி.டி.ஈ., ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ, இவர்களிடம் ஆண்பிள்ளைகளை பறிகொடுத்து விடுவோம் எண்டு இங்க வந்தா புதிய புதிய சட்டமெல்லாம் போட்டு ஜெயிலில் அடைக்கிறார்கள், சித்திரவதை செய்கிறார்கள். அதனால் இலங்கைக்கே போனாலும் பரவாயில்லை, எங்கட பிள்ளைகள் போராடியே சாகட்டும் என்று ஒருசிலர் இலங்கை செல்ல காரணமாயுள்ளது.

ஆண்பிள்ளைகளுக்கு பாதுகாப்பில்லை. அதனால் போகிறோம் என்று சொல்கிறார்கள்.

### இலங்கை அகதிகளின் அவலநிலை புதுக்கோட்டை மாவட்டம்

நாங்கள் இலங்கையில இருந்து வந்து இப்ப எங்கள புதுக்கோட்டை மாவட்டத்துக்கு பக்கத்து கிராமம் லேனா விளக்கு என்ற இடத்தில் வச்சிருக்கிறாங்க. அந்த கேம்பில ஒரு வசதியும் இல்லை. 'ஆஸ்பெஸ்டாஸ்' கூரை போட்டு சின்ன ரூமாக அடைச்சுக் கொடுத்திருக்கினம். வெயில் வந்தா வெளியிலயும் இருக்க முடியாது, உள்ளயும் இருக்க முடியாது. கக்கூசு பத்தாது. கக்கூசு கட்டிக் கொடுத்திருக்கிறாங்க. ஆனா தண்ணீர் 'பைப்' இல்லை. இதனால் கக்கூசு சுத்தம் இருக்காது. பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு வருத்தம் (நோய்) வந்து கொண்டே இருக்கும். எங்கட ஊரைவிட்டு இங்க வந்ததில பிள்ளைகளை அங்க 'ஆமி' யிட்டயும் (ராணுவம்) இங்க வருத்தத்திடமும் சாவு குடுத்துட்டோம். இப்படி சுத்தமில்லாம இருக்கிறதனால கிழமைக்கு ஒரு வருத்தம் வந்து கொண்டே இருக்கு. அம்மை நோய், கட்டி கட்டுது, வயிற்றாலடி, சத்தி (வயிற்றுப் போக்கு, வாந்தி) இப்பிடி வரும்.

அரிசி போடுறாங்கள். இந்த ஊர் பண்டி (பன்றி) கூட தின்னாம முகத்தை சுளிக்கும். வேற வழியில்லாம திண்டு தொலைப்போம். எப்பயாவது வெள்ளையா அரிசி போட்டா 'இண்டைக்குத் தான் பொன்னி அரிசி போட்டிருக்கினம்'



**வெளியேற்றப்படும் ஈழ அகதிகள்: இந்திய மேலாதிக்கத்துக்கு பலியாடுகளா?**

இப்ப மண்ணெண்ணை ஒரு மாசத்துக்கு 2 லிட்டர் தான். விளக்கு எரிக்கக்கூட பத்துதில்லை. திடீரென்று இலங்கைக்கு போகச் சொல்லி கையெழுத்து கேட்கிறார்கள். நாங்கள் கொடுக்கவில்லை. அங்க எங்கட வீடு, வாசலெல்லாம் அழிஞ்சு போச்சு. சிறுதொழில் செய்துதான் குடும்பம் நடத்தனும். அங்க போனா இப்போதைக்கு எங்களால பொழைக்கவே முடியாது. அங்க சாமான்கள் விலை எல்லாம் பயங்கரம். நாங்க இங்க வரும்போது எங்கட உசிரை கையில புடிச்சுக் கொண்டு வந்தோம். ஆனா இப்ப போ என்றால் நாங்கள் எங்க போறது. கையெழுத்து நாங்க போடமாட்டோம் என்று சொன்னா சொல்லுறான்கள், இப்ப போடுங்க; மேல முடிவு சொன்ன பிறகுதான் அனுப்புவேன் என்றார்கள். சரியென்று எழுதிக் கொடுத்தோம். இப்ப வந்து ஏறுங்கிறான்.

இந்தப் பிரச்சினை இப்ப வர காரணமே மண்ணாப் போவான், பாடையில போவான். அழிஞ்சு போவான் ராஜீவ் காந்திப் பயலால வந்த வந்த கேடு.

அவன் செத்த பிறகுதான் இப்ப சரியான கரச்சல். வெளியில வேலைக்கு போக விடுறான்கள் இல்லை. குடுக்கிற காசு பத்துதுமில்லை. 15 நாளைக்கு ஒருமுறை பெரியவர்களுக்கு 55, சிறுவர்களுக்கு 35 அல்லது 45 ரூபாய். இதையெல்லாம் நாங்கள் பாக்கும்போது இங்க இருந்து சாவுறத காட்டிலும் அங்க போயி சாவலாம் என்ற முடிவுக்கு நாங்களும் வரவேண்டியிருக்குது. ராஜீவ் காந்தி செத்தத கேட்டதும், நாங்கள் திடீரென்று சாமான் சட்டு, புள்ளை குட்டிகளை அள்ளிக் கொண்டு பொலிஸ்டேசனுக்கு ஓடினோம். போய் எங்களுக்கு பாதுகாப்பு கொடுங்க, ஊர்க்காரங்க எங்களை ஏதும் பண்ணிடப் போறாங்கன்னு; உடன அவன் ஒரு கிழட்டுப் பொலிச எங்களோட அனுப்பி திரும்ப கேம்புக்கு போகச் சொன்னான். நாங்கள் செத்தா சாவோம். இருந்தால் இருப்போம் என்று போனோம். அங்க காவலுக்கு வந்த கிழவன் குடிச்சிவிட்டு போதையில் நித்திரையாய்ப் (தூங்கிப்) போனான். அங்க என்ன நடந்தாலும் தெரியாது. இப்புடி எங்கள்ள கவனமே எடுக்கிறான்கள் இல்லை.

வெளியால சாமான்கள் சரியான விலை; எங்களுக்கு ஒரு மாதிரி விக்கிறான்கள், ஊர்க்காரங்களுக்கு ஒரு மாதிரி விக்கிறான்கள்; சாமான்களை விலை கூடினா எங்களை திட்டுகிறார்கள். நீங்கள் வந்தபிறகு தான் விலை கூடிப் போச்சு என்கிறார்கள். இந்த நிலைமைகளை பார்க்கும்போது நாங்கள் ஊருக்கு போவதே சரியென பாக்குறோம்.

### கடிதத்தின் மூலம் அறியப்பட்ட இலங்கை நிலைமைகள்

அரிசி 1 கிலோ - 50 ரூபாய்;
சீனி 1 கிலோ - 100 ரூபாய்;
ம.எண்ணை 1 லிட்டர் - 250 ரூ;
1 சோப் - 50 ரூபாய்.

உற்பத்திக்கான அடித்தளமே நொறுக்கப்பட்ட பிறகு அத்தியாவசிய பொருட்கள் வருவதற்கான தடயமே இல்லை. தேங்காய் எண்ணெயில்தான் விளக்கு எரிக்கின்றனர். மின்சாரமே இல்லை.

சோப் இல்லாததால், தலைக்கு பனம்பழத்தின் களியை எடுத்து தலைக்கு தேய்த்து குளிக்கிறார்கள். குளித்து விட்டு வரும் போது பனங்களி வாசனைக்கு மாடு விட்டு விரட்டுமாம். அங்கால ஓடினா ஆர்மிக்காரன் துரத்துறான். இங்கால ஓடினா மாடு. எதற்கு தப்புவதென்றே தெரியவில்லை யென்று கண்ணீரோடு எழுதுகின்றனர்.

இன்னும் சாம்பல், கறையான் புற்று மண் இவையே அவர்களின் சோப்பாகவும் பயன்படுகிறது.

குறிப்பு: இவ்விலை உயர்விலும் இலங்கை மக்கள் ஏன் வாழ்கிறார்களென்றால் செஞ்சிலுவை சங்கங்கள் [illegible], குறைந்த விலையில் சாமான்கள் கொடுக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# மேலைநாடுகளில் பெருகிவரும் நிறவெறி - புதிய நாஜிக்கள்

அக்டோபர் 3-ம் நாள் கிழக்கு -மேற்கு ஜெர்மனிகள் ஐக்கியமாகி ஓராண்டு நிறைவெய்தியதை ஒட்டி ஜெர்மனியே விழாக்கோலம் பூண்டிருந்தது. திடீரென இரும்புத்தடி, பேஸ்பால் மட்டை, கட்டாரிகளுடன் மொட்டைத் தலையர்களின் கும்பலொன்று வெறிக்கூச்சலுடன் ஊர்வலமாக வந்தது. ''வெளிநாட்டு நாய்களே, நாட்டை விட்டு ஓடுங்கள்! எங்கள் வரிப் பணத்தைச் சுரண்டிக் கொழுக்கும் அடிமைநாட்டு அகதிகளை விரட்டுவோம்!'' என்று கூச்சலிட்டுக் கொண்டு வந்த அக்கும்பல், அந்நிய நாடுகளிலிருந்து அகதிகளாகக் குடியேறிய சிறுபான்மை மக்கள் மீது கொலை வெறித்தாக்குதலை நடத்தி அவர்கள் குடியிருப்புகளுக்குத் தீ வைத்தது. தங்கள் வெற்றியை விஸ்கி குடித்து மகிழ்ச்சியுடன் கும்மாளமிட்டது.

அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாக ஓடிவந்த சிறுபான்மை மக்கள் மீது இன வெறி பிடித்த நவீன நாஜிக் குழுக்கள் நடத்தும் தாக்குதல்கள் அண்மைக் காலமாக தீவிரமடைந்துள்ளன. இட்லரின் காலத்தில் இரத்தம் குடித்த ஜெர்மானியத் தெருக்கள் மீண்டும் இரத்தம் குடிக்கின்றன. இட்லரின் பாசிச ஆட்சியில் 'லாகர்''களுக்குள் யூதர்களை அடைத்து விஷவாயுவைச் செலுத்திக் கொன்றனர். இன்று இட்லரின் வாரிசுகள் தஞ்சம்கோரி வந்த மக்களின் குடியிருப்புகளுக்கு குண்டு வீசுகின்றனர். ஜெர்மானிய தெருக்களில் அந்நிய நாட்டு அகதிகள் சுதந்திரமாக நடமாட முடிவதில்லை. தங்கள் பெயர்களை வீட்டுக் கதவுகளிலிருந்து கிழித்தெறிந்தும், தங்கள் தாய்மொழி பாடல் கா௳செட்டுகளைப் போடாமலும், குழந்தைகளின் மழலையைக்கூட வாய்பொத்தி நிறுத்தி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பீதியுடனே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மனியில் கடந்த ஆண்டில் மட்டும். முதல் 7 மாதங்களில் கீழை நாட்டுச் சிறுபான்மையினர் மீது 300 தாக்குதல்கள் நடந்துள்ளன. அடுத்த இரு மாதங்களில் அது 700 ஆக அதிகரித்துள்ளது.

ஜெர்மனியில் தீவிரமாகி வரும் நவீன நாஜிகளின் ஆதிக்கமும் அட்டூழியங்களும் இப்போது மேற்கு ஐரோப்பிய நாடுகள் முழுவதும் வேகமாக வேர்விட்டுப் பரவி வருகிறது. சுவிட்சர்லாந்தில் தாய்நாட்டு முன்னணி என்ற பெயர் கொண்ட நவீன நாஜிகள் ஈராண்டுகளுக்கு முன்பு ஈழத்தமிழர் அகதி முகாமை முற்றுகையிட்டு தாக்கினர். தமது லட்சிய நடவடிக்கை வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் மரச் சிலுவை ஒன்றை எரித்து சபதம் ஏற்றனர். அமெரிக்காவிலுள்ள இன வெறியர்களின் அமைப்பாகிய ''கு குக்ஸ்கிளான்'' -இன் பாணியிலேயே இச்சிலுவை எரிப்பு நிகழ்ச்சி நடந்தது. அதன் பிறகு கடந்த ஈராண்டுகளில் கணக்கற்ற தாக்குதல்கள் நடந்துள்ளன.

பெரிய கும்பலாக இல்லாவிட்டாலும் இனவெறி பிடித்த நவீன நாஜி இளைஞர்கள் ஒரு குழுவாகத் திரண்டு பிரான்சு, இத்தாலி, ஹாலந்து, நார்வே முதலான நாடுகளில் ஏழை நாட்டு சிறுபான்மை மக்களைத் தாக்குவது அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.




நவீன நாஜிக்களின் அட்டூழியங்களைக் கண்டு பயந்து பதுங்கிக் கொள்ளும் ஆளும் வர்க்க அரசியல்வாதிகள். ஜெர்மானிய பத்திரிகையில் வெளியான கருத்துப் படம். (நன்றி: ''தூண்டில்'')

முன்னாள் போலி சோஷலிச நாடுகளான செக்கோஸ்லாவியா, ரஷ்யா முதலான நாடுகளில் கூட நவீன நாஜிக் குழுக்கள் பகிரங்கமாக செயல்படத் தொடங்கி விட்டன.

அண்மையில் செக் நாட்டில் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்த ஈழத் தமிழர்கள் மூவர் மீது 15 பேர் கொண்ட நாஜிக் கும்பல் மிருகத்தனமாக தாக்கியுள்ளது. திடீரென கண்ணீர் புகைக் குண்டை வீசி, இரும்புத் தடியால் தாக்கி மண்டையை உடைத்து விட்டு அக்கும்பல் தப்பியோடி விட்டது. நட்ட நடுவீதியில் இத் தாக்குதல் நடந்த போதிலும் அவர்களுக்கு உதவ யாரும் முன்வரவில்லை. இதற்கு முன்னர் ஒரு சீன டாக்டர் இதேபோல் தாக்கப்பட்டார்.

இந்த நவீன நாஜி மொட்டைத்தலையர்களின் லட்சியம் என்ன என்பதைப்பற்றி செக் நாட்டின் ''ப்ரோக்னோசிஸ்'' என்கிற பத்திரிகை பேட்டி கண்டது. ''அந்நிய அடையாளங்கள் ஏதுமில்லாத ஒரு தூய சமுதாயத்தை நிலவுவதுதான் எங்கள் லட்சியம்; எங்களிடம் பணமும் அதிகாரமும் இருக்குமானால், பெரிய கிடங்கு ஒன்றை அமைத்து அதில் யூதர்களையும் ஆசிய - ஆப்பிரிக்க கறுப்பின மக்களையும் போட்டு எரித்துக் கொல்லுவோம். வெள்ளையர்கள்தான் உலகை ஆள வேண்டும். நாகரீகமான தேசங்கள் மட்டுமே உலகில் வாழத்தகுதியுடையவை. மற்றவை அழிக்கப்பட வேண்டும்'' என்று அப்பேட்டியில் நவீன நாஜிகள் கூறியுள்ளனர்.

ஜெர்மனியில் நவீன நாஜிகள் புதிய அரசியல் சக்தியாகப் பரிணமித்து வேகமாக வளர்ந்து வருகின்றனர். ஜெர்மன் குடியரசுக் கட்சி (REP), தேசிய ஜனநாயகக் கட்சி (NPD), ஜெர்மன் மக்கள் ஐக்கியக் கட்சி (DVU) ஆகியன நவீன நாஜி சித்தாந்தத்தைக் கொண்டவை. குறிப்பாக, ஜெர்மன் மக்கள் ஐக்கிய கட்சி 40,000 மொட்டைத் தலையர்களைக் கொண்ட குண்டர் படையை கட்டியமைத்துள்ளது. இக்கட்சியின் சார்பில் வெளியிடப்படும் செய்தித்தாள் ஒரு லட்சம் பிரதிகளுக்கு மேலாக விற்பனையாகிறது. அண்மையில் நடந்த ப்ரீமொர்ஹெவன் நகராட்சித் தேர்தலில் இக்கட்சி 5 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. இதேபோல பவாரியாவில் நடந்த தேர்தலில் ஜெர்மன் குடியரசுக் கட்சி 14.6% வாக்குகளைப் பெற்று திடீர் வளர்ச்சி பெற்றுள்ளது.

கவர்ச்சிவாத அரசியலுடன் தேசிய வெறி — இனவெறியூட்டுவது என்கிற பாசிச இட்லரின் பாணியிலேயே செயல்படும் நவீன நாஜிக் கட்சிகள் ஐரோப்பா முழுவதும் பார்த்தீனிய விஷச் செடி போல வேகமாக வளர்ந்து வருகின்றன. ஆஸ்திரியாவில் சுதந்திர கட்சி (FPO), நார்வேயில் முன்னேற்றக் கட்சி (Fr.P), இத்தாலியில் லாம்பார்டி லீக் (LL) மற்றும் சமூக இயக்கக் கட்சி (MSI), பிரான்சில் தேசிய முன்னணி (FN), நெதர்லாந்தில் ஜனநாயக மையம் (CD), பெல்ஜியத்தில் பிலீமிஷ் பிளாக் (FB), சுவிட்சர்லாந்தில் தேசிய ஜனநாயக செயல்பாட்டுக் கட்சி (NASD) மற்றும் தாய்நாட்டு முன்னணி (NF) ஆகியவை ஐரோப்பாவில் வேர்விட்டுப் பரவிவரும் நவீன

படிப்பகம்

www.padippakam.com

நாஜிக் கட்சிகளாகும்.

ரஷியாவில் இத்தகைய நவீன நாஜிகள் மூன்றாவது பெரிய அரசியல் சக்தியாக வளர்ந்துள்ளனர். கடந்த நவம்பர் மாதத்தில் தேசிய சமூக இயக்கம் எனும் பெயர் கொண்ட இனவெறி நாஜிக் கட்சியினர் பீட்டர்ஸ்பர்க் நகரில் முதல் மாநாட்டை நடத்தியுள்ளனர். 2000 பேருக்கு மேற்பட்ட ரகசிய குண்டர் படையை அவர்கள் கட்டியமைத்துள்ளனர்.

''பாம்யாட்'' எனப்படும் ரஷிய தேசிய இனவெறிக் கட்சியும், தாராளவாத ஜனநாயக கட்சியும் நவீன நாஜி சித்தாந்தத்தையே கொண்டுள்ளன. ரஷிய அதிபர் தேர்தலில் யேல்ட்சினுக்கு எதிராக இக்கட்சிகளின் சார்பில் நிறுத்தப்பட்ட ஜிரினோவ்ஸ்கி 8% வாக்குகள் பெற்றுள்ளார். குறிப்பாக, நகர்ப்புற உதிரிப் பாட்டாளி வர்க்கத்தினர் மத்தியில் நவீன நாஜிகளுக்கு செல்வாக்கு உள்ளது. இக்கட்சிகள் பகிரங்கமாகவே இட்லரை வழிபடுகின்றன. ரஷியாவுக்கு ஒரு இட்லர் இல்லாமல் போனதால்தான் ரஷியா பின்தங்கி விட்டது என்று கூறும் இவர்கள் மாஸ்கோவுக்குப் பதிலாக பீட்டர்ஸ்பர்க் நகரத்தை தலைநகராக்கக் கோருகிறார்கள். ஸ்லாவிய பூர்வகுடி இனத்தவர்கள்தான் ரஷியாவில் இருக்க வேண்டும்; பெண்களுக்கு சுதந்திரம் - உரிமைகள் தரவே கூடாது. மாற்று இனத்தவரை மணக்கும் பெண்களை சுட்டுக் கொல்ல வேண்டும். யூதர்களை இஸ்ரேலுக்குத் துரத்த வேண்டும். காட்டுமிராண்டி இனங்களை ரஷியாவில் அனுமதிக்கக் கூடாது முதலான திட்டங்களால் ரஷியாவைப் புனிதப்படுத்தப் போவதாக இவர்கள் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

நிறவெறியாட்டம் கோரத்தாண்டவமாடும் தென்னாப்பிரிக்காவில் ஏற்கனவே ஏ.டபிள்யூ.பி. (A.W.B.) என்ற பெயரில் இயங்கி வரும் நவீன நாஜிகள் இப்போது புதிய வேகத்துடன் தமது பலத்தைப் பெருக்கிக்கொண்டு கருப்பின மக்களை நரவேட்டையாடி வருகின்றனர். ''அதிபர் டி கிளார்க் கருப்பின மக்களுக்கு சலுகை என்ற பெயரில் அதிகாரத்தையே தாரைவார்த்துக் கொடுத்து விட்டார். இனிமேலும் இதை அனுமதிக்க முடியாது'' என்று வெள்ளை நிறவெறி போயர்கள் எச்சரிக்கின்றனர். இந்நூற்றாண்டின் துவக்கத்தில் மஜூபா, மாகெர்ஸ் போண்டைன் நகர்களில் கறுப்பின மக்களை துடிக்கத் துடிக்கக் கொன்றொழித்ததைப் போல மீண்டும் ஒரு ரத்த ஆறு விரைவில் உருவாக்கப்படும்; வெள்ளையர் பிராந்தியங்களில் கறுப்பின அடிமைகளுக்கு இடமில்லை; கறுப்பர்கள் ஒருக்காலும் ஆப்பிரிக்காவை ஆளமுடியாது என்று கொக்கரிக்கிறார் நவீன நாஜிக் கட்சியின் தலைவரான யூஜின் டெர்ரிபிளான்க். கறுப்பர்கள் மட்டுமல்ல; கறுப்பர்களைத் திருமணம் செய்யும் வெள்ளையர்களும் எங்கள் எதிரிகள்; தூய்மையான வெள்ளை போயர்கள்தான் ஆளத் தகுதி படைத்தவர்கள் என்று கூறும் நவீன நாஜிகள் ஏறத்தாழ 70,000-க்கும் மேற்பட்டோரைக் கொண்ட வலுவான குண்டர் படையை கட்டியமைத்



இனவெறி கலாச்சாரம்: மொட்டையடித்துக் கொண்டு தனது ''மணிபர்ஸ்''சுக்குள் சுவஸ்திக் சின்னத்துடன் இட்லர் படத்தை வைத்து பூஜிக்கும் நவீன நாஜி.

ஜனநாயகத் தொட்டிலாக வர்ணிக்கப்படும் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் கூட இத்தகைய நவீன நாஜிக் குழுக்களின் அட்டகாசங்கள் அண்மைக்காலமாக தீவிரமடைந்து வருகிறது. இந்திய, இலங்கை பெண்கள் தமது பாரம்பரிய வழக்கப்படி சேலை கட்டினாலோ, பொட்டு வைத்துக் கொண்டாலோ நவீன நாஜிகள் மிருகத்தனமாக தாக்குகின்றனர். பொட்டு அழிப்பவர்கள் என்ற பெயரும் இவர்களுக்கு உண்டு. அமெரிக்காவிலுள்ள கருப்பின மக்கள் மீது இவர்கள் நடத்திய கொலை வெறியாட்டங்களுக்கு அளவேயில்லை. ''கூகுக்ஸ் கிளான்'' எனப்படும் நவீன நாஜிகளின் அமைப்பு இன்று அமெரிக்காவின் 7 மாகாணங்களில் பயங்கரவாதப் பயிற்சிப் பள்ளிகள் நடத்துமளவுக்கு வேர்விட்டுப் பரவியுள்ளது.

பெருகிவரும் நவீன நாஜிகளின் ஆதிக்கமும் அட்டூழியங்களும் மேலைநாடுகளில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு மட்டுமல்ல, உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் நாடுகளுக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாகும். தீராத அரசியல் - பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகளுக்கு அதிலிருந்து தற்காலிகமாக தப்பித்துக்கொள்ள இன்று அவர்களுக்கு இனவெறி மிக அவசியமாகி விட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கும், விலையேற்றம், வரிச் சுமைக்கு காரணமே அகதிகளாக வந்த ஏழைநாட்டு மக்கள்தான் என்று வீண்பழி சுமத்தி, தமது நாட்டு மக்களின் வெறுப்பையும் ஆத்திரத்தையும் திசை திருப்பி விடுகின்றனர். ஏகாதிபத்திய வாதிகளின் சித்தத்தை நவீன நாஜிகள் நடைமுறையில் செயல்படுத்துகின்றனர்.

மேலும் ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஜனநாயகத்தை விட பாசிச ஆட்சி முறையே இன்றைய தேவையாக உள்ளது. உள்நாட்டில் போராடும் மக்களை ஒடுக்கவும், ஏழை நாடுகளை மறு காலனியாக்கிச் சுரண்டி

மும் இனவெறியும் இன்று அவர்களுக்கு அவசியமாகி விட்டது. எல்லைகளைத் தகர்த்து ஐரோப்பிய பொருளாதாரக் குழும (ECC) நாடுகள் ஐக்கியப்படுவதற்கு பொருளாதார நிலைமைகள் மட்டும் காரணமல்ல; வெள்ளை இன வெறியும் மேலாதிக்க வெறியுமே முக்கிய காரணம். ரஷியாவில் மூன்று குடியரசுகளின் சுதந்திர காமன்வெல்த் அமைக்கப்பட்டது கூட ஸ்லாவிய பூர்வகுடிகளின் இனவெறி அடிப்படையில்தான். ஏகாதிபத்திய நாடுகளின் ஆளும் வர்க்கக் கட்சிகள் நவீன நாஜிகளுக்கு நேற்றுவரை மறைமுகமாக ஆதரவு கொடுத்தது போய், இன்று பகிரங்கமாகவே ஆதரிக்கத் தொடங்கி விட்டன. தேர்தல் வெற்றியைச் சாதிக்கவும், தமது சமூக அடிப்படையை விரிவு படுத்திக் கொள்ளவும் நவீன நாஜிக் குழுக்கள் இன்று அவர்களுக்கு இன்றியமையாத இளைய பங்காளிகளாகி விட்டனர்.

எனவே, ஒடுக்கப்பட்ட உலக மக்களுக்கு புதிய அச்சுறுத்தலாகி விட்ட நவீன நாஜிகளையும் அவர்களின் எஜமானர்களான ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்துப் போராடுவது இன்றைய கட்டாயமாகி விட்டது. அண்மையில் ஜெர்மனியில் நவீன நாஜிகளுக்கு எதிராகவும் அகதிகளைத் திருப்பியனுப்பும் அரசின் கொள்கைகளுக்கு எதிராகவும் ஜெர்மானிய மக்களும் அகதிகளாக வந்த ஏழை நாடுகளின் மக்களும் ஐக்கியப்பட்டு மிகப்பெரிய கண்டன ஊர்வலம் - ஆர்ப்பாட்டம் - கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். இத்தகைய முன்முயற்சியுடைய இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வதன் மூலமே நவீன நாஜிகளை தனிமைப்படுத்த முடியும். அரை நூற்றாண்டுக்கு முன்பு அகிலத்திலிருந்து அடித்து விரட்டப்பட்ட பாசிசம் மீண்டும் வெற்றி பெறுமா, அல்லது புரட்சிகர ஜனநாயகம் வெற்றி பெறுமா என்பது ஒடுக்கப்பட்ட உலக மக்களின் ஐக்கியத்தையும், போராட்டத்தையும் பொருத்தே உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

காங்கிரசு-பாகிஸ்தான்-இரண்டாவது வங்கப் பிரிவினை:

# காங்கிரசுக்காரர்களே பிரிவினைவாதிகள்

***1947-இல் மத அடிப்படையில் இந்தியா-பாகிஸ்தான் என்று துண்டாட காங்கிரசும் பிரிட்டிஷாரும் செய்த சூழ்ச்சிகளை சென்ற இதழில் அம்பலப்படுத்தினார், தோழர் சுனிதி குமார் கோஷ். அதன் தொடர்ச்சியாக, இந்து வெறியர்களுடனும் இந்து தரகுப் பெருமுதலாளிகளுடனும் கள்ளக்கூட்டு சேர்ந்து கொண்டு வங்கத்தை துண்டாடிய காங்கிரசின் சதியை இப்பகுதியில் தொகுத்தளிக்கிறார்.***

'கொடூரமான கல்கத்தா கொலைகளுக்கு வெகுகாலத்துக்கு முன்பே ஐக்கிய வங்கத்தின் தலைவிதி தீர்மானிக்கப்பட்டு விட்டது. 'பிரிட்டிஷ் ராஜ்ஜிய'த்தின் ஒரே வாரிசாகக் காங்கிரசை அங்கீகரிக்கக் கோருவதை ஏற்காத பட்சத்தில் இந்து வங்கத்தையும் இந்து, சீக்கியப் பஞ்சாபையும் காங்கிரசுக்குப் பங்கு போட்டுத் தர வேண்டும் என்று காந்தி, நேரு, பட்டேல், ராஜகோபாலச்சாரி, பிர்லா ஆகிய அனைவருமே கோரினர். பஞ்சாப் மற்றும் வங்கம் பிளவுபடாதவரை சமரசம் செய்துகொள்ளவே மறுத்து விட்டனர். பாதிக்கப்பட்ட சமரசம் செய்துகொள்ளவே மறுத்து விட்டனர். பாதிக்கப்பட்ட பல பத்து லட்சம் மக்களது விருப்பங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான கருத்துக் கணிப்போ, வாக்கெடுப்போ கிடையாது. அதற்கு மாறாக மக்கள் ஏற்கனவே தெரிவித்த விருப்பம் மீறப்படுவதாக இருந்தது.

பாகிஸ்தான் என்கிற கோரிக்கையை எதிர்த்து காங்கிரசுத் தலைவர்கள் வாக்கெடுப்பைக் கோரியபோது அது முஸ்லீம் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்கள் அல்லது துணை மாவட்டங்கள் ஆகிய பகுதிகளோடு மட்டுமே இருக்க வேண்டும்; மாநிலங்கள் அளவினதாக இருக்கக்கூடாது; அந்தப் பகுதிகளின் மக்கள் பாகிஸ்தானை விரும்புகிறார்களா, இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதாக மட்டுமே இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.[41]

அசாம் மற்றும் பீகார் மாநிலங்களில் தொடர்ச்சியான பகுதிகளில் வங்காளி மொழி பேசும் மக்கள் தவிர, வங்காளம் மட்டும் ஆறுகோடி மக்கள் தொகை கொண்டது. பஞ்சாபின் குறுநில மன்னர் ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் தவிர பஞ்சாபில் மட்டும் மூன்றுகோடி மக்கள் தொகை இருந்தது. வங்கம் மற்றும் பஞ்சாப் முழுவதிலும் வாழும் இம்மக்களிடையே அவர்கள் தமது தாய்பூமியின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொண்டு தனியாகவே இருக்க விரும்புகிறார்களா, இல்லையா என்கிற - பல்வேறு வாய்ப்புகளில் இந்தக் குறிப்பிட்ட வாய்ப்பு பற்றிய - கருத்தின் மீது வாக்கெடுப்பு நடத்துவதற்குக் காங்கிரசுத் தலைவர்கள் உடன்படவே இல்லை. பிரிட்டிஷ் ராஜ்ஜியத்துக்கு உரிமை கோரி நிற்கும் எதிராளிகளிடையே பங்கிட்டுக் கொள்வதற்கான கால்நடைகளைக் கொண்ட விற்பனை நிலையங்களாகவே வங்கமும் பஞ்சாபும் கருதப்பட்டன.

மந்திரிசபைத் தூதுக்குழுத் திட்டப் பிரசுரத்தில் வங்கக் கவர்னர் பர்ரோஸ் குறிப்பிட்டவாறு, ''வங்கம் பிளவுக்குள்ளாகாது என்பதில் இந்து-முஸ்லீம் ஆகிய இரு தரப்புமே நிம்மதியடைந்தார்கள்.'' லீக் மந்திரிகள் ''பாகிஸ்தானைப் பெறுவதில் மிகவும் அக்கறையுள்ளவர்கள் அல்ல'' என்று அவர் கருதினார்.[42]

கல்கத்தாவிலும் நவகாளியிலும் படுகொலைகள் நடந்தபிறகு, 1947 மார்ச்சில் பஞ்சாப், வங்கப் பிரிவினையைக் காங்கிரசுத் தலைவர்கள் வெளிப்படையாகவே கோரிய பிறகு வங்கப் பிரிவினையைத் தடுக்கவும், பிளவுபடாத ஒரு ஐக்கிய வங்க அரசை நிர்மாணிக்கவும் மிச்ச இந்தியாவுடனான அதன் உறவைத் தீர்மானிக்கவும் ஒரு இயக்கம் துவங்கப்பட்டது; காங்கிரசு காரியக் கமிட்டியில் இருந்து விலகிய சரத் சந்திர போஸ், வங்க முஸ்லீம் லீக் பொதுச் செயலாளர் அப்துல் ஹஷீம், வங்கப் பிரதமர் எச்.எஸ்.சுராவர்த்தி, காங்கிரசு சட்டப் பேரவைத் தலைவர் கே.எஸ்.ராய் ஆகியோர் அந்த இயக்கத்தின் தலைவர்களுள் அடங்குவர். இந்த இயக்கத்துக்கு இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும், பார்வார்டு பிளாக்கும் தமது ஆதரவைத் தெரிவித்தன. வங்கத்தில் வாழும் முஸ்லீம்கள் அல்லாத பெரும்பான்மை மக்களோ, மேற்கு வங்கத்தினரோ அம்மாநிலப் பிரிவினைக்குப் பின்னே கிடையாது என்று கூறினர். தாழ்த்தப்பட்ட மக்களிடையே செல்வாக்கு மிக்கதொரு தலைவராக இருந்த ஜே.என்.மண்டல், அதன் மூலம் வங்கப் பிரிவினைக்குத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களது எதிர்ப்பை உறுதிப்படுத்தினார். இது ஒரு கருத்துக் கணிப்பின் மூலமும் நிரூபிக்கப்படமுடியும் என்று அவர் சொன்னார்.[43]

மே 20-க்குள் காங்கிரசு மற்றும் லீக்கின் சில பிரபலத் தலைவர்களிடையே ஒரு உத்தேச உடன்பாடு ஏற்பட்டது. ஒரு சுதந்திர வங்க அரசை உருவாக்குவது; திருத்தப்பட்ட வடிவிலான கூட்டு வாக்காளர் மற்றும் வயது வந்தோர் வாக்கெடுப்பு அடிப்படையிலான அரசியல் நிர்ணய சபை கொண்ட ஒரு புதிய அரசு; லீக் அமைச்சரவையைக் கலைப்பது; உடனடியாகவே ஒரு கூட்டு மந்திரிசபை அமைப்பது ஆகியவற்றை உள்ளடக்கிய அம்சங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.[44]

சியாமா பிரசாத் முகர்ஜி தலைமையிலான இந்து மகாசபை மற்றும் வங்கத்தின் அதிகாரபூர்வ காங்கிரசுக் கமிட்டி ஆகியவற்றினால் மேற்கண்டதற்குப் போட்டியாக ஒரு இயக்கம் துவங்கப்பட்டது; அது வங்கத்தை பிளவுபடுத்தி மேற்கு வங்கத்தை இந்தியாவில் சேர்க்கக் கோரியது. இதை அடைவதற்காகப் போராடும் கமிட்டி ஒன்றை கல்கத்தாவைத் தளமாகக் கொண்ட இந்துப் பெருமுதலாளிகளான பி.எம்.பிர்லா, பத்திரிதாஸ் கோயங்கா, பி.எல்.ஜலான், என்.ஆர்.சர்க்

**1947 இந்திய-பாகிஸ்தான் பிரிவினை: இந்து வெறியர்களும் காங்கிரசும் மூட்டிய வகுப்புவாத தீயில் சிக்கிப் பலியாகும் உழைக்கும் மக்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

# தோழர் நடராஜனுக்கு வீரவணக்கம்!



**தோழர் நடராஜன்**
30 ஆண்டுகளுக்கு முந்தைய படம்)

அதிராம்பட்டினம் விவசாயிகள் விடுதலை முன்னணியில் செயல்பட்டு வந்த மூத்த தோழர் எம்.நடராஜன் (வயது 66) கடந்த 2.2.'92 அன்று இயற்கை எய்தினார். நீண்டகாலமாக கம்யூனிச இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்த தோழர் நடராஜன், சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வி.வி.மு.-வில் வந்து இணைந்தார். முதன் முதலாக வி.வி.மு.-வின் பொதுக்கூட்டத்தை செவியுற்ற போது உண்மையான புரட்சியாளர்களின் குரலைக் கேட்டதாகக் கூறினார்.

தோழர் நடராஜன் வி.வி.மு.-வுடன் தொடர்பு கொண்ட காலத்திலிருந்து நடைமுறை வேலைகளில் ஒரு இளைஞருக்கு உரிய துடிப்புடன் செயல்பட்டார். நான்கு ஆண்டுகளுக்கு முன் காவிரி நீர் பிரச்சினைக்காக தஞ்சையில் நடந்த சைக்கிள் பேரணியில் அதிரையிலிருந்தே சைக்கிளில் வந்து கலந்து கொண்டு புரட்சிகர இளைஞர்களுக்கு உத்வேகமூட்டினார். இரண்டு ஆண்டுகளுக்கு முன் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் தோழருக்கு ஒரு கால் செயல்படாத நிலை ஏற்பட்டது. வீட்டில் சம்பாதிக்கும் ஒரே நபர் இவர்தான். இவரும் முடங்கிய பிறகு இவரது மனைவி தன்னம்பிக்கையுடன் உழைத்து இவருக்கு உறுதுணையாக இருந்தார். போதுமான சத்துணவோ, வைத்திய வசதியோ பெறமுடியாத நிலையிலும் தனது கஷ்டங்களை யாரிடமும் முறையிடுவதோ, குறைபட்டுக் கொள்வதோ தோழரிடம் காணமுடியாத ஒன்றாகவே இருந்தது.

உடல் ஊனமுற்ற போதிலும் தினந்தோறும் தோழர்களை சந்தித்தும், தம்மால் இயன்ற அமைப்பு வேலைகளில் கலந்து கொண்டதும் தோழரின் புரட்சிகர உணர்விற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது. அண்மையில் திடீர் என உடல் நலம் குன்றிய தோழரை மருத்துவமனையில் சேர்த்தும் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. தோழர் நம்மிடையே இல்லாமல் போனாலும் அவரது துடிப்புமிக்க செயல்பாடும், உத்வேகமும் நமது புரட்சிகர உணர்விலே கலந்து நிற்கிறது. தோழருக்கு சிவப்பஞ்சலியை உரித்தாக்குவோம்!

---

கார் ஆகியோரை உள்ளடக்கியதாக அமைத்தனர்.[45] அவர்கள் பட்டேல், நேரு, ராஜேந்திரப் பிரசாத் போன்ற காங்கிரசுத் தலைவர்களின் ஆதரவைப் பெற்றவர்கள். இந்தியா பிளவுபடுத்தப் படாவிட்டாலும் கூட வங்கத்தைப் பிரிக்க வேண்டுமென்று 1947 மார்ச்சில் பிர்லாவின் இந்துஸ்தான் டைம்ஸ், நேரு, சியாமா பிரசாத் ஆகியோர் வலியுறுத்தினர்.[46] இருந்தாலும் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டால் வங்க இந்துக்களிலும் கூட பெரும்பான்மையினர் பிரிவினைக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று காந்திக்கு எழுதும்போது சரத்போஸ் குறிப்பிட்டது சரியாகவே இருந்தது.[47]

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தமது யுத்த தந்திர மற்றும் பொருளாதார நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு பிளவுபடாத இந்தியாவை இரண்டாவது உலகப் போர் முடிவடைந்தபோது விரும்பினர். ஆனால் பிரிவினை தவிர்க்க முடியாததாகி விட்டபோது, காங்கிரசு, லீக் தலைவர்கள் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில் இந்துஸ்தான், பாகிஸ்தான், வங்கம் ஆகிய மூன்று அரசுகளை உருவாக்குவதற்கு ஆதரவாக இருந்தார்கள்.[48] இந்த யோசனையை ஜின்னாவும் லியாகத் அலியும் வரவேற்றார்கள்.[49] ஆனால் இதை நேருவும் பட்டேலும் கடுமையாக எதிர்த்தார்கள். அதிகார மாற்றத்துக்கான தேதி கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன் தள்ள[illegible]டது. வங்கம், சில்கெட் மாவட்டம் மற்றும் பஞ்சாபின் உயிருள்ள சதையை வரைபடத்தின் அடிப்படையில் நான்கில் இருந்து ஐந்து வாரத்துக்குள் வியத்தகு முறையில் அறுத்தெறிந்து விட்டார், இந்தியாவுக்கே புது மனுசனான பிரிட்டிஷ் எல்லைக் கமிஷன் தலைவர். மிகப் பெருந்திரளான மக்கள் மீது இடியென வரும் தவிர்க்க வியலாத துயரங்கள் குறித்து எச்சரிக்கப்பட்டும் தலைவர்கள் அக்கறையின்றி இருந்தார்கள். பல பத்துலட்சம் மக்களது உயிருக்கு ஆபத்தாகவும், அவர்களது வீடுகள் தகர்க்கப்படவும் கூடிய தலைவிதி குறித்து அத்த தலைவர்கள் மீமிகையாகப் பாராமுகமாக இருந்தது வியப்பை ஏற்படுத்தும்.

''நீங்கள் விரும்பியதைப் போலவே விசயங்கள் நடந்துள்ளன..... வங்கப் பிரிவினைப் பிரச்சினையைக் கூட உங்களால் தீர்க்க முடிந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று 1947 ஜூன் 5-இல் நாட்டுப் பிரிவினை இறுதியாக்கப்பட்ட போது பி.எம். பர்லா பட்டேலுக்குப் பதில் எழுது கையில் வாழ்த்துத் தெரிவித்தார். மேற்கு வங்க சட்டப்பேரவை காங்கிரசு கட்சித் தலைவர் பதவியை அதாவது மேற்கு வங்கத்தின் புதிய அரசுக்கு முதல் மந்திரியாக இந்து மகாசபைத் தலைவரான (பின்னால் பாரதீய ஜனசங்கத்தை நிறுவிய ஆர்.எஸ்.எஸ்.காரன்) சியாமா பிரசாத் முகர்ஜிக்குத் தரும்படி பி.எம்.பிர்லா பட்டேலிடம் சிபாரிசு செய்தார்.[51] (முடிந்தது)

**(நன்றி:ஃப்ரண்டியர், நவம் 16, 1991)**

41. காங்கிரஸ் காரியக் கமிட்டி LXXVIII பக்.126; நேரு தொகுப்பு நூல்கள் XV பக்.49-50.

42. அதிகார மாற்றம் VII பக்.675.

43. ஸ்டேட்ஸ்மேன் (கல்கத்தா) 23 ஏப்ரல், 1947.

44. சரத் சந்திரபோஸ் ''இரண்டு வங்கத்தின் கதி'' (கல்கத்தா '70) பக்.57; அதிகார மாற்றம் X பக்.903-6, 926 பார்க்க: மேற்படி நூல்கள், பக்.849-50; அபுல் ஹஷிம், 'உள்ளாய்வில்' (டாக்கா, 1974); பவானிசென் 'வங்கவங்காளம் ஓ பாகிஸ்தான்' இணைப்பு, கல்கத்தா, மே 1947.

45. ஸ்டேட்ஸ்மேன் 1, மே 1947

46. 'இந்துஸ்தான் டைம்ஸ்' தலையங்கம் (பார்க்க: ஈ.டபிள்யூ. ஆர்.லம்பி. 'இந்திய அதிகார மாற்றம்' 1945-47 (லண்டன் 1954) பக்.150; அதிகார மாற்றம் IV பக்.99; மேற்படி X பக்.519, 555; நேரு தொகுப்புநூல் 2-வது வரிசை 11 பக் 68, 148; துர்காதாஸ் (தொகுத்தது) 'சர்தார் பட்டேலின் கடிதங்கள்' (அகமதாபாத்) IV பக்.40.

47. காந்திக்கு சரத்போஸ் கடிதம், 14 ஜூன் 1947. பியாரிலால், 'மகாத்மா காந்தி: கடைசி கட்டம்' II (அகமதாபாத் 1958) 188; அபுல்ஹஷீம் முன்சொன்னது பக்.161.

48. அதிகார மாற்றம் IX பக்.842, XI 2, 158; பார்க்க: மேற்படி X பக். 497-8, 834, 876-8.

49. மேற்படி நூல் X, 452, 479, 554-5, 657.

50. மேற்படி நூல் X850, 1040; துர்காதாஸ் முன்சொன்ன நூல் IV பக். 39, 41, 46.

51. பட்டேலுக்கு பி.எம்.பிர்லா கடிதம் 5, ஜூன் 1947; மேற்படி நூல் IV பக்.56.

---

''புதிய ஜனநாயகம்'' பற்றிய
அறிக்கை
4-வது பாரம் (8-ம் பிரிவுப்படி)


| | |
|---|---|
| 1. வெளியிடும் இடம் | - சென்னை |
| 2. வெளியிடும் காலம் | - மாதம் இருமுறை |
| 3. அச்சிடுபவர் | - இரா.சண்முகராசு |
| தேசிய இனம் | - தமிழர் |
| முகவரி | - எழில் பிரிண்டர்ஸ், 321, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை-600 024. |
| 4. வெளியிடுபவர் | - இரா.சண்முகராசு |
| தேசிய இனம் | - தமிழர் |
| முகவரி | - 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600 015. |
| 5. ஆசிரியர் | - இரா.சண்முகராசு |
| தேசிய இனம் | - தமிழர் |
| முகவரி | - 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600 015. |
| 6. உரிமையாளர் | - இரா.சண்முகராசு |
| தேசிய இனம் | - தமிழர் |
| முகவரி | - 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600 015. |

இரா.சண்முகராசு ஆகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

1-3-1992. (ஒப்பம்) இரா.சண்முகராசு
வெளியிடுபவர்.

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

இவ்வாண்டு 'குடியரசு' தினத்தன்று காஷ்மீர் மாநிலம் முழுவதும் ஊர டங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. அதே போல வடகிழக்கே மணிப்பூர் மாநிலத்தில் போராளிகள் ஊரடங்கு உத்திரவு அறிவித்து இந்திய ஆட்சியாளர்களுக்கு தமது எதிர்ப் பைத் தெரிவித்தனர். மணிப்பூர் மக்களின் தாய்மொழியான ''மைத்தி'' மொழி இன்று வரை அம்மாநிலத்தின் ஆட்சிமொழியாக் இல்லை. இந்தியும் ஆங்கிலமும்தான் ஆட்சி மொழியாகத் திணிக்கப்பட்டுள்ளது. இந்திய ஆட்சிமொழி சட்டத்தின் எட்டாவது பிரி வில் தமது மொழியையும் சேர்க்கக் கோரி நீண்டகாலமாகப் போராடிவரும் மக்கள் கடந்த இரு மாதங்களாக தமது போராட்டத் தைத் தீவிரப்படுத்தியுள்ளனர். மொழி உரி மைக்கான கமிட்டியும், மணிப்பூர் மாணவர் சங்கமும் இப்போராட்டத்தை தலைமை யேற்று நடத்துகின்றன. கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து இந்தி சினிமா, பத்திரிகை கள், வீடியோ காசெட்டுகள் விற்பனை செய்ய மாணவர்கள் தடை விதித்ததோடு, பொது இடங்களில் அவற்றை எரித்து ஆர்ப் பாட்டங்களை நடத்தி வருகின்றனர். பள்ளி-கல்லூரி ஆசிரியர்களும், கல்வியாளர்க ளும், மாணவர்களும் ஆயிரக்கணக்கில் திரண்டு கடந்த ஜனவரி 6-ஆம் தேதியன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத் தினர். ஆனாலும் டெல்லியில் உள்ள இந்தி வெறி ஆட்சியாளர்கள் அசைந்து கொடுக் காததால், இவ்வாண்டு 'குடியரசு' தினத் தைப் புறக்கணிக்கும் போராட்டத்தை மேற் கொண்டனர். ஜனவரி 26 அன்று பலத்த பாதுகாப்புடன் தலைமைச் செயலகத்தில் மட்டுமே மூவர்ணக்கொடி பறந்தது. மற்ற இடங்களில் கருப்பு கொடிகளே காணப்பட் டன. இனவெறி - இந்திவெறி ஆட்சியாளர் கள் அதிகாரத்தில் நீடிக்கும்வரை மணிப்பூ ரில் கருப்புக்கொடிதான் அவர்களின் தேசி யக் கொடியாக பறக்க முடியும்.

உ.பி.யில் பள்ளி-கல்லூரி மாண வர்கள் தேர்வுகளின் போது காப்பியடித்து எழுதுவது என்பது தீவிரமாகி விட்டது. ஆனாலும் மனப்பாட கல்வி முறையை மாற்றியமைக்க ஆட்சியாளர்கள் முன்வரவில்லை. மாறாக காப்பியடித்து எழுதும் மாணவர்களுக்கு ரூ.2000 அபராத மும், ஓராண்டு சிறைத் தண்டனையும் விதிக் கப்படும் என்று எச்சரித்துள்ளனர். இதை எதிர்த்து, காப்பியடித்து எழுதி ஆயிரக்க ணக்கில் சிறை செல்லும் போராட்டத்தை நடத்தப்போவதாக மாணவர்கள் அறிவித் துள்ளனர்.

சிவசங்கரி, கீதா பென்னட் முதலான நாவலாசிரியைகளால், சொர்க்கபுரியா கச் சித்தரிக்கப்படும் அமெரிக்காவில், இவ் வாண்டில் மட்டும் 3 லட்சம் தொழிலாளர் கள் வேலையிலிருந்து விரட்டப்பட உள் ளார்கள். அமெரிக்காவில் நிலவும் கடுமை யான பொருளாதார நெருக்கடி - பணவீக் கம் - உற்பத்தி தேக்கத்தின் விளைவாக பெரும்பாலான ஆலைகள் மூடுவிழாவுக் குக் காத்திருக்கின்றன. அமெரிக்காவின் மிகப் பெரிய ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவ னம் தனது 25 கிளைகளில் தொழிலாளர்க ளுக்கு லே-ஆஃப் விட்டுள்ளது. 1995-க்குள் 74000 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யப் போவதாக அறிவித் துள்ளது.

இதேபோல 9 பெரிய நிறுவனங் கள் நடப்பு ஆண்டில் 20% தொழிலாளர் களை வேலையிலிருந்து விரட்டப் போவ தாக அறிவித்துள்ளது. லே-ஆப் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் ''தய வுசெய்து உதவி செய்யுங்கள்!'' என்று கெள ரவமாகப் பிச்சை எடுக்கின்றனர். டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ''வேலை' கொடு! அல்லது நிவாரணம் கொடு!'' என்று அண்மையில் ஆர்ப்பாட்ட மும் நடத்தியுள்ளனர். ''பத்தாண்டுகளுக்கு முன்பு எங்கள் நாட்டை சொர்க்கபுரியாகக் கருதினோம்; இன்று அது பகற்கனவாகி விட் டது'' என்கிறார் அமெரிக்காவின் பிரபல பொருளாதார நிபுணர் டேவிட் வைஸ்.

ஆட்குறைப்பு-ஆலை மூடலை எதிர்த்து அமெரிக்கத் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்.



படிப்பகம்

கடந்த ஆண்டின் மக்கட்தொகை கணக் குப்படி, இனவெறி பிடித்த இஸ்ரேலின் பிறப்பு விகிதத்தை விட, அது ஆக்கிரமித் துக் கொண்டுள்ள மேலைக்கரை, காசா முனை ஆகிய பகுதிகளில் வாழும் பாலஸ்தீ னியர்களின் பிறப்பு விகிதம் அதிகமாக உள் ளது. 41 லட்சம் யூதர்களைக் கொண்ட இஸ் ரேலில் கடந்த ஆண்டில் 71,000 குழந்தை கள் பிறந்துள்ளன. 9 லட்சம் பாலஸ்தீனியர் கள் வசிக்கும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் 30,000 குழந்தைகள் பிறந்துள்ளன. அதா வது யூதர்களின் பிறப்பு விகிதத்தை ஒப்பி டும்போது பாலஸ்தீனியர்களின் பிறப்பு விகிதம் இருமடங்காக உள்ளது. வெளிநாடு களில் வாழும் யூதர்களை இஸ்ரேலுக்கு இறக்குமதி செய்த போதிலும் யூத மக்கட் தொகை பெருகவில்லையே என்று இனவெ றியர்கள் இப்போது கவலைப்படுகின்றனர். எனவே அதிக குழந்தைகள் பெறும் யூத தாய்மார்களுக்குப் பரிசளித்தும், காமவெறி யூட்டும் கலாச்சாரத்தை இளைஞர்களி டையே பரப்பியும் வருகின்றனர். அதே போல இங்கே சிறுபான்மை முஸ்லிம்களால் ஆபத்து என்று இந்துக்களிடம் கருத்தடை செய்யாதீர்கள் என இந்து வெறியர்கள் தீவிர பிரச்சாரம் செய்கின்றனர். உலகெங்கும் இன வெறி - மதவெறியர்கள் ஒரே மாதிரியாகத் தான் சிந்திக்கிறார்கள்; செயல்படுகிறார்கள்

''உங்களுக்கெல்லாம் எதுக்கடி சேலை?'' என்று பலர் முன்னிலை யில் பெண்களை மானபங்கப்படுத்தினான் அந்த எம்.எல்.ஏ. அவனது அடியாட்கள் அக்கிரம மக்களை மிருகத்தனமாக தாக்கி னர். போலீசார் இக்கொடுஞ் செயலை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். உ.பி.யின் ஷாஜகான்பூர் தொகுதியைச் சேர்ந்த பாரதீய ஜனதா எம்.எல்.ஏ.வான கே.கே.சிங் என்பவன்தான் இந்த அக்கிரமத் தைச் செய்தவன். அவனது உறவினர் ஒரு வர் வீட்டில் திருடர்கள் கொள்ளையடித்தார் கள். அக்கொள்ளையர்கள் அஹியாபூர் கிரா மத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் தனது அடியாட்களுடன் வந்து கடந்த ஜனவரி 15-ந் தேதியன்று இவ் வாறு அட்டூழியம் செய்தான். அதன் பிறகு, கொள்ளையர்கள் அருகிலுள்ள கிராமங்க ளில் மறைந்திருக்கலாம் என்று பிரகலாத்பூர், மொகபட்பூர் ஆகிய கிராம மக்களைத் தாக் கினான். பெண்களை மானபங்கப்படுத்திய தோடு குடிசைகளுக்கும் தீ வைத்தான். இச் செய்தியை அறிந்து எதிர்கட்சியினர் இக்கி ராமங்களுக்குச் செல்லத் தொடங்கியதும், ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் கிராம மக்களை அச்சுறுத்தி எதையும் பேசவிடாமல் செய்த னர். உ.பி.யில் இப்படித் தொடர்கிறது பார தீய ஜனதாவின் ராம ராச்சிய ஆட்சி.

www.padippakam.com

ரஷியாவில் நிலவும் கடுமையான விலையேற்றத்தையும் உணவுப் பஞ்சத்தையும் எதிர்த்து அந்நாட்டு மக்கள் தொடர்ச்சியாக கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். இதைக் கண்டு அரண்டு போயுள்ள ஆளும் எல்ட்சின் கும்பல், போராட்டங்களை ஒடுக்க புதிய உத்தியை வகுத்துள்ளது. இதன்படி, ஊர்வலமோ ஆர்ப்பாட்டமோ நடத்த வேண்டுமானால் போலீஸ் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து சீர்குலைவு ஆகியவற்றுக்கு ஆகும் செலவை ஆர்ப்பாட்டம் நடத்தும் அமைப்பினர் அரசுக்கு செலுத்த வேண்டும் என்று உத்திரவு போட்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் எல்ட்சினை ''முற்போக்கான ஜனநாயகவாதி'' என்று புகழ்ந்து தள்ளுவதற்கான காரணம் இப்போது புரிகிறதல்லவா? அவர்களின் அகராதியில் கண்டனப் பேரணி நடத்தக்கூட கட்டணம் வசூலிப்பதுதான் ஜனநாயகம்!



பேரணி நடத்த கட்டணமா? - ரஷிய முதலாளித்துவ சர்வாதிகாரிகளை எதிர்த்து செங்கொடி ஏந்தி தோழர் லெனினது உருவப்படங்களுடன் மாஸ்கோவில் ஆர்ப்பாட்டம்.

மே.வங்கத்தின் சிலிகுரி மாவட்டத்திலுள்ள ஹாடுவிதா கிராமத்தில் ஆதிவாசிகளுக்குச் சொந்தமான நிலத்தைக் கைப்பற்றி, தமது எஸ்டேட்டுகளை விரிவுபடுத்த டங்கன், கங்காராம் முதலான தேயிலைத் தோட்ட முதலாளிகள் நீண்ட காலமாக முயற்சித்து வந்தனர். இதை அப்பகுதிவாழ் மக்களும், அங்கு செயல்படும் கனுசன்யால் தலைமையிலான 'நக்சல்பாரி' குழுவும் எதிர்த்து வந்தன. எனவே, தேயிலைத் தோட்ட முதலாளிகள் ஆளும் கட்சியான 'மார்க்சிஸ்ட்' தலைவர்களான அஜித் சர்க்கார், பிரேன்போஸ் ஆகியோரை விலைபேசி ஏஜெண்டுகளாக்கிக் கொண்டனர். அதைத் தொடர்ந்து கடந்த செப்டம்பரில் 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் அக்கிராமத்தைச் சூறையாடி 60 குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்தியதோடு இருவரைக் கொன்றனர். 'மார்க்சிஸ்டு'களின் அட்டூழியத்தை அம்பலப்படுத்தி போராடிய காரணத்திற்காக கனுசன்யால் குழுவைச் சேர்ந்த முகம்மது கமால் என்கிற முன்னணியாளர் கடந்த ஜனவரி 24 அன்று 'மார்க்சிஸ்டு' குண்டர்களால் அடித்துக் கொல்லப்பட்டார். இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய ஆதிவாசிகள் மீது 'மார்க்சிஸ்டு' குண்டர்களும் போலீசாரும் மிருகத்தனமான தாக்குதல் நடத்தி 20 பேரின் மண்டையைப் பிளந்தனர். ரௌடித்தனத்தையே அரசியலாகவும், குண்டர்களையே அணிகளாகவும் கொண்டு முதலாளிகளின் ஏஜெண்டுகளாகச் சீரழிந்துவிட்ட போலிக் கம்யூனிஸ்டுகளிடம் உழைக்கும் மக்கள் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

டெல்லி குப்பைத் தொட்டி ஒன்றில் தேசியக்கொடி சுற்றப்பட்ட ஒரு பொட்டலத்தை கடந்த ஜனவரி மாதத்தில் போலீசார் கண்டெடுத்தனர். அதில் டெல்லி புறநகர் குற்றவியல் நீதிமன்ற அலுவலகத்தின் குப்பைக் காகிதங்கள் இருந்தன. உடனே தேசியக் கொடியை அவமதித்ததாகக் கூறி புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது. விசாரணையில், தேசியக் கொடியை எலி கடித்து சேதப்படுத்தி விட்டதால் அதை குப்பையில் போட்டு விட்டதாக சம்பந்தப்பட்ட அலுவலக ஊழியர்கள் கூறினர். எனவே ஊழியர்கள் செய்தது குற்றமல்ல; எலி செய்ததுதான் குற்றம் என்று புலனாய்வுத் துறையினர் தீர்மானித்து, விசாரணையை இப்போது முடித்து விட்டார்களாம்! அந்த தைரியத்தில் கர்நாடகா கோலாரிலுள்ள அரசு கருவூலத்தில் தேசியக் கொடியை தலைகீழாகப் பறக்கவிட்டு இவ்வாண்டு 'குடியரசு' தினத்தை கோலாகலமாகக் கொண்டாடியுள்ளனர். நல்ல முன்னேற்றம்தான்!

முகமது ரபீக் மிர் என்ற 19 வயது இளைஞர் காஷ்மீரைச் சேர்ந்தவர். கடந்த ஆண்டில், தீவிரவாதி என்று முத்திரை குத்தி இந்திய ராணுவம் அவரையும் 10 இளைஞர்களையும் கைது செய்து, விசாரணை ஏதுமின்றி ஜோத்பூரிலுள்ள சிறையில் அடைத்தது. ஒருமாதத்திற்குப் பிறகு, திடீரென ஒருநாள் ராணுவம் அவரது கண்களைக் கட்டி ஒரு மருத்துவமனைக்கு கொண்டு சென்றது. அங்கு ரகசியமான முறையில் அவரது சிறுநீரகம் திருடப்பட்டது. வயிற்றில் கட்டி இருந்ததால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாக கூறிய இராணுவம், ஒரு வாரத்திற்குப் பிறகு மயங்கிய நிலையிலிருந்த அவரை காஷ்மீரின் உதாம்பூரிலுள்ள ஒரு பூங்காவில் போட்டுவிட்டுச் சென்றது. உதாம்பூர் மக்களின் உதவியால் வீடுவந்து சேர்ந்த முகமது ரபீக், அறுவை சிகிச்சையால் ஏற்பட்ட காயங்கள் ஆறாத நிலையில் மருத்துவமனைக்குச் சென்ற போதுதான் சிறுநீரகம் திருடப்பட்ட விஷயம் அவருக்குத் தெரிந்தது. இக்கொடுஞ்செயலை அறிந்து ஆத்திரமடைந்த காஷ்மீர் மக்களும், மருத்துவர்களும் இராணுவ தலைமையகத்தின் அருகே கடந்த ஜனவரி 21-ந் தேதியன்று மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். காஷ்மீரைச் சேர்ந்த மனித உரிமைக்குழு ஒன்று இராணுவத்தின் அக்கிரமத்துக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. இரண்டாம் உலகப்போரின் போது அப்பாவி யூதர்களைப் பிடித்து உடல் உறுப்புகளை அறுத்து ஆராய்ச்சி நடத்தியது இட்லரின் பாசிச இராணுவம். அதன் வாரிசு நாங்கள்தான் என்பதை நிரூபித்து வருகிறது இந்திய கொலைகார இராணுவம்!



ஈராக்கை சுடுகாடாக்கி, வளைகுடாப் போரில் வெற்றி பெற்று ஓராண்டு நிறைவெய்தியதை ஏகாதிபத்தியவாதிகள் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வரும் வேளையில், பிரிட்டனில் மிகுந்த வரவேற்புடன் நடந்து வரும் ஒரு நாடகம் அவர்களின் வயிற்றைக் கலக்குகிறது. திரீவர் கிரிபிஃத் எனும் இடதுசாரி நாடக ஆசிரியர் தயாரித்துள்ள வளைகுடாப் போரைப் பற்றிய இந்நாடகத்தில் ஈராக்கின் இளங்குழந்தைகள் பள்ளியாக இயங்கிய ஒரு மசூதி மீது ஏகாதிபத்திய கூட்டணிப் படைகள் ஏவுகணை வீசித் தாக்குவதையும், இடிபாடுகளின் நடுவே தமது குழந்தைகளைத் தேடி தாய்மார்கள் புலம்புவதையும் உணர்ச்சி பூர்வமாகச் சித்தரித்துள்ளார். இந்நாடகத்தைப் பார்க்கும் பிரிட்டிஷ் மக்கள் கூட்டணிப் படைகளின் மீது வெறுப்பை உமிழ்கின்றனர். ''நேற்று நாங்கள் மாவீரர்களாக வரவேற்கப்பட்டோம்; இன்று எங்களை கொலைகாரர்கள் என்று மக்கள் ஏசுகிறார்கள். எங்களை அவமதிக்கும் இந்நாடகத்தைத் தடைசெய்ய வேண்டும்'' என்று பிரிட்டிஷ் ராணுவம் கூப்பாடு போடுகிறது. என்ன செய்வது? வினை விதைத்தால் அதை அறுவடை செய்துதானே ஆகவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com




**ஒகளூர் : வன்னிய சாதிவெறிக்கு 240 குடிசைகள் சாம்பல்**

"ஆட்சிக்கு வந்தால் தாழ்த்தப்பட்டவரையே முதல்வராக்குவோம்" என்பது பாட்டாளி மக்கள் கட்சியின் தேர்தல் வாக்குறுதி. ஆமாம்; தாழ்த்தப்பட்டவர்களின் ஓட்டுக்களை பொறுக்குவதற்காக மட்டுமே கொடுத்த வாக்குறுதி. தாழ்த்தப்பட்டவர்களின் குடிசை கொளுத்தும் வன்னிய சாதிவெறி நிலப்பிரபுக்கள் இருக்கும்வரை ராமதாசு தலைகீழாக நின்றாலும் வன்னியர் - தாழ்த்தப்பட்டவர் ஒற்றுமை வெறும் பகற்கனவே. தாழ்த்தப்பட்டவர்களின் மீது வன்னிய சாதி வெறியர்களது தாக்குதலுக்கு மலையென ஆதாரம் உயர்ந்து நிற்கையில் அதை பாட்டாளி மக்கள் கட்சியினரால் மறைக்கவும் முடியாது; பா.ம.க.வின் அதிகாரபூர்வமற்ற 'கொள்கை பரப்புச் செயலாள'ரான எழுத்தாளர் பிரபஞ்சனால் மழுப்பி மறுவிளக்கமும் கொடுக்க முடியாது.

பெரம்பலூர் அருகே ஒகளூர் எனும் சிறிய கிராமத்தில். தாழ்த்தப்பட்டவர்களும் வன்னியர்களும் சம அளவில் உள்ளனர். ஒகளூரில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக உள்ள காலனியோ மழை பெய்தால் குளமாகிவிடும். வீடுகளுக்குள்ளும் தண்ணீர் புகுந்துவிடும். இத்தகைய தாழ்வான பகுதியில் கட்டப்பட்ட 600 வீடுகளில் 1500 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதிலும் முன்பு ஒருமுறை தீ விபத்தில் 300 வீடுகள் எரிந்து நாசமாயின. அதை கட்டிக் கொடுக்கக்கோரி பல முறை அம்மக்கள் முறையிட்டும் அதிகாரிகள் அதற்கான முயற்சி கூட செய்யவில்லை. எனவே ஒகளூர் மெயின் ரோட்டிற்கு அருகே இப்போதுள்ள கிழக்கு தோப்பில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா போட்டு கொடுத்த நிலத்தில் குடிசை போட்டு வாழ்ந்தனர். ஏற்கனவே இக்கிராமத்தைச் சேர்ந்த சில வன்னிய சாதி வெறியர்களால் தூண்டப்பட்டு தோப்பிலிருந்த 36 குடிசைகள் எரிக்கப்பட்டன. மேலும் தாழ்த்தப்பட்டவர்கள் வீடுகட்டாமல் தடுப்பதற்காக அந்த இடத்தில் மருத்துவமனை ஒன்று கட்டப்படபோவதாக பொய் காரணம் காட்டி அவர்கள் கோர்ட்டில் தடையும் வாங்கினர்.

இந்நிலையில் கடந்த நவம்பர் மாதம் பெய்த மழை-வெள்ளத்தால் காலனியில் குடியிருக்கவே முடியாமல் போனது. 3 நாட்களாகியும் வெள்ளம் வடியாததால் காலனி மக்கள் ஒகளூர் மெயின் ரோட்டில் உள்ள தங்கள் பட்டா நிலத்திற்கு மேற்குபுறம் தரிசாக கிடக்கும் கோயில் நிலத்தில் குடிசைகளை கட்டிக் கொண்டனர். சொந்த ஊரிலேயே இருக்க இடமில்லாமல் துன்பப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை மேட்டுப்பகுதியான கோவில் நிலத்தில் குடிசை போட்டுக் கொள்ளுமாறு கூறி சில வன்னிய உழைக்கும் மக்கள்தான் உதவி செய்தனர். ஆனால், அந்த மேற்கு தோப்பு - கோவில் நிலம், கிட்டத்தட்ட 25 வருடகாலமாக ஒரே குடும்பத்தினரால் சட்டத்திற்கு புறம்பாக குத்தகை எடுத்து உரிமை கொண்டாடப்பட்டு வருகிறது. அரியபுத்திரன் என்ற வன்னிய நிலப்பிரபு தனது பெயர், மகன் ராஜாமணி மற்றும் மனைவி பெயர்களில் மாற்றி மாற்றி குத்தகை எடுத்து அந்நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இந்நிலத்தில் குடிசை போட்டுக் கொண்டதைக் கண்டு பொறுமிய இவர், 17.1.92 அன்று நடந்த ஒரு சிறு சச்சரவைக் காரணம் காட்டி வன்னியர்களைத் திரட்டி பெண்களை முன்னிறுத்தி குடிசைகளைக் கொளுத்தினார். "மெயின் ரோட்டிற்கு அருகில் தாழ்த்தப்பட்டவர்கள் இருந்தால் நமக்கு மரியாதை குறைவாக இருக்கும். நிலம் போனாலும் பரவாயில்லை; ஒண்ணுமில்லாத பறப் பசங்க அங்க குடியிருக்கக்கூடாது. குடிசைகளை கொளுத்துங்கடா" என வன்னிய சாதிவெறியர்களைத் தூண்டிவிட்டார், நிலப்பிரபு அரியபுத்திரன். குடிசைகளை பிரித்து மட்டும் போட்டால் போதும் என சிலர் கூறியபோதும் "கொளுத்துங்கடா" என வன்னிய வெறியர்கள் குடிசைகளை கொளுத்தினர்.

இதில் பாட்டாளி மக்கள் கட்சியின் மகளிரணி தலைவி விசாலாட்சி, அவரது கணவர் ஆதிமூலம், பாட்டாளி மக்கள் கட்சியின் செயலர் ராஜா ஆகியோரே நிலப்பிரபு ராஜாமணிக்கு வலதுகையாக முக்கிய பங்கு வகித்தனர்.

வன்னிய சாதிவெறியர்கள் குடிசைக்கு தீ வைக்கும்போது அங்கு குறைந்த அளவில் இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் தடுத்தபோதும் காவலுக்கென வந்த போலீசு அவர்களை அடித்து விரட்டியது. சாதிவெறியர்களுக்கு சாதகமாகவே அப்பாவிகளான தாழ்த்தப்பட்டவர்களில் சிலரை கைது செய்தது. கலவரத்தை அடக்க வந்த போலீசாருக்கு வன்னியர்களது இருப்பிடங்களில்தான் உணவு தயாரிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்களின் காலனியில் காவலிருந்த போலீசாருக்கும் சாப்பாடு வன்னியர் வீட்டிலிருந்துதான் வந்தது. இப்போலீசார்களுக்கு நிலப்பிரபுக்கள் வீட்டில் சாராயமும், பெண்களும்கூட பரிமாறப்பட்டது. ஒகளூர் சிறுவர்கள் கூட இதைச் சொல்லி காறி உமிழ்ந்தனர்.

அ.தி.மு.க.வினரோ, கோயில் நிலங்களை தாழ்த்தப்பட்டவர்கள் ஆக்கிரமிப்பதாக வதந்தியைப் பரப்பி உயர்சாதியினருக்காகவே செயல்பட்டனர். இச் சாதிவெறித் தாக்குதலை முன்னின்று நடத்திய பா.ம.க.வினர், அத்தோப்பு நிலத்திலிருந்து தாழ்த்தப்பட்டவர்களை விரட்டுவதற்காக அ.தி.மு.க.வினருடன் கள்ளக்கூட்டு சேர்ந்து கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் உண்ணாவிரத போராட்டமும் நடத்தினர். ஒகளூரை சொந்த ஊராக கொண்ட தாழ்த்தப்பட்டவரான அசோக்ராஜ் என்கிற எம்.பி.யோ, உயர் சாதியினரிடத்தில் பொறுக்கித் தின்றுவிட்டு பிரச்சினையை கண்டுகொள்ளாமல் சொந்த இன மக்களுக்கே துரோகமிழைத்தார். இப்பகுதியிலிருக்கும் 'அம்பேத்கார் மக்கள் முன்னணி' என்ற அமைப்பினரோ இக்கொடுமைக்கு எதிராக போராட முன்வராமல் அதிகாரிகளுக்கு மனுபோட்டு காத்து கிடப்பதோடு மக்களையே குறைகூறித் திரிகிறார்கள்.

இச் சம்பவத்திற்குப் பிறகு பலமுறை அதிகாரிகளும், கலெக்டரும் வந்து போயினர். எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைந்தபட்ச நிவாரணமும் கூட வழங்காமல் வன்னிய சாதி வெறியர்களுக்குச் சாதகமாக தாழ்த்தப்பட்ட மக்களை பழைய காலனி பகுதிக்கே குடிபோகும்படி உபதேசித்துவிட்டு போனார்கள். மிரட்டவும் செய்தார்கள். இன்று குடிசைகளை இழந்த தாழ்த்தப்பட்ட மக்கள் ஒகளூர் ரோட்டோரம் வேட்டியையும் சேலையையும் கூரையாக்கிக் கொண்டு பனியிலும் வெயிலிலும் கிடந்து அவதிப்படுகிறார்கள். இம்மக்களின் அவலநிலையையும் அவர்கள் கூனிக்குறுகி கிடப்பதையும் பார்த்தால் எவருக்கும் நெஞ்சு பதைபதைக்கும். திருச்சி - புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் இம்மக்களுக்கு ஆதரவாக பிரசுரம் ஒன்று வெளியிட்டதோடு தொடர்ந்து நீதிவேண்டி போராடவும் முற்பட்டுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com

## காவிரிநீர் பிரச்சினை:
# மீண்டும் துரோகம்

எதிர்பார்த்தபடியே, காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையைப் பலியிட பார்ப்பன-பாசிச கும்பல் துணிந்து விட்டது. 17 ஆண்டுகள் நடந்த பேச்சு வார்த்தைகள் - இழுத்தடிப்புகள் பயனற்றுப்போன நிலையில், நடுவர் நீதிமன்றத் தீர்ப்பின்படி கிடைத்துள்ள இடைக்கால நிவாரணத்தையும் பறிகொடுத்துவிட ஜெயா கும்பல் முடிவு செய்துவிட்டது.

கர்நாடகாவில் வாழும் தமிழர்களுக்கு எதிராக கொலை-கொள்ளை-கற்பழிப்பு சூறையாடல் முதலான கன்னட இனவெறித் தாக்குதல் தீவிரமாக இருந்தபோது, எந்தவிதமான பேச்சு வார்த்தையும் கிடையாது என்று கொக்கரித்த ஜெயலலிதா, அடுத்த ஒரு மாதத்திற்குள் மத்திய அரசின் நிர்பந்தித்துக்குப் பணிந்து போனார். பிரதமர் நரசிம்மராவின் ஏற்பாட்டின்படி, காவிரி பாயும் 4 மாநில முதல்வர்கள் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த தன்னிச்சையாக ஜெயா ஒப்புக் கொண்டார். பிறகு அதை நியாயப்படுத்த தமிழகத்தில் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டினார். 'நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பில் கிடைத்துள்ள 205 டி.எம்.சி. நீரை தமிழகத்துக்கு வழங்காதவரை எந்தவிதமான பேச்சுவார்த்தையும் கிடையாது என்பதுதான் முந்தைய சர்வ கட்சிகூட்டத்தின் முடிவு; அம்முடிவுக்கு எதிராக தன்னிச்சையாக -ஜெயா செயல்படுவதாக' குற்றம் சாட்டி தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகள் இக்கூட்டத்தைப் புறக்கணித்தன. ஆனாலும் துரோகிகளும் எதிரிகளும் அளித்த தைரியத்தில், கடந்த மாதம் 17-ம் தேதியன்று நரசிம்மராவ் முன்னிலையில் நடந்த 4 மாநில முதல்வர்கள் கூட்டத்தில் ஜெயா கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் கர்நாடக முதல்வர் பங்காரப்பா 4 அம்சத் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதாக நடுவர் மன்றத்திடம் தெரிவித்துவிட வேண்டும்; தமிழகத்திற்கு 185 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே தரமுடியும்; கர்நாடகத்தில் காவிரிப் பாசனப் பகுதிகளை விரிவுபடுத்தக் கூடாது முதலானவற்றை முன் வைத்தார். இதுபற்றி இக்கூட்டத்தில் என்ன முடிவாகியது என்று இதுவரை அறிவிக்கப்படவில்லை. இடைக்கால நிவாரணமாகிய 205 டி.எம்.சி. நீரை தமிழகத்துக்கு வழங்கக்கூட ஜெயா இக்கூட்டத்தில் வலியுறுத்தவில்லை. எதை ஏற்பது, எதை நிராகரிப்பது என்கிற எந்த முடிவுமின்றி, மீண்டும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பது என்கிற ஈரோட்டமான முடிவைக் கொண்ட கூட்டறிக்கையில் ஜெயா கையெழுத்திட்டார்.

அதேசமயம், இக்கூட்டத்திற்குப் பிறகு 'பேச்சுவார்த்தை தோல்வியடைந்து விட்டது; உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுப்பேன்' என்று சவடால் அடித்தார். காவிரிநீர் விவகாரத்தில் ஓட்டுப் பொறுக்கிகளின் துரோகத்தனத்துக்கு எதிராக தமிழக மக்களிடையே நிலவும் அதிருப்தி காரணமாகவே இப்படியொரு சவடால் அவருக்கு அவசியமாக உள்ளது.

பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்றால், கடந்த 17 ஆண்டுகளில் 27 முறை நடந்த பேச்சு வார்த்தையின் விளைவு என்ன? அவை பயனற்றும் போனது மட்டுமல்ல; ஒவ்வொரு ஆண்டும் தமிழக விவசாயிகள் காவிரி நீருக்காக ஏங்கி வயல்கள் வறண்டு போனதுதான் நடந்தது. இந்த நிலையை நீட்டிக்க வைக்கவே மீண்டும் பேச்சுவார்த்தை என்ற பெயரில் இழுத்தடிப்பது, தமிழக உரிமையை மறுப்பது என்பதுதான் மத்திய அரசு மற்றும் கர்நாடகத்தின் நோக்கமாக உள்ளது.

எனவே தமிழக உரிமைக்கான போராட்டத்தை உழைக்கும் மக்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அப்போராட்டம் கர்நாடகத்துக்கும் மத்திய அரசுக்கும் எதிரானதாக மட்டுமின்றி தமிழக உரிமையைத் தாரைவார்த்துவிட்ட பார்ப்பன-பாசிச ஜெயா கும்பலுக்கு எதிரானதாகவும் இருக்க வேண்டும்.

## தேசத் துரோகிகளை எதிர்த்தால் கைது!

[redacted]

கோவையில் மக்கள் கலை இலக்கிய கழகத் தோழர்கள் மணிவண்ணன், ஆனந்தன் ஆகிய இருவர் 5.2.'92 அன்று இரவு கைது செய்யப்பட்டனர். நாடு மறு அடகு வைக்கப்படுவதை அறிவித்தும் காங்கிரசின் பொருளாதாரக் கொள்கையை அம்பலப்படுத்தியும் சுவரெழுத்து எழுதிக் கொண்டிருந்த போது கைது செய்த சிங்காநல்லூர் போலீசு, வன்முறையைத் தூண்டியதாக கிரிமினல் குற்றப்பிரிவு 151-ன் கீழ் பொய் வழக்கு போட்டுள்ளது.

கோவையில் ம.க.இ.க. கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாக பல்வேறு இயக்கங்கள்-பிரச்சாரங்கள் மேற்கொண்டது மக்களிடையே வரவேற்பை பெற்றது. ஆந்திரப் புரட்சியாளர்கள் மீது ஒடுக்குமுறை மற்றும் சரணடைவு அவதூறு ஆகியவற்றை கண்டித்தும், 24.1.'92 அன்று பா.ஜ. கட்சியின் இந்துவெறி யாத்திரையைக் கண்டித்தும், சுவரொட்டி நகரெங்கும் ஒட்டப்பட்டது. இனவெறியன் பங்காரப்பாவின் கொடும்பாவி அரசு அனுமதியின்றி கொளுத்தப்பட்டது. பங்காரப்பா கொடும்பாவியை கொளுத்திய திருச்சி தோழர்கள் மீது தடியடி தாக்குதல் நடத்திய போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட தொடர்ச்சியான செயல்பாட்டினால் பகுதி மக்களிடையே நன்மதிப்பை பெற்ற ம.க.இ.க. மீது இத்தகைய அடக்குமுறை-கைது மூலம் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தி விடலாம் என்று கனவு காண்கிறது போலீசு. ஆனால் பார்ப்பன-பாசிச ஜெயலலிதா ஆட்சியில் புது தெம்பு கிடைத்தது போல் வரைமுறையற்று அடக்கு முறையை கட்டவிழ்த்துவிடும் போலீசுதான் மேலும் மேலும் மக்களிடமிருந்து அன்னியப்பட்டு நிற்கிறது.

- ம.க.இ.க., கோவை.

## 'தடா'வை எதிர்த்து போர்க்கொடி!

தமிழகத்தையே ஆட்டிப்படைக்கும் 'தடா' சட்டத்தின் கீழ் மக்கள் கலை இலக்கிய கழகத்தின் நெய்வேலி பகுதியைச் சேர்ந்த 5 தோழர்களை சிறையில் அடைத்து சித்திரவதை செய்தது, பாசிச ஜெயா அரசு.

120 நாட்களாகியும், சிறப்பு நீதி மன்றத்திற்கு இவர்களை கொண்டு வராதது சட்டவிரோதமானது; எனவே உடனே ஐவரையும் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி ஹேபியஸ் கார்பஸ் ரிட் மனு ஒன்றை சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம். 17.2.'92 அன்று விசாரணைக்கு வரும் நிலையில், அவசர அவசரமாக 10.2.92 அன்று சிறப்பு நீதி மன்றத்திற்கு ஐவரும் கொண்டுவரப் பட்டனர். பின்பு ஜாமின் மனு மறுக்கப்பட்டது; மேலும் 60 நாட்களுக்கு ரிமாண்ட் நீட்டிப்பு செய்யப்பட்டது. எமது வழக்கறிஞர்கள் கே.வி.சண்முகநாதன், எஸ்.ராமு ஆகியோர் சிறப்பாக வாதாடி சட்ட விரோதமான தண்டனை நீட்டிப்பை ரத்துச் செய்யக் கோரினர். குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் வாதத்தை குப்பையில் போட்டுவிட்டு, அரசு வழக்கறிஞர் கூறியதை அப்படியே தமது தீர்ப்பில் வாந்தி எடுத்துள்ளது சிறப்பு நீதிமன்றம்.

இதற்கிடையில் 10.2.92 அன்று 'தடா' கைதிகளாக தோழர்கள் செந்தில், குமார், பாலு, ரமேஷ், கிருஷ்ணா, அருள்மணி ஆகியோரை நீதிமன்றத்திற்கு அழைத்து வரும் பொழுதும், பிறகு ரிமாண்ட் நீட்டிப்புக்குப் பின் சென்னை மத்தியச் சிறைக்குக் கொண்டு சென்ற பொழுதும், வழிநெடுக தோழர்கள் "தடா" சட்டத்தை எதிர்த்து முழக்கமிட்டனர்.

கைதான 5 தோழர்கள் மட்டுமின்றி 25-க்கும் மேற்பட்ட சென்னை பகுதி ம.க.இ.க. தோழர்களும் முழக்கமிட்டவாறு ஊர்வலம் போல சிறைச்சாலை வரை சென்றனர். வழிநெடுகிலும் ஆயிரக் கணக்கான மக்கள் "போஸ்டர் ஒட்டியதற்கு 'தடா' வா? என்னய்யா அநியாயம்" என்று வெறுப்பை வெளிப்படுத்தினர்.

படிப்பகம்

www.padippakam.com



# பாவம் தீர மகாமக நரபலி



குடந்தை கும்பகோணம் மகாமகம் விழாவில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு நேர்ந்துள்ள கோரச் சாவுகள் ஏதோ தற்செயலாக நடந்துவிட்ட விபத்து என்கிற கட்டுக்கதையை பார்ப்பன-பாசிச கும்பலின் ஒரு பிரிவே கூட நம்பவில்லை; ஏற்கவில்லை. மகாமகம் விழா வைத்து அரசியல் ஆதாயம் தேடுவதில் பார்ப்பன மதவெறி விசுவ இந்து பரிஷத்தும், பாரதீய ஜனதாவும் பார்ப்பன-பாசிச ஜெயா கும்பலுடன் பங்குக்கு வந்துவிட்டன. இவ்விரு பிரிவுளுக்கும் இடையே நடந்த 'பங்காளி'ச் சண்டையில், மகாமகம் சாவுகள் பற்றி பத்திரிகையாளர்களும் நேரில் பார்த்த பிற சாட்சிகளும் கூறும் பல உண்மைகள் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றன. இல்லை என்றால் இந்தச் சாவுகளுக்குக் காரணம் கருணாநிதி சதி என்றும் புலிகளின் கைவரிசை என்றும் அவர்கள் பழிபோட்டிருப்பார்கள்.

விசுவ இந்து பரிஷத்தினர் தங்கியிருந்த பாங்கூர் தர்மசாலை சத்திரத்தின் மாடம் இடிந்து விழுந்து பலர் மாண்டதாக பார்ப்பன-பாசிச ஜெயா கும்பல் முதலில் புளுகியது; ஆனால் அந்த மாடம் இன்னமும் அப்படியே இருக்கிறது. இடிந்து விழவில்லை. வி.இ.ப. அச்சத்திரத்துக்குள் இருந்து சோற்றுப் பொட்டலங்களை வெளியே வீசினர்; அதற்காக ஏற்பட்ட நெரிசலில் தூண்களும், இரும்புக் கம்பிச் சுவர்களும் சரிந்து, அதிலே சிக்கிச் சிலர் மாண்டதும் ஒரு பகுதி உண்மைதான்.

ஆனால் பெரும்பான்மையான சாவுகள் மகாமகம் குளத்துக்குள்ளும் கரையிலும் பலமுறை போலீசார் நடத்திய தடியடியின் காரணமாக, நெரிசலில் சிக்கி, கீழே விழுந்து மிதிபட்டதால் நேர்ந்தவைதாம். ஜெயலலிதாவின் பாதுகாப்பிற்காக, லட்சக்கணக்கோனோர் நிறைந்த கூட்டத்தை கட்டுப்படுத்தும் திறமையின்மையால் போலீசார் தடியடிகள் நடத்தினர் என்பதும்கூட உண்மை அல்ல.

பார்ப்பன-பாசிச ஜெயாவின் குரூரமான வக்கிரமான விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் கருவியாகவே போலீசு செயல்பட்டிருக்கிறது; இந்த வகையில், அவரே இந்தச் சாவுகளுக்குக் காரணமும் பொறுப்புமாகும். ஜெயலலிதா தனது பாவங்களைக் கழிக்கவும், அரசியல் எதிரிகளை நிர்மூலமாக்கவும், தனது ஆட்சிக்கும் உயிருக்கும் பங்கம் ஏற்படாமல் காக்கவும் தான் பிறந்த நட்சத்திரத்தில் வரும் மகாமகத்தில் பூசைகள், யாகங்கள் நடத்தி புனித நீராடுவது என்று முடிவு செய்தார். மகாமகத்தை அரசியல் ஆதாயத்திற்காக மட்டும் நடத்தவில்லை. ஆளும் ராணிக்குரிய ஏகபோகமாக்கிக் கொள்ள முனைந்தார். தான் நீராடும் முன்பு யாருமே குளத்தில் இறங்கக் கூடாது: பல லட்சம்பேர் கூடினாலும் இரண்டு குளக்கரைகளை தனக்கு ஒதுக்கிவிட வேண்டும்; தனது பாதுகாப்பும் தேவையுமே நாட்டில் பிரதானமானது என உத்திரவுகள் போட்டார்.

இதன் விளைவாகவே, இப்படிப்பட்ட பூசைகள், யாகங்களில் நரபலி தருவது இந்துமதச் சடங்குகளில் ஒன்றுதான் என்கிற முறையில் மகாமகம் சாவுகள் 'நரபலி'யாக முடிந்தன.




படிப்பகம்